# உள்ளே...


| | |
|---|---|
| தமிழ்நாட்டிலேயே இப்படி ஒரு நிலையா?<br>- *தலையங்கம்* | 4 |
| ஜாதிகளின் பட்டியலே இந்து மதம் என்ற அம்பேத்கரின் கருத்தை உறுதிப்படுத்தும் வலங்கை-இடங்கை மோதல்கள்<br>- *செ. கார்கி* | 5 |
| பெரியார் குறித்த அவதூறுகளே என்னை நாடகம் உருவாக்கத் தூண்டியது<br>- *பேராசிரியர் மு. இராமசாமியுடன் நேர்காணல்* | 9 |
| டெல்லியில் 'இராவணனை' எரிக்கும் இராமலீலாவுக்கு எதிர்வினையே சேலத்தில் பெரியார் நடத்திய மாநாடு!<br>- *கொளத்தூர் மணி நேர்காணல்* | 16 |
| கோயிலுக்குள் நுழையும் 'பிராமணர்கள்' இழிகுலத்தார் என விலக்கப்பட்டனர்<br>- *வெ. ஜீவகுமார்* | 20 |
| 'டாம்பாய்' : பெண் விடுதலையின் அடையாளம் | 23 |
| அறிவியலால் விடை காண முடியாத 'அற்புதங்கள்' ஏதும் இல்லை<br>- *எட்வின் பிரபாகரன்* | 25 |
| பெரியார்-காந்தி இணையும் புள்ளி எது?<br>- *ராமச்சந்திர வைத்தியநாத்* | 31 |
| அம்பேத்கரை, தலைவராக ஏற்றார் பெரியார்<br>- *விடுதலை இராசேந்திரன்* | 36 |

நிமிர்வோம்
தடைகளைத் தகர்த்து...

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்
பிப்ரவரி 2020 / ரூ.20
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
கொளத்தூர் மணி
விடுதலை இராசேந்திரன்

வினியோகப் பொறுப்பு
சூலூர் பன்னீர்செல்வம்

இதழ் வடிவமைப்பு
வெல்கின் கணினி

அலுவலக முகவரி
95, டாக்டர் நடேசன் சாலை
அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை 600 004
தொலைபேசி எண்:
044-24980745

அனைத்துத் தொடர்புகளுக்கும்
இரா. உமாபதி
72992 30363
வெ. மனோஜ்
7373684049

# தமிழ்நாட்டிலேயே இப்படி ஒரு நிலையா?

பள்ளிப் படிப்பை முடிக்காமலேயே தமிழ்நாட்டில் படிப்பை உதறும் மாணவர்கள் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில் 100 சதவீதம் அதிகரித்திருக்கிறது என்ற செய்தி தமிழகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. மத்திய மனித வளத் துறை அமைச்சர் இரமேஷ் பொக்ரியால் நாடாளுமன்றத்தில் தெரிவித்த தகவலின்படி 9 மற்றும் 10ஆம் வகுப்புகளோடு படிப்பை உதறிய மாணவர்கள் 2017–18இல் 16.2 சதவீதமாக வீழ்ச்சி அடைந்து விட்டது. அதற்கு முந்தைய ஆண்டைவிட இது 100 சதவீதம் அதிகம். 2015–16இல் பள்ளிப் படிப்பை உதறியவர்கள் 8 சதவீதம். வறுமை, பொருளாதார நிலை, குழந்தைகளின் மோசமான சுகாதார நிலை, வீட்டு வேலை போன்ற பிரச்சினைகளே இதற்குக் காரணம் என்று பட்டியலிட்டுள்ள அமைச்சர், மற்றொரு முக்கிய காரணியையும் சுட்டிக்காட்டுகிறார். பெற்றோர்கள் பள்ளிப் படிப்பைத் தாண்டி குழந்தைகளைப் படிக்க வைப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை என்ற அமைச்சரின் கருத்து தமிழ்நாட்டின் சமூக நீதி கொள்கை கட்டமைத்த உணர்வுகளையே நிலைகுலைய வைத்திருக்கிறது என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது.

பள்ளிக்கு குழந்தைகளைக் கொண்டு வருவதற்கு எத்தனையோ திட்டங்களை வகுத்த பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. கிராமந்தோறும் அரசுப் பள்ளி – பகல் உணவு – மதிய உணவுத் திட்டங்கள் – இலவச பாட நூல் – இலவச சீருடை – உதவித் தொகை – மிதிவண்டி – கணிப்பொறி என்ற சமூக நலத் திட்டங்களை உருவாக்கியது மட்டுமல்ல; அத்திட்டங்கள் அனைத்துக் குழந்தைகளையும் சென்றடையக் கூடிய நிர்வாகக் கட்டமைப்பும் உருவாக்கப்பட்டது. பள்ளி இறுதிப் படிப்பு வரை வழங்கப்பட்ட இலவசக் கல்வி, பட்டப் படிப்பு வரை உயர்த்தப்பட்டது. பட்டியலினப் பிரிவு மாணவர்களின் பொறியியல் பட்டப் படிப்புக்கும் இலவசக் கல்விக் கட்டணம் வழங்கப்பட்டது.

ஜாதியமைப்பில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான கல்வியை வழங்கும்போது சமூக்காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சமூகப் பிரச்சினைகளை கல்வியோடு இணைத்துப் பார்த்ததால்தான் தமிழகம் இந்த சாதனைகளை படைக்க முடிந்தது.

சமூகத்தைக் கல்வியிலிருந்து துண்டித்து, அதைத் தொழிலாகவும், அரசு செலவீனமாகவும் பார்த்தார், இராஜகோபாலாச்சாரி. பள்ளிகளை மூடியதும் குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்ததும் அதே கண்ணோட்டத்தில்தான். அதன் காரணமாகவே தமிழர் சமூகம் அவரை புறக்கணித்தது.

இப்போது புதிய கல்வி என்ற பெயரில் குலக்கல்வியின் நவீன வடிவத்தை பார்ப்பன சங்பரிவாரங்கள் திணிக்கின்றன. நீட் தேர்வு வைத்து வடிகட்டுகிறார்கள்; கிராமப்புற மாணவர்கள் தேர்ச்சி பெற முடியாததோடு மட்டுமல்ல; இந்த ஆண்டு மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு விண்ணப்பதாரர்களே, 17 சதவீதம் குறைந்து விட்டார்கள். 5ஆம் வகுப்புக்கும் 8ஆம் வகுப்புக்கும் குழந்தைகளுக்கு பொதுத் தேர்வு என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி மாணவர்களை வடிகட்டும் திட்டத்தை அ.இ.அ.தி.மு.க. ஆட்சி அறிவித்தது.

பார்ப்பனர்கள் ஒரே குரலில் கல்வித் தரத்தை மேம்படுத்திட இந்தத் தேர்வுகள் தேவையானவை என்றார்கள். கல்விக்காக இவர்கள் வைத்திருக்கும் ‘தரம்’ என்ற அளவுகோல்கூட சமூகத்திலிருந்து கல்வியைத் தூண்டித்துப் பார்க்கும் அணுகுமுறைதான். மக்கள் எதிர்ப்புக்குப் பிறகு அ.இ.அ.தி.மு.க. ஆட்சி இத்திட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தாலும் புதிய கல்விக் கொள்கை அமுலுக்கு வரும்போது மீண்டும் அத்திட்டத்தை அமுல்படுத்த மாட்டார்கள் என்பதற்கு உறுதி கூற முடியாது.

‘நடுவண்’ ஆட்சிக்கு அடிபணிந்து தமிழக அரசு நமது செல்வங்களான வளரும் துளிர்களை முளையிலே கிள்ளி எறிந்து கல்விக் கண்ணை குத்திக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலே இந்த நிலையா? நெஞ்சம் பதறுகிறது.

# ஜாதிகளின் பட்டியலே இந்துமதம் என்ற அம்பேத்கரின் கருத்தை உறுதிப்படுத்தும் வலங்கை-இடங்கை மோதல்கள்

**– செ.கார்கி**

*இந்துக்கள் என்ற ஒற்றைச் சொல்லாடலுக்குள் பார்ப்பனர்கள் ஜாதிய ஏற்றத் தாழ்வுகள் அதன் அடிப்படையிலான சமூக ஒடுக்குமுறைகளை முழுமையாக மறைத்து இந்தக் கட்டமைப்பின் வழியாக தங்களின் சமூக மேலாதிக்கத்தை உறுதி செய்து வருகிறார்கள். தமிழ்நாட்டில் 7 நூற்றாண்டு காலம் வரை ஜாதிக் குழுக்குள் வலங்கை - இடங்கை என்று பிரிந்து தங்களுக்குள் மேலாதிக்கத்துக்கான போராட்டங்களை நடத்தி வந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் உண்டு. சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர்கள், நாயக்கர் காலத்தில் இந்த ஜாதி வெறிச் சண்டைகள் தீவிரமாக நடந்துள்ளன. ஆனால் மன்னர்களோ சமூகத்தின் இந்த அவலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் பார்ப்பனர்களுக்கு அடிபணிந்து கோயில்களைக் கட்டுவதிலும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதிலும் படை எடுப்பதிலும், மக்களைச் சுரண்டி வரி வசூலிப்பதிலும் பார்ப்பனர்களைக் கொழுக்க வைப்பதிலுமே கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள். வலங்கை- இடங்கை ஜாதிக் குழுக்கள் மோதி இரத்தம் சிந்திய வரலாறுகளை சுருக்கமாக விளக்குகிறது இக்கட்டுரை*

தமிழ்நாட்டில் பன்னிரெண்டாம் நூற்றாண்டு தொடக்கத்தில் இருந்து 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையும் தமிழ்நாட்டில் வலங்கை இடங்கை சாதி வேறுபாடுகளும், சமத்துவ மறுப்பும் இருந்து வந்துள்ளது. இன்று அது போன்ற பெயரில் அழைக்கப்படவில்லை என்றாலும் அதன் சாராசம்சமான தன்மையில் சாதிய ஏற்றத்தாழ்வானது கடைபிடிக்கப்பட்டுதான் வருகின்றது. ஆனால் இந்த வலங்கை இடங்கை சாதிய பிரிவானது எந்த அடிப்படையில் தோன்றியது என்பதற்கான வலுவான வரலாற்று காரணங்கள் இதுவரை தெளிவாக

கண்டறியப்பட முடியவில்லை. பொதுவாக வலங்கை பிரிவானது இடங்கை பிரிவின் மீது ஆதிக்கம் செய்வதற்கு அடிப்படையாக சாதியக் கட்டமைப்பில் நிலவுடமையே இருந்துள்ளது என்பதை நம்மால் அறியமுடிகின்றது.

வரலாற்று அறிஞர் கே.கே.பிள்ளை அவர்கள் "இடங்கை வரி என்றும் வலங்கை வரி என்றும் வரிகள் விதிக்கப்பட்டு வந்தன. இவ்விரு வகுப்புகளில் சேர்க்கப்பட்டிருந்த தனித்தனி 98 குலத்தினரைப் பற்றிய விளக்கம் ஒன்று அச்சுத தேவராளியரின் கல்வெட்டு ஒன்றில் கொடுக்கப் பட்டுள்ளது. இவ்விரு வகுப்பினரிடையே அடிக்கடி சச்சரவுகள் நேரிட்டன. இரு வகுப் பினரிடையேயும் உயிர்ச் சேதம் நேர்ந்துள்ளது. இத்தகைய வகுப்புக் கலகம் ஒன்று முதலாம் வீரவிருபாட்சன் காலத்தில் மலையம்பட்டில் விளைந்தது. பிறகு அவர்களுக்குள் உடன்படிக்கை யும் ஏற்பட்டது" என்கின்றார். (தமிழக வரலாறும்-மக்களும் பண்பாடும்)

கல்வெட்டு ஆய்வாளரான முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன், "பதிமூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து தமிழ்நாட்டில் இருந்த சாதியினர் எல்லாம் தங்களை இடங்கை, வலங்கை எனப் பிரித்துக்கொண்டனர். இம்முறை சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர்கள், நாயக்கர் போன்ற அரசர்கள் காலத்தில் தொடர்ந்து கி.பி. 1900 வரை இருந்துள்ளது. இதனால் இரு பிரிவினரிடையே உரிமைகள் பற்றியும், உயர்வு தாழ்வு பற்றியும் அடிக்கடி பூசல்களும் மோதல்களும் நிகழ்ந்துள்ளன. இவற்றை பிற்கால கல்வெட்டுகளும் செப்பேடு களும் எடுத்துக்கூறுகின்றன. ஒரு காலகட்டத்தில் இடங்கை பிரிவில் 98 ஜாதிகளும் வலங்கை பிரிவில் 98 ஜாதிகளும் இருந்துள்ளன. மிகவும் பிற்காலத்தில் இடங்கை ஜாதிகள் 6 ஆகவும் வலங்கைப் பிரிவில் 30 ஜாதிகளும் இருந்துள்ளன ஆனால், திருமங்கலத்தில் உள்ள கல்வெட்டோ கோச்சடையவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவரின் பதினான்காம் ஆட்சியாண்டில் (13ஆம் நூற்றாண்டில்) சித்திரை மாதத்தில் ஒருநாள் விருதராஜ பயங்கர வளநாட்டைச் சார்ந்த குறுக்கை நாடு, காளி நாடு, விளத்தூர் நாடு, மாந்துறை நாடு, திருமங்கலநாடு எனப்பெறும் இந்த ஐந்து நாட்டு இடங்கை வலங்கைப் பிரிவினராகிய சாதியினர் எல்லாம் திருமங்கலம் கோயிலில் கூடி இனி சந்திரன் சூரியன் உள்ள அளவும் தங்களுக்குள் இடங்கை வலங்கைப் பிரிவுகளை மேற்கொள்ள மாட்டோம் என்றும், யாரேனும் கொண்டாடுவார்களாயின் அவர்கள் ஐந்து நாட்டிற்கும் அநியாயம் செய்தவர்களாகக் கருதப்படுவர் என்றும் முடிவு எடுத்து அம்முடிவினை அரசனின் ஆணைபெற்று இங்கு கல்வெட்டாகப் பொறித்துள்ளனர். சோழர்களின் ஆட்சி முடிவு பெற்ற பின்பு சோழநாடு பாண்டியர் வசம் இருந்தது. அப்போது இக்கல்வெட்டு பொறிக்கப்பெற்றதாகும். சாதி மோதல்களைத் தவிர்க்க கோயிலில் வைக்கப் பெற்ற இக்கல்வெட்டு வரலாற்றுச் சிறப்புடைய ஒன்றாகும்" என்று விவரிக்கிறார்.

நிலவுடைமை வகுப்பினரும் அவர்கள் தங்களோடு இணைத்துக்கொண்ட சாதியினரும் வலங்கைப் பிரிவினர் என்றும், வணிகக் குழுவினரும் அவர்கள் தங்களோடு சேர்த்துக் கொண்ட சாதியினரும் இடங்கைப் பிரிவினர் என்றும் தமது கட்டுரை ஒன்றில் விவரிக்கிறார் வரலாற்று ஆய்வாளர் நா.வானமாமலை.

மேலும் அவர், "வலங்கைப் பிரிவினர் கை வலுத்திருக்கும்போது, மன்னன் அவர்களோடு சேர்ந்து கொண்டு இடங்கைப் பிரிவினரை அடக்குவான். இடங்கைப் பிரிவினர் கை வலுத்திருக்கும்போது, மன்னன் அவர்களுக்குச் சில சலுகைகளை அளிப்பான்"என்கிறார்.

வலங்கை சாதிகள் என்று எடுத்துக் கொண்டால் அதில் கொங்கு கவுண்டர், ஒக்க சண்டி பண்டாரம், கொங்கு உடையார், மரமேறி நாடார், கொங்கு வண்ணார், கொங்கு நாவிதர், கொங்கு பறையர் போன்றவர்களும் இடங்கை பிரிவு என்று எடுத்துக்கொண்டால் சோலி ஆசாரி, கோமுட்டி செட்டியார், கொங்கு ஆசாரி, கைக்கோளர், வடுக நாயக்கர், வடுக வண்ணார், பாண்டிய நாவிதர், கூடைக்குறவர், மொரசு மாதாரி போன்றவர்களும் இருந்துள்ளனர். இதில் இடங்கை சாதிகள் என்பவர்கள் எப்போதும் வலங்கை சாதிகளுக்கு கட்டுப்பட்டவர்களாகவும், பெரும்பாலான நேரங்களில் அவர்களின் பொருளாதாரத்தை சார்ந்து வாழ்ந்தவர்களாகவே இருந்துள்ளனர்.

வலங்கை பிரிவைச் சேர்ந்த வளமிக்க கவுண்டர்கள் திறந்தவெளி முற்றம், விசாலமான பல அறைகள் கொண்ட வீடுகளில் வாழ்கின்றனர், மேலும் சமையல் செய்தல், சுத்தப்படுத்துதல் ஆகிய வீட்டு வேலைகளை செய்வதற்கு பணி யாளர்கள் இருப்பார்கள். மற்ற சாதிகளுடனான தங்களின் முரண்பாடுகளை வெளிப்படையாக தீர்த்துக்கொள்ளும் பழக்கம் உடையவர்கள்.

இப்படி வலங்கை பிரிவு சாதிகளுக்கு ஊழியம் செய்யும் சாதிகள் மற்ற சாதிகளை மேலாண்மை செய்யவோ ஏன் நெஞ்சி நிமிர்த்தி நடக்ககூட அனுமதிக்கப்படுவதில்லை. இப்படித் தங்களை வேறுபடுத்திக்காட்டிக்கொள்ள வலங்கைப் பிரிவு சாதி பெண்கள் தங்கள் புடவைகளின் முந்தானையை இடது தோளிலும் இடங்கை சாதி பெண்கள் தங்கள் முந்தானையை வலது தோளிலும் போட்டிருந்தனர்.

இந்த இரு பிரிவுகளிலும் உள்ள கீழ்நிலையில் வைக்கப்பட்ட சாதிகள் இடங்கை பிரிவில் உள்ள நில உடமையாளர்கள் மற்றும் வலங்கை பிரிவில் உள்ள நில உடமையாளர்கள் என அனைவரிடமும் கூலிகளாக வேலை பார்க்கும் நிலைதான் இருந்துள்ளது. ஆனால் ஏற்கெனவே முழுவதுமாக பார்ப்பனமயமாகி இருந்த வலங்கை சாதிகள் பழக்கவழக்கங்கள்தான் பெரும்பாலும் இடங்கை சாதிகளின் மேல் செல்வாக்கு செலுத்தும் நிலை நிலவி வந்திருக்கின்றது.

நில உடமை என்று எடுத்துக்கொண்டால் பெரும்பாலான நிலங்கள் ஏறக்குறைய 80 விழுக்காடு நிலங்கள்வரை கொங்கு கவுண்டர்கள் உடைமையாக பெற்றிருந்திருக்கின்றனர். இதனால் வேறு எந்த சாதிகளும் அவர்களோடு போட்டி போட முடிவதில்லை என்பதோடு அவர்களின் சாதி ஆதிக்கத்திற்கு அடிபணிய வேண்டிய நிலையும் ஏற்பட்டுவிடுகின்றது. சாதிப் பிரிவுகள் பார்ப்பனியம் கட்டமைத்த வர்ணாஸ்ரமத்தி லிருந்து உருவானவை என்று பெரியாரும் அம்பேத்கரும் தெளிவாக நிறுவுகிறார்கள். ஆனால் சாதிய ஆதிக்கம் நிலவுடமை சார்ந்தே கட்டமைக்கப்படுகின்றது. இடங்கை பிரிவில் உள்ள பெரும்பாலான சாதிகளுக்கு நிலத்தின் மீது எந்த உரிமையும் இல்லை என்பதால் அவர்கள் தங்களை காப்பாற்றிக்கொள்ள வலங்கை நிலவுடமையாளர்களையே பெரிதும் சார்ந்து இருக்க நிர்பந்திக்கப்பட்டனர். மேலும் வலங்கை இடங்கை பிரிவுகளை சேர்ந்த தாழ்த்தப்பட்ட சாதிகளான பறையர், குறும்பர், மாதாரி போன்ற சாதிகளுக்கு அவர்களின் சமூக படிநிலையைப் பொறுத்தே அறுவடைக்குப் பின்பு கூலி கொடுக்கப்பட்டது.

கொங்கு பகுதியைப் பொறுத்தவரை நிலத்தில் நேரடியாக பாடுபடவும், அறுவடை செய்யவும் இரண்டு சாதிகளுக்கு மட்டுமே உரிமை வழங்கப்பட்டிருந்தது ஒன்று கவுண்டர் சாதி மற்றொன்று மரமேறி நாடார் சாதி. கவுண்டர், நாடார் இருவருமே பட்டக்காரருக்கு குத்தகை/ வாரம் தர வேண்டும். இது பணமாகவோ, உழைப்பாகவோ, பொருளாகவோ தரப்படலாம். இவ்வாறு கவுண்டர்கள் மண்ணிலும், நாடார்கள் பனைமரங்களிலிருந்து கள்ளு இறக்கவும், பழம்,இலை போன்றவற்றைப் பயன்படுத்தி கொள்ளவும் உரிமை பெற்றிருந்தனர்.

வலங்கை பிரிவுக்கும் மாரியம்மன் கோயிலுக்குமான நெருக்கம் என்பது முக்கியமாக பராமரிக்கப்படுகின்றது. வலங்கை பிரிவில் உள்ள சாதிகளில் ஏதாவது ஒன்று கோயில் திருவிழாவில் பங்கேற்காமல் போனால் விழாவே தடைபடும் நிலை கூட ஏற்பட்டுவிடும். வலங்கை பிரிவுக்கும் கோயிலுக்குமான உறவு என்பது உள்ளூர் நிலப்பரப்புக்கும் அவர்களுக்குமான உறவாக பராமரிக்கப்படுகின்றது. மேலும் ஒரு புராண கதையின் படி இந்த வலங்கை சாதிகள் அனைத்தும் ஒரே அக்கினியில் இருந்து பிறந்ததாக கருதப்படுகின்றது. எனவே இந்தச் சாதிகள் தங்களுக்குள் அண்ணன், தம்பி என்று அழைத்துக் கொள்கின்றனர். மாரியம்மன் திருவிழாவில் "பறையர்"களுக்கு கவுரமான பங்களிப்பு அளிக்கப்படுகின்றது. ஆனால் இதை வைத்துக் கொண்டு ஒடுக்குமுறை இல்லை என்ற முடிவுக்கு நாம் வந்துவிடக்கூடாது. இவை எல்லாம் நிலவுடமை மூலம் தாங்கள் செலுத்தும் சுரண்டலில் இருந்து அந்த மக்களின் கவனத்தை திசை திருப்ப செய்யப்பட்ட ஏற்பாடாக இருப்பதற்கான வாய்ப்புகளே அதிகம் அதே போல இடங்கை பிரிவில் உள்ள இடைநிலை சாதிகள் மச்சான் உறவு வைத்து அழைத்துக் கொள்கின்றனர்.

இந்த வலங்கை பிரிவினரின் நிலத்தின் மீதான ஆதிக்கம் பிரிட்டிஷ் ஆட்சியிலேயே கொஞ்சம் கொஞ்சமாக தகர்ந்தது. காராணம் பிரிட்டிஷ் ஆட்சியானது நிலத்தை பண்டமாக மாற்றி , நிலத்தை யாரும் விற்கலாம் வாங்கலாம் என்று சட்டம் கொண்டுவந்த போது இதற்கு முன்னர் நிலமற்று ஆனால் பொருட்செல்வம் சேர்த்திருந்த சாதிகள் இதைப் பயன்படுத்தி நிலங்கள் வாங்குவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் இன்றும் கூட கொங்கு பகுதியில் நிலமானது பெரும்பாண்மையாக கவுண்டர் சாதிகளிடமே இருப்பதை நம்மால் பார்க்க முடியும். இதற்கு பரம்பரை தன்மையும் ஒரு முக்கிய காரணம். ஒரு கவுண்டர் தன்னுடைய நிலைத்தை இன்னொரு கவுண்டர்க்கு விற்பதையே

விரும்புகின்றார். வேறு சாதிகளுக்கு விற்பதை தங்கள் சாதியின் ஆதிக்கம் தகர்ந்துவிடும் என்பதால் அதை விரும்புவதில்லை.

இப்படி தங்கள் மீது செலுத்தப்படும் சாதிய ஒடுக்குமுறை மற்றும் பொருளாதார ஒடுக்குமுறை போன்றவற்றில் இருந்து மதம் மாறுவதன் மூலம் வலங்கை பிரிவில் இருந்த பறையர் சமூகம் குறைந்தபட்ச விடுதலையை பெற முடிந்தது ஆனால் இடங்கை பிரிவில் இருந்த மாதாரி சமூகம் தங்கள் மீதான ஒடுக்குமுறையில் இருந்து விடுதலை அடைய மதம் மாறுதல் என்ற நிலைப்பாட்டை பெரிய அளவில் எடுக்கவில்லை என்பதோடு தங்கள் மீது சுமத்தப்பட்ட சாதிய இழிவை சகித்துக்கொண்டு போகும் மனநிலைக்கு வந்துவிட்டார்கள். வலங்கை பிரிவில் உள்ள பறையர்கள், நாவிதர், வண்ணார் போன்றவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டுகின்றனர் .ஆனால் இடங்கை பிரிவில் உள்ள சாதிகளில் குறிப்பாக மாதாரி சமூகம் கல்வி அறிவில் இன்னும் பின்தங்கியே உள்ளது.

வலங்கை இடங்கை என்ற பிரிவுகள் தற்போது இல்லை என்றாலும் அதன் எச்சங்கள் இன்றும் சமூகத்தில் நிலவுவதை நம்மால் பார்க்க முடிகின்றது. சாதிய ஆதிக்கம் என்பது நிலவுடமை உறவுகளுடன் நின்றுவிடாமல் இன்று பல்வேறு பட்ட நவீன உற்பத்திமுறை நடக்கும் இடங்களில் கூட தன்னை தக்கவைத்துக் கொண்டுள்ளது. பொருளாதார உயர்நிலையை வலங்கை பிரிவில் இருந்த தாழ்த்தப்பட்ட சாதிகளோ இடங்கை பிரிவில் இருந்த தாழ்த்தப்பட்ட சாதிகளோ தங்களுக்கு வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு போன்றவற்றை பயன்படுத்தி அடைந்திருந்தாலும் சூத்திர சாதிகள் தாங்களும் பார்ப்பனியத்தால் இழிவுபடுத்தப்படுகிறோம் என்பதை உணர மறுத்து அவர்களிடம் காலம் காலமாக உறைந்து கிடக்கும் தனக்கு கீழானவர்களுக்கு எதிரான சாதிய ஆணவபோக்கு அவர்களுக்கு சமூகத்திலும் மனதிலும் சமத்துவத்தைக் கொடுக்க மறுக்கின்றது. இப்படியான போக்கு உண்மையில் நிலவுகின்றது என்பதை ஏற்று அதற்கு எதிரான தீவிரமான கருத்தியல் பரப்புரையை மேற் கொள்வதன் மூலமே நம்மால் சமூக சமத்துவத்தை நோக்கி பயணிக்க முடியும்.

இந்த சமூக எதார்த்தத்தை மறைக்க சங்கிகள் ‘இந்து’ என்ற போர்வைக்குள் பதுங்கி நிற்கின்றன.

●

*மனம் திறக்கிறார் பேராசிரியர் மு. இராமசாமி*

# பெரியார் குறித்த அவதூறுகளே என்னை பெரியார் நாடகம் உருவாக்கத் தூண்டியது!



*'கலகக்காரர் தோழர் பெரியார்' எனும் நாடகத்தை உருவாக்கி, பெரியாருக்குச் சிவப்புச் சட்டையை அணிவித்து பல தரப்பினருக்கும் அதிர் வலைகளை ஏற்படுத்தி, நாடகத்தை இயக்கியும், பெரியா ராகவே நடித்தும் பெரும் வரவேற்பைப் பெற்றவர் இவர். 'திராவிட இயக்கமும் கலைத் துறையும்' என்ற ஆய்வு நூலை எழுதியவர்.*

*தேசிய அளவில் இவரது நாடகங்கள், பல விழாக்களில் பங்கு பெற்றுப் பாராட்டுகளைப் பெற்றுள்ளன. இருபதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் முக்கியப் பாத்திரங்களை ஏற்று, தன் நடிப்பால் அவற்றுக்கு மெருகூட்டியவர்.*

*பொதுவுடைமைப் பேராசான் காரல் மார்க்ஸ், சமுக விஞ்ஞானிகளான தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர் ஆகியோரைத் தனது வழிகாட்டிகளாகக் கொண்டு பாடாற்றி வரும் இவர், நடித்து அண்மையில் வெளி வந்துள்ள 'கே.டி. (எ) கருப்புதுரை' எனும் திரைப்படம் பல்வேறு விருதுகளை வென்று, திரையுலகில் கடந்தாண்டு வெளி வந்த சிறந்த படங்களில் ஒன்றாக வரவேற்பைப் பெற்றுள்ளது.*

*இன உணர்வாளரான இந்த 'முதுபெரும் இளைஞர்' பேராசிரியர், முனைவர் மு. இராமசாமி அவர்களை, 'நிமிர்வோம்' இதழுக்காகப் பேட்டி கண்டோம். பேட்டி கண்டவர் தோழர் 'தடா' ஒ. சுந்தரம்.*

*கேள்வி : உங்கள் நாடகக் கலையின் தொடர் பயணம் பற்றி கூறுங்கள்.*

*பதில் :* எனது முதல் நாடகமான, 'பண்டிதர் மூவரும் மாண்டதொரு சிங்கமும்' வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, ஜி. சங்கரப்பிள்ளை எழுதி, மலையாளத்திலிருந்து இராமா னுஜம், தமிழுக்கு மொழி பெயர்த்துத் தந்த, 'ஆஸ்தான மூடர்கள்' எனும்

நாடகத்தை இயக்கி, நடித்தோம். அதுவும் வெற்றி பெற்றது. பிறகு, 'நல் வாழ்வை நோக்கிப் பீ....டு நடைபோடுகிறது நாடு' எனும் நாடகத்தைத் தயாரித்தோம்.

இது மௌன மொழி (Mime play) எனும் முறையில், இசை நாற்காலிப் போட்டி (Musical Chair) பற்றிப் பேசிக் கொண்டிருந்ததை வைத்து சங்கரப் பிள்ளை எழுதியது.

இந்த நாடகக் 'கரு' என்பது, வேலை இல்லாத் திண்டாட்டம் நிலவிய சூழலில், அந்த வேலைகள் ஏழைகளுக்குக் கிட்டாது, பணக்காரர்களுக்குத் தான் கிடைக்கிறது என்பதாகவும், எனவே இந்த சமூக அமைப்பு முறையை உடைத்துத் தகர்க்க வேண்டும் என்பதாகவும் அமைத்திருந்தோம். நல்ல வரவேற்பு கிடைத்தது.

மேலும் உற்சாகமடைந்து, 'விழிகள்' இதழில் தொடர்ந்து பல நாடகங்களை எழுதினேன். இதில், 'ஆனை', 'வெத்து வேட்டு' நாடகங்கள் முக்கியமானவை. 'வெத்துவேட்டு' பின்னர் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

பிறகு, காந்தி கிராமத்தில், டெல்லி தேசிய நாடகப் பள்ளி (National School of Drama) சார்பாக 70 நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற (01.11.1978 முதல்) பயிலரங்கில் பங்கேற்றேன்.

அதில் 'பிணந்தின்னும் சாத்திரங்கள்' நாடகம் நடத்தப்பட்டு, நான் துரியோதணனாக வேடமிட்டு நடித்தேன். அதோடு, சங்கரப் பிள்ளையின், 'கிராதம்' மலையாள நாடகமும் நடைபெற்றது. அதிலும் சிறு வேடம் தாங்கி நடித்தேன்.

இப்படியாக, எனது நாடகப் பயணம் சென்னை, டில்லி எனத் தொடர்ந்தது.

இந்த அனுபவங்களைக் கொண்டு, எனது 'நிஜ நாடக இயக்கம்' சார்பாக சில நண்பர்களின் துணையோடு, 1988இல் மதுரையிலே 3 நாட்கள், 'நாடகக் கலை விழா' நடத்தினோம். தொடர்ந்து 90,92களிலும் இந்த 'நாடகக் கலை விழா' நடத்தியபோது பல்வேறு இடங்களில் இருந்தும் நாடகக் குழுக்கள் வருகை தந்து, தங்கள் நாடகங்களைப் போட்டுப் பங்கேற்றுச் சிறப்பித்தன.

**கேள்வி : இந்த நாடக விழாக்களில் உங்களுக்கு மறக்க முடியாத அனுபவம் ஏதேனும் ஏற்பட்டதுண்டா?**

பதில் : இனி நாடகமே வேண்டாம் என்ற முடிவுக்கு வரும்படியான ஒரு சம்பவம் 1992இல் நடைபெற்றுவிட்டது. எழுத்தாளர் சாருநிவேதிதாவும், அவரது கூட்டாளிகளுமாக அடித்த 'கூத்து' அது. 'Post modernism' எனும் பெயரால் 28 ஆண்டுகளுக்கு முன் மேடையேறி நடத்தப்பட்ட அந்த அருவெறுக்கத்தக்க 'நிகழ்ச்சி', அப்போதே பல்வேறு விவாதங்கள் நடத்தப்பட்டு, கண்டிக்கப்பட்டது. திரும்பவும் அது பற்றி பேச வேண்டியதில்லை என நினைக்கிறேன்; மறக்கப்பட வேண்டியது அது. அந்த நேரத்தில் நடந்த பல சம்பவங்கள் என் மன அமைதியைக் குலைத்ததால் நாடகத்திலிருந்தே விலகியிருக்க விரும்பினேன்.

**கேள்வி:இந்தச் சூழலிலிருந்து எப்படி மீண்டு வந்தீர்கள்?**

பதில் : எனது நாடகப் பயணம் மீண்டும் தொடர, அப்போது காரணமானவர் கோமல் சுவாமிநாதன். அவர் தான் என்னை அணுகி, 'என்ன இது? இதற்குப் போய் முடங்கலாமா? இராமசாமி என்றாலே எங்களுக்கு நாடகம்தான் நினைவுக்கு வரும். நீங்கள் இப்படி சோர்ந்துவிடக் கூடாது. சென்னையிலே நான் நடத்துகிற சுபமங்களா நாடக விழாவிற்கு நீங்கள், 'ஸ்பார்ட்டகஸ்' நாடகத்தைக் கொண்டு வந்து நடத்துகிறீர்கள்' என அன்புக் கட்டளையிட்டு விட்டுப் போய் விட்டார்.

அதனை மீற இயலாமல், மீண்டும் 'ஸ்பார்ட்டகஸ்' நாடகத்தை உருவாக்கினேன்.

இந்த நாடகத்தை 1989 இலேயே, திருச்சியில் நடைபெற்ற ஃபாதல் சர்க்கார் நாடக விழாவில் போட்டிருந்தோம். வங்க மொழியில் ஃபாதல் சர்க்கார் எழுதியிருந்ததை, தோழர் இராஜாராம் மொழி பெயர்த்துத் தந்திருந்தார்.

கோமல் சுவாமிநாதன் நடத்திய நாடக விழாவில், சென்னை கிருஷ்ண கான சபாவின் வெளியிலே மேடை அமைத்து நடத்தினோம். இதிலே சிறப்பு என்னவென்றால், அன்றைக்கு ஃபாதல் சர்க்காரே நேரில் வருகை தந்து, பார்வையிட்டு வாழ்த்திய போது, 'என்னுடைய இந்த நாடகத்தைப் பலரும் போட்டிருக்கிறார்கள். ஆனால், இது மிகச் சிறப்பாக வந்திருக்கிறது. You are an young and energetic actor' எனக் கூறி என்னைப் பாராட்டினார்.

**கேள்வி : உங்கள் நாடகங்களில் எதை நீங்கள்**

*சிறப்பானதாகச் சொல்வீர்கள்?*

பதில் : நான் எழுதி, இயக்கி, நடித்த அனைத்து நாடகங்களுமே எனக்கு சிறப்பானவைகள்தான். எனினும் 1984இல் டெல்லியிலுள்ள மைய சங்கீத நாடக அகாடமியில், 'அன்டிக்னி' என்ற கிரேக்க நாடகத்தைப் போட்டோம். இது சோஃபோக்ளஸ் (Sophocles) என்பாரால் எழுதப்பட்டது. இந்த நாடகத்தைத் 'துர்கிர அவலம்' எனும் பெயரில் எனது இணைவி பேராசிரியர் செண்பகம் தமிழில் மொழி பெயர்த்திருந்தார்கள் என்பது ஒரு சிறப்பு.

இந்த நாடகம் முதலில், பெங்களூரில் நடைபெற்ற மண்டல அளவிலான போட்டியில் கலந்து கொண்டு, தேர்வாகி, டெல்லியில் நடைபெற்ற 8 நாள் நாடக விழாவில் முதல் நாடகமாகப் போடப்பட்டது. அப்போது நான் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில், தமிழ் நாடகத் துறை இணைப் பேராசிரியராகப் பணியாற்றிய வேளை அது. டெல்லி நாடக விழாவில் பலரது பாராட்டையும் இந்த நாடகம் பெற்றது.

*கேள்வி : கிரேக்க நாடகங்கள் மீது என்ன ஈர்ப்பு உங்களுக்கு?*

பதில் : உலகின் மிகப் பழமையான நாடகக்காரர்கள் கிரேக்கர்களாகத்தான் இருக்கிறார்கள். கி.மு. 450ஆம் ஆண்டுகளிலேயே ஏதன்ஸ், ஸ்பார்ட்டா நகரங்களில் நாடக விழாக்களை நடத்தி, சிறந்த நாடகங்களைத் தேர்வு செய்யும் முறையைக் கொண்டிருந்தார்கள். சோஃபோக்ளஸ், அரிஸ்டோபென்ஸ், ஈஸ்க்கிளியஸ், யூரிபிட்டிஸ் போன்றவர்கள்

> **'வரலாற்று நாவல்கள் என்பவை மக்களின் வாழ்வியல் போராட்டங்களை மையமாகக் கொண்டிருக்க வேண்டுமேயன்றி, ஒரு மன்னன் வந்தான், சென்றான் என்றெல்லாம் கற்பனையாகப் படைத்திடக் கூடாது' என்று தெரிவித்த கருத்தை, நான் மேற்கோள் காட்டி, அகிலனின் படைப்புகளை விமர்சித்ததே அவரது கோபத்துக்குக் காரணமாகும்.**

உலகப் புகழ்பெற்ற நாடகக்காரர்களாகத் தெரிய வந்தது இந்த நாடகப் போட்டிகளின் மூலம்தான்.

*கேள்வி : 'ஆண்டிக்னி' நாடகக் கதை என்ன? உங்களின் மற்ற நாடகங்களைப் பற்றியும் சொல்லுங்கள்!*

பதில் : இது ஒரு துன்பியல் நாடகம். எதேச்சதிகாரி கிரியான் என்பவனின் தன்னிரக்க சோக முடிவைப் பேசுவதாகும். கிரியானின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடி உயிர் துறந்த பெண்தான் 'ஆன்டிக்னி'.

வேறு நாடகங்கள் எனப் பார்த்தால், 1995இல் 'இருள் யுகம்' எனும் தரம்வீர் பாரதியின் நாடகம். மதுரையில் பெரிய அரங்கு அமைத்து நடத்தியதாகும்.

1998இல், சென்னை மியூசியம் தியேட்டரில், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட நாடகம், 'கலிலியோ கலிலி'! ஜெர்மனி நாட்டு மார்க்சியவாத சிந்தனை கொண்ட பெர்டோல்ட் பிரக்ட் (Pertolt brecht) என்பாரால் எழுதப்பட்ட நாடகமிது.

நவீன வானியலின் தந்தை எனக் கருதப்படும் கலிலியோவின் கருத்துகள், கிறித்துவ மதத்திற்கு எதிரானவை என வாடிகன் குற்றம்சாட்டி, தண்டனை விதித்து வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார்.

'பூமி தான் மையம். சூரியன் சந்திரன் ஆகியவை பூமிக்கு ஒளியூட்டுபவை' என்பதாகக் கருத்தைச் சொல்ல அவரை வற்புறுத்தியபோது, 'உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்; தயவுசெய்து அந்த பூமியைச் சுழல விடுங்கள்' எனக் குரல் எழுப்பியவர். மதவாதிகளை கண்களைத் திறந்து பார்க்கச் சொல்லி அறிவியல் பூர்வ உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டினார். ஆனால், வாடிகன் மறுத்து விட்டது.

1992இல், கலிலியோவிற்கு கொடுத்த தண்டனைக்காக, 350 ஆண்டுகள் கழித்து வாடிகன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டது.

இதைத்தான், அறிவியலின் முன் மதம் மண்டியிட்டதாக நாடகத்தில் பதிவு செய்திருந்தேன். தமிழ்நாடு அறிவியல் இயக்கம், இந்நாடகத்தைப் பல இடங்களில் போட வைத்தது. மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்ற நாடகமாகும் இது.

1999இல் 'மேஜிக் இலண்டன்' குழு சார்பாக, சென்னை ஒய்.எம்.சி.ஏ. அரங்கில் 'பொன்னியின் செல்வன்' நாடகம் போடப்பட்டது. அதிலே, பெரிய பழுவேட்டரையர் பாத்திரமேற்று நடித்தேன்.

இதுவரை போடப்பட்ட 46 நிகழ்வுகளிலும் நானே பெரிய பழுவேட்டரையராக நடித்துள்ளேன். கடல் கடந்து, சிங்கப்பூரிலும் இந்த நாடகம் சிறப்பாகப் போடப்பட்டது.

2001இல் ஈஸ்க் ஐலஸ்

(Eschailes) என்பார் எழுதிய கிரேக்க நாடகம், 'கட்டுண்ட பிரமிதீயஸ்', இதையும் என் இணைவி பேராசிரியர் செண்பகம் தான் மொழி பெயர்த்துத் தந்தார்கள். மதுரை பல்கலைக்கழகத்தில் அரங் கேற்றம் செய்யப்பட்டு, சிறப் பான வரவேற்பைப் பெற்றது.

**கேள்வி : உங்கள் மனைவிக்கு கிரேக்க மொழி தெரியுமா? உங்கள் திருமண வாழ்க்கை எப்படி அமைந்தது?**

பதில் : எனது இணைவி, செண்பகம் அவர்கள் முனைவர் பட்ட ஆய்விற்காக எடுத்துக் கொண்ட தலைப்பு, 'கிரேக்க லிரிக் கவிதைகளும், சங்க இலக்கியக் கவிதைகளும் - ஓர் ஒப்பீடு' என்பதுதான்.

இதற்காகவே, கிரேக்க மொழியை மதுரை இறையியற் கல்லூரி கிரேக்கப் பேராசிரி யரிடம் முறையாகக் கற்றுத் தேர்ந்தார். மதுரை பாத்திமா கல்லூரிப் பேராசிரியராகப் பணி புரிந்தவர். பொதுவுடமை - பெரியாரியல் கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். 'தாமரை', 'கணையாழி' இதழ் களில் அவரது கதைகள் வெளி வந்துள்ளன. இலக்கியத் திறனாய்வு விவாதங்களில் ஆர்வமுடன் பங்கேற்று வாதிடுவார். அவரது இந்தப் பண்புதான் எங்களுக்குள் நட் பாகி, காதல் மலர்ந்தது. செண்பகம், என்னைவிட வயதி லும், கலை இலக்கிய ஆற்றலி லும் சிறந்தவராக விளங்கியவர்.

1974ஆம் ஆண்டு, மதுரைப் பல்கலைக்கழகத்தில் அகிலனின் படைப்புகள் பற்றி 4 நாட்கள் கருத்தரங்கு நடைபெற்றது. அதில் நான், 'அகிலனின் வரலாற்று நாவல்களும் அவரின் வாழ்வியல் பார்வையும்' என்ற தலைப்பில் கட்டுரை படித்தேன். அதில், யாழ் பேராசிரியர் கைலாசபதியின் வரலாற்று நாவல்கள் பற்றிய கருத்தினை மேற்கோள் காட்டிப் பேசியதால், கோபம் கொண்ட அகிலன், கைலாசபதியைக் கடுமையாக விமர்சித்தார்.

ஏனெனில், கைலாசபதி, 'வரலாற்று நாவல்கள் என்பவை மக்களின் வாழ்வியல் போராட் டங்களை மையமாகக் கொண் டிருக்க வேண்டுமேயன்றி, ஒரு மன்னன் வந்தான், சென்றான் என்றெல்லாம் கற்பனையாகப் படைத்திடக் கூடாது' என்று தெரிவித்த கருத்தை, நான் மேற்கோள் காட்டி, அகிலனின் படைப்புகளை விமர்சித்ததே அவரது கோபத்துக்குக் காரண மாகும்.

'மதுரைப் பல்கலைக்கழகத் தில் மார்க்சியக் கண்ணாடியா? இதை அனுமதிக்க முடியாது' என்று ஆவேசப்பட்டார் அகிலன்!

இவருக்கு வக்காலத்து வாங்கிய 'தீபம்' நா. பார்த்த சாரதி, 'இவரைப் போன்ற வர்கள் கையில் இலக்கியத்தைக் கொடுத்தால் என்னாகும்? செருப்புக்குத் தக்கபடி காலை வெட்டிக் கொள்கிறவர்கள்' என்றார்.

இவர்களுக்கு ஆதரவாக வந்த கி.வா. ஜகந்நாதன், 'குரங்கு கையில் பூமாலை கொடுத்தால் என்னாகுமோ, அவ்வாறு இவர்கள் கையில் இலக்கி யத்தைக் கொடுத்தால் ஆகி விடும்' என்று என்னைத் தாக்கியே பேசினார்.

அந்த நேரத்தில் கருத்தரங்கில் பங்கேற்க வந்திருந்த பேராசிரியர் செண்பகம் துணிவாக முன் வந்து, எனக்கு ஆதரவாகப் பேசியது மனதிற்கு இதமாக இருந்தது.

பிறகு, 'திராவிட மொழி யியல் கழக மாநாடு' மதுரைப் பல்கலைக்கழகத்தில் நடந்த போது, நான் ஆண்டிப்பட்டித் தேவராட்டக் கலைக் குழுவை அழைத்து வந்து நிகழ்ச்சி நடத்தினேன். அதைப் பார்த்த செண்பகம், அக்குழுவினரைப் பாராட்டி, சன்மானம் அளித்து வாழ்த்தினார்.

இப்படித் தொடர்ந்து எங்களுக்குள் ஏற்பட்ட சந்திப்பும், புரிதலும் நிறைவாகித் திருமணத்தில் முடிந்தது (1980). நீரோடை போல் சென்ற எங்கள் மண வாழ்வில், இணைவி யாருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டு, 18 ஆண்டுகள் இல்லற வாழ்க்கைக்குப் பிறகு (1998), அவர் மறைய நேரிட்டது.

(சற்றே இறுக்கமாகி அமைதி யாகிறார்) தொடர்ந்து...

"இன்று அவர் இருந்திருந் தால் சிறந்த கலை இலக்கிய வாதியாகத் தமிழகத்தில் திகழ்ந் திருப்பார். பன்முக ஆற்றல் வாய்ந்தவர். பிறருக்கு உதவும் குணம் படைத்தவர்.

நாட்டுப்புறக் கலைஞர் களுக்கு உதவும் பொருட்டு, நாங்கள் இணைந்து, 'தெம் மாங்கு' என்ற அமைப்பைத் தொடங்கினோம். அவர்தான் புரவலர். தேவராட்டம், வில்லுப் பாட்டு, தெருக்கூத்து இப்படியான நிகழ்ச்சிகளை மாதந்தோறும் நடத்தி, அந்தக் கலைஞர்களுக்கு உதவிகளைச் செய்து வந்தார் அவர்.

இணைவியார் செண்பகத்

தின் இழப்பு, எனக்கு மட்டுமின்றி கலை இலக்கியத் துறைக்கும் பேரிழப்பு! அவரது நினைவு நாளான மார்ச் 14இல் ஆண்டுதோறும் ஒரு நாடகம், ஒரு நூல் வெளியீடு என தொடர்ந்து நடத்தி வருகிறேன் அவருக்கு நினைவஞ்சலியாக!

**கேள்வி : நீங்கள் பல நாடகங்களை எழுதி, இயக்கி, நடித்துள்ளீர்கள். இதிலே பல முறை மேடை ஏறிய நாடகமாக, வெகு மக்கள் ஆதரவு பெற்ற நாடகமாக எதைச் சொல்வீர்கள்?**

பதில் : 'கலகக்காரர் தோழர் பெரியார்' நாடகம் தான் அந்தப் பெருமைக்கு உரியது. 2003ஆம் ஆண்டு நான் எழுதி இயக்கி, நடித்த நாடகம். தமிழ்நாட்டில், ஒரே நாளில் இரண்டு காட்சிகள் எல்லாம் நடத்தப்பட்ட நாடகம். 48 மேடைகளில் இந்த நாடகம் போடப்பட்டு, மக்களின் பேராதரவைப் பெற்றதாகும்.

**கேள்வி : பெரியாரைப் பற்றி நாடகம் எழுதிட வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?**

பதில் : நடிகர் திலகம் சிவாஜிகணேசன் ஒரு முறை அளித்த பேட்டியில், பல வேடங்களில் இதுவரை நடித்தும், இன்னும் பெரியார் வேடமிட்டு நடிக்க வில்லையே என்ற குறை இருப்பதாகத் தெரிவித்து இருந்தார். அது என் மனதில் நெருடலாகவே இருந்து வந்தது; நாம்கூட இன்னும் நடிக்க வில்லையே என்ற எண்ணத்தில்!

அதோடு, 1999களில் என்று நினைக்கிறேன். தோழர் இரவிக் குமார், அவரது இயக்க ஏடான 'தாய் மண்ணில்' பெரியார் குறித்து எழுதி வந்த கடுமையான விமர்சனங்களை என்னால் ஏற்க முடியவில்லை. மன வலியைத் தந்தது.

பெரியாரின் பேச்சுகள், எழுத்துகளில் இருந்து ஆங்காங்கு கருத்துகளை எடுத்து வைத்துக் கொண்டு, அதன் முழுப் பரிமாணத்தையும் கணக்கில் எடுக்காமல் செய்யப்பட்ட தவறான விமர்சனங்கள் அவை.

அவர்களது பெரியார் குறித்த எதிர் விமர்சனங்கள் வெளி வந்த போது அம்பேத்கரின் நூற்றாண்டு நிகழ்வுகள் தொடங்கிய நேரம் அது என நினைக்கிறேன்.

தந்தை பெரியார் தமிழ் நாட்டில் பெரும்வீச்சாக இருந்ததால் அதனை மட்டுப்படுத்தி, அண்ணல் அம்பேத்கரை நோக்கி பார்வையைத் திருப்ப வேண்டும் என்ற முயற்சியாக இருக்கலாம் என்பதே அப்போது நான் புரிந்து கொண்டதாக இருந்தது. எனது புரிதல் தவறாக இருக்கலாம்; ஆனால், பெரியார் தவறாக விமர்சிக்கப் பட்டார் என்பது வரலாறு.

ஆனால், இப்போது பெரியாரை முழுவதுமாகப் புரிந்து கொண்டு எல்லோரும் இணங்கி ஏற்று வந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது; வரவேற்கக் கூடியது.

சமூகத்தை நேசித்தவர்கள் என்பதிலே பெரியார், அம்பேத்கர், காரல்மார்க்ஸ் ஆகியோர் ஒரே நேர்க்கோட்டில் வரக் கூடியவர்கள்.

மார்க்ஸ், 'உலகத் தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள்!' என்றார். 'சூத்திரப் பட்டத்தை அழிப்பது தான் என் முதல் வேலை' என்று பெரியாரும், 'சாதியை ஒழிப்போம்' என அம்பேத்கரும் முழங்கியவர்கள்.

இந்தச் சூழலிலே, நான் பெரியாரைப் படித்தபோது, எந்தவித சுயநலமும் இல்லாமல், பெரியாரே வெளியிட்டுள்ள தன்னைப் பற்றிய பிரகடனத்திலே, "திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயங்களுக்கு இணையாக மேன்மையாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு செய்து வருகிறேன். இதைச் செய்வதற்கு எனக்கு தகுதி இருக்கிறதோ இல்லையோ, வேறு எவரும் முன் வராத காரணத்தால், அந்தப் பணியை என் மேற்போட்டுக் கொண்டு செய்து வருகிறேன்' என்பதோடு, இதைத் தவிர வேறு பற்று எனக்கு எதுவுமில்லை" என்று அறிவித்திருப்பது எவ்வளவு பெரிய சமூகப் பற்றாளர் என்பதை எனக்கு உணர்த்தியது.

மேலும், 'பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளையும், கோட்பாடுகளையும் நான் பின்பற்றுவதால், பொது வாழ்வில் ஈடுபடும் ஒருவனுக்கு இது போதும்' என்கிறார் பெரியார்.

இப்படிப் பெரியாரை உணர்ந்து கொண்டபோது, நாடகமாக இதனைப் போடுவது என்று தீர்மானித்தேன். இந்தக் கருத்தை நண்பர் ஒருவரிடம் சொன்னதும், அவர், தானே எழுதுவதாகக் கூறி, எழுதித் தந்தார். ஆனால், அதில் எனக்கு திருப்தி ஏற்படவில்லை. இப்படியே ஓராண்டு கடந்து விட்டது.

பிறகு, என்னைச் சந்திக்க தோழர்கள் மருதையனும், கோவனும் தஞ்சைத் தமிழ்ப்

பல்கலைக் கழகத்திற்கு வந்த போது, எனது பெரியார் நாடகத் திட்டம் பற்றி தெரிவித்தேன். உடனே தோழர் கோவன், தனது பையிலிருந்து தோழர் ஏ.எஸ்.கே. ஐயங்கார் எழுதிய பெரியார் பற்றிய சிறிய வெளியீடு ஒன்றை எனக்குக் கொடுத்து, இதைப் படித்துப் பாருங்கள் என்றார்.

அதைப் படித்ததும், பெரியாரைப் புதிய கோணத்தில், ஏ.எஸ்.கே. வெளிப்படுத்தியிருந்தது அறிந்தேன். அந்த நிமிடமே எனக்குள் பெரியார், கருப்புச் சட்டையோடு, சிவப்புச் சட்டைக்காரராக, பிரம்மாண்டமாக உருவெடுத்து நின்றார். இப்படித்தான், பெரியாருக்கு சிவப்புச் சட்டை அணிவித்து, அவரைக் 'கலகக்காரர் தோழர் பெரியார்' ஆக்கினேன்.

கேள்வி : நாடகத்திற்கு வரவேற்பு எப்படி இருந்தது?

பதில் : பெரியாரை கருப்புச் சட்டையிலேயே பார்த்திருந்த தோழர்களுக்கு, அவருக்கு சிவப்புச் சட்டை அணிவித்தது முதலில் மிரட்சியாகவும், வியப்பாகவும் இருந்தது.

கடந்த 2003 மார்ச்சு 14இல் இணைவியார் நினைவுநாளில் மதுரை யாதவர் கல்லூரியில் அரங்கேற்றம் செய்தோம். அதே ஆண்டு, ஆகஸ்டு 8இல் சென்னை இராஜா அண்ணாமலை மன்றத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம், சி.பி.அய்.(எம்) அமைப்பின் சார்பாக நடத்தியபோது, அரங்கம் நிறைந்து வழிந்தது மக்கள் கூட்டம் . ஏராளமான பத்திரிகைகள், சரியாகச் சொல்வதானால், உயர்சாதி மனோபாவம் கொண்ட பத்திரிக்கைகள் ஒன்றிரண்டைத் தவிர 39 இதழ்கள், கலகக்காரர் தோழர் பெரியார் நாடகத்தை வரவேற்றுப் பாராட்டி விமர்சனங்களை வெளியிட்டன.

அந்த நேரத்தில், அரசு ஊழியர்களை 'டெஸ்மா' சட்டத்தில் தமிழக அரசு வேலை நீக்கம் செய்திருந்ததால், அவர்களுக்கு நிதி உதவி செய்வதற்காக இந்த நாடகத்தை, தற்போதைய மதுரை நாடாளு மன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் ஒருங்கிணைப்பில், மதுரை, கும்பகோணம், தஞ்சை, திருச்சி, காரைக்குடி என பல்வேறு இடங்களில் நடத்தினோம்.

சென்னை, காமராசர் அரங்கில் ஒன்றுபட்டிருந்த தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பாக நடத்தப்பட்டதுடன், அதற்கான விளம்பரது ண்டறிக்கையிலேயே எந்தெந்த பத்திரிகைகள் எப்படிப் பாராட்டியுள்ளன என்பதை வெளியிட்டிருந்தனர். மேலும் கோவையிலும் சேலம், மேட்டூர் போன்ற இடங்களில் ஒன்றுபட்ட பெரியார் தி.க. தோழர்களோடு, சிபிஅய்(எம்) தோழர்களும், காரைக்குடி போன்ற இடங்களில் சிபிஅய் உள்ளிட்ட தோழர்களும் இணைந்து பெரியார் நாடகத்தை நடத்தியது சிறப்பாக இருந்தது.

மயிலாடுதுறையில் நாடகம் முடியும் வரை காத்திருந்து, எங்களைப் பாராட்டிய பக்தர் ஒருவர், "பெரியாரை பார்ப்பன எதிர்ப்பாளர், கடவுள் மறுப்பாளர் என மட்டுமே அறிந்திருந்த எனக்கு, அவரது சமூக நீதி, சமத்துவ கொள்கைகளை அறிவதற்கு இந்த நாடகம் அருமையான வாய்ப்பை வழங்கியது" என்றார். அந்தளவிற்கு மக்கள் ஆதரவைப் பெற்றது.

பிறகு நாடகத்தை கேமிரா மேன் எம்.எம். ரங்கசாமியைக் கொண்டு, பல்கலைக்கழக அரங்கில் முழு நாடகத்தை படமாக எடுத்து விட்டோம். இந்தப் படத் தட்டுகளை (சி.டி.) சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் இல்லத்தில் வைத்து மாநிலங்களவை உறுப்பினராக அப்போது இருந்த கனிமொழி வெளியிட, பரிதி இளம்வழுதி பெற்றுக் கொண்டார். தோழர் கொளத்தூர் மணி, 300 சி.டி.களைப் பெற்று, மேட்டூர் தாய்த் தமிழ்ப் பள்ளிக்காக வழங்கினார்கள். இப்படி பெரும் வெற்றி பெற்றது இந்த நாடகம்.

கேள்வி : இந்த நாடகம் ஒரு பிரச்சார நாடகமாக கருதப் பட்டதா?

பதில் : இருக்கட்டுமே, அதில் என்ன தவறு? இதற்கு நாடகத்திலேயே பதில் சொல்லியிருக்கிறேன். "95 வயது வரைக்கும் தன்னைப் பற்றிக் கவலைப்படாமல், சமுதாயத்தைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு, சுற்றிச் சூழன்று வந்த தேனீ பெரியார்! அவரைப் பற்றி பேசுவது உங்களுக்குப் பிரச்சாரமாக இருந்தால், இது பிரச்சாரம் தான்" என்று நாடகத்தில் நான் சொன்னவுடன் அரங்கில் பலத்த கை தட்டி மக்கள் வரவேற்றார்கள். பெரியார் பிரச்சாரம் செய்து சமூக மாற்றத்திற்கு உழைத்தார். அவரைப் பற்றிப் பேசி, அவரது சமூக நீதி - சாதி ஒழிப்புக் கொள்கைக்கு நாம் துணையிருப்போமே!

கேள்வி : இதுவரை எவ்வளவு நாடகங்களை எழுதி, இயக்கி, நடித்திருப்பீர்கள்? நாடகக் கலை இலக்கியம் தொடர்பாக நூல்கள் எழுதியிருக்கிறீர்களா?

பதில் : ஏறத்தாழ 40 நாடகங்கள் இயக்கி, எழுதி

நடித்துள்ளேன். 37 நூல்கள் எழுதியுள்ளேன். அவையாவும் நாடகம், திரைப்படம் தொடர் பானவை. 'தமிழ் நாடகம் நேற்று இன்று நாளை', 'நாடகம்- இன்னுமே பேச இருக்கிறது', 'திருநெல்வேலியில் திரௌபதி மானபங்கப்படுத்தப்பட்டபோது', 'திரை வளர்த்த நான் - நான் வளர்க்கும் திரை' எனும் திரைப்பட விமர்சனங்கள் பற்றிய நூல் என்னுடைய திரைப்பட - நாடக நடிப்பு தொடர்பான செய்திகள் அடங்கியது. 'திராவிட இயக்கமும் கலைத் துறையும் - நாடகத் துறை எதிர்கொண்ட கலகங்கள்' என்ற நூல் 'குடிஅரசு' ஏட்டுச் செய்திகளை ஆய்வு செய்து எழுதியுள்ளேன்.

பிறகு, பல்கலைக்கழக மானியத் திட்டத்தின் கீழ் மூன்றாண்டு செயல் திட்டமாக, 'நாடகக் கலைச் சொற் களஞ்சிய அகராதி' தொகுத்து எழுதியுள் ளேன். அது நிறைவடைந்து பல்கலைக் கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டது. அது 'அ' முதல் 'ன' வரையான வரிசை எழுத்துக்களில் உள்ள நாடகச் சொற்கள் தொடர்பான வேர்ச் சொல் அகராதி எனலாம். இதை பல சிறு நூல்களாக்கித் தான் வெளியிட முடியும். அந்த முயற்சி செய்யப்படவுள்ளது.

**கேள்வி : தங்கள் இணைவியார் செண்பகம் நினைவு நாளில் ஒரு நாடகம் – நூல் வெளியீடு செய்து வரும் தாங்கள் இந்த ஆண்டு என்ன செய்யவிருக் கிறீர்கள்?**

பதில் : எதிர்வரும் மார்ச் 14இல் ஒரு நூல் வெளியிடு கிறேன். அது, '1954 இராதா நாடகத் தடையும் - இராதா நாடக மசோதாவும்' எனும் பெயரில் எழுதி வருகிறேன். இந்த நூலில் எம்.ஆர். இராதா நாடகத்திற்கு அரசு தடை விதித்தது. அதை எதிர்த்து நடந்த வழக்கு, மதுரையில் இராதா நாடகத்தில் கலவரம் போன்ற செய்திகளை ஆவணங்களாகத் தொகுத்துள்ளேன். அதோடு, 'வகுப்(பறை)' என்று ஒரு நாடகம் - இது கல்வி கற்கும் வகுப்பறை என்பது கல கலப்பாக, மாணவர்களோடு ஆசிரியர்கள் கலந்துரையாடி, இறுக்கமின்றிக் கல்வி கற்பிக்கப் பட வேண்டும் என்பதைக் 'கரு'வாகக் கொண்டது.

**கேள்வி : உங்கள் திரைப்பட அனுபவங்கள் பற்றி சொல் லுங்கள்!**

பதில் : இசையமைப்பாளர் எம்.டி. இராமநாதனின் இசையை மையமாக வைத்து எடுத்த படம் - 'பித்ருச்சாயா', 'மூதாதையர்களின் நிழல்' என்று பொருள். இதில் எனது, 'நிஜ நாடகக் குழுக்கார னாகவே' நடித்துள்ளேன். நாசரின் 'தேவதை', 'மாயன்', 'கிடாரி', 'பிதாமகன்', 'ஜோக்கர்' அண்மையில் கே.டி. (எ) கருப்புதுரை, ஏகாளி, சீமராஜா இப்படி 20க்கும் மேற்பட்ட படங்கள் நடித்தாச்சு. உடல்நிலை காரணமாக நடிக்கப் போவதில் ஆர்வமில்லை. ஆனால், 'நாடக நடிகன்' என்பது தான் எனக்குப் பெருமை.

**கேள்வி: எதிர்காலத் திட்டம்...!**

பதில் : நாடகப் பயிற்சிப் பள்ளி உருவாக்கிப் பள்ளி இடைநிற்றல் சிறார்களுக்கான விடுதி கட்டி, பல நாடகக் கலை இலக்கியவாதிகளை உருவாக்க வேண்டும் என்பதே என் நோக்கமாகும்!

நேர்காணல் : 'தடா' ஒ. சுந்தரம்

(நிறைவு)

## பெரியார் பார்வையில் நாடகங்கள்

இன்றைய நாடக உலகத்தில் உள்ள நாடகங்களின் மூலக் கதைகள், கற்பனைக் கதைகள் முதலியவை எல்லாம் பெரிதும் மனித சமூகத்திற்கோ, அவர்களது நல் வாழ்க்கைக்கோ, முற்போக்குக்கோ, விடுதலைக்கோ, சுதந்திரத்திற்கோ சிறிதும் பயன் அளிக்காததும் பிற்போக்கானதும், மனிதனை மிருகப் பிராயத்திற்கு, காட்டுமிராண்டிப் பிராயத்திற்கு அழைத்துச் செல்லக் கூடியதுமான விஷயங்களையே நடித்துக் காட்டப்படுகின்றதுடன், மனித சமூகத்தைப் பிரித்து வேற்றுமையும், துவேஷமும் பெருகு வதற்கு அனுகூலமாய் இருப்பவையே பெரிதும் நடிக்கப்படுகின்றன.

மனித சமூகத்திற்கு இன்று உள்ள இழிவுகளுக்கும், குறைபாடுகளுக்கும், மானமற்ற தன்மைக்கும், மதத்தின் பேரால், நீதியின் பேரால், தர்மத்தின் பேரால், அரசின் பேரால் எது எது ஆதாரமாய் இருந்து வருகிறதோ அதுவேதான் இன்றைய நாடக உலகத்தின் நடிப்புகளுக்கு மூல ஆதரவாய் இருந்து வருகின்றது.

ஆதலால், இனி வரப்போகும் நாடக உலகமானது இதுவரை இருந்தது போலவே இல்லாமல், உண்மையிலேயே மனித சமூகத் திற்குப் பயன்படக் கூடியதாயும் அதாவது, மக்கள் யாவரும் சமம்– பகுத்தறிவே பிரதானம்–உலக இயற்கைப் போக்குகள், இன்ப துன்பங்கள் யாவர்க்கும் பொது; இவற்றை யாரும் சரிசமமாய் அனுபவிக்கக் கடமைப்பட்டவர்கள்; அதற்கேற்ற கொள்கைகளே வாழ்க்கை முறையாகவும் ஆட்சி முறையாகவும் இருக்க வேண்டும். எல்லாம் அழிந்து ஒழிந்து மறைய வேண்டும் என்கின்ற கருத்துக்கு அனுகூலமாகவும், வழிகாட்டியாகவும் இருக்கவும் வேண்டுமென்று விரும்பி, இன்றையக் கொடுமையும் பட்சபாதமும் நிறைந்த உலகத்தை அன்பும், சமத்துவமும் கொண்ட உலகமாய்ச் செய்ய உதவி புரிய வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். குற்றமுள்ளதைத் தள்ளி, குண முள்ளதைக் கொள்ளக் கோருகிறேன்.

'குடிஅரசு' 10.8.1933

# டெல்லியில் ‘இராவணனை’ எரிக்கும் இராமலீலாவுக்கு எதிர்வினையே சேலத்தில் பெரியார் நடத்திய மாநாடு!



**–கொளத்தூர் மணி நேர்காணல்**

*சேலம் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டில் இராமன், இந்து கடவுளர்கள் நிர்வாணமாக செருப்பு மாலையோடு எடுத்து வரப்பட்டார்கள் என்று ‘ராஜகுரு’க்கள் ஆலோசனையால் பேட்டி அளித்தார் நடிகர் ரஜினிகாந்த். சேலம் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் நடந்தது என்ன என்பதை அதில் பங்கேற்ற தி.வி.க. தலைவர் கொளத்தூர் மணி விளக்குகிறார்.*

“இப்போதும்கூட, ‘ஊர்வலத்தில் ராமர் படத்துக்குச் செருப்பு மாலையிட்டிருந்த காட்சி’ என்று துக்ளக் பத்திரிகை, ஒரு தெளிவில்லாத படத்தைத்தான் பிரசுரித்திருக்கிறது.துக்ளக் விழாவில், தான் பேசிய பேச்சுக்கு, ‘அவுட்லுக்’-கில் வந்த கட்டுரையை ஆதாரமாகக் காண்பித்து ‘மன்னிப்பு கேட்கமாட்டேன்’ என அறிவித்திருக்கிறார் ரஜினிகாந்த்! இதைத்தொடர்ந்து, ‘ரஜினிகாந்த் தன் போரை, பெரியாரிடமிருந்து ஆரம்பித்திருக்கிறார்’ என்று ஆதரவுக் குரல்களும் ‘பா.ஜ.க-வின் பினாமி முகம்தான் ரஜினி என்பது உறுதியாகிவிட்டது’ என்று எதிர்ப்புக்குரல்களுமாகத் தமிழகமே கிடுகிடுத்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில், 1971-ல் சேலத்தில் நடைபெற்ற ‘மூட நம்பிக்கை ஒழிப்பு மாநாடு - பேரணி’யில் பங்கேற்ற ‘திராவிடர் விடுதலை கழக’த் தலைவர் கொளத்தூர் மணியிடம் பேசினேன்...

*‘‘துக்ளக் விழாவில், ரஜினிகாந்த் பேசியது பொய் என்று சொல்லி மறுக்கும் நீங்கள், 1971-ல், ‘நடந்த விஷயங்களுக்காக நான் வருத்தப்படுகிறேன்’ என்று அன்றைய முதல்வர் கருணாநிதி பேட்டியளித்திருப்பதற்கு என்ன பதில் சொல்லப்போகிறீர்கள்?’’*

“புராணங்களில் உள்ள ஆபாசக் கதைகள் பற்றி மக்களிடையே எடுத்துச்சொல்லி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகத்தான் ‘மூட நம்பிக்கை ஒழிப்புப்பேரணி’யே அன்றைக்கு நடத்தப்பட்டது. இரண்டு ஆண்களுக்குப் பிறந்ததாகச் சொல்லப்படும் ஐயப்பன் பிறப்பு மற்றும் முனிவரின் மனைவியான

அனுசுயாவை கடவுளர்களே நிர்வாணமாக வரச்சொல்லிய வக்கிரங்கள் ஆகியவற்றைத்தான் சித்திரங்களாக வரைந்து 'இந்த ஆபாசக் கடவுளர்களை நீங்கள் வணங்கலாமா...' என்று தலைப்பிட்டுப் பேரணியில் எடுத்துச் சென்றோம். வடஇந்தியாவில், 'ராம லீலா' என்ற பெயரில் ராவணனைத் தீயிலிட்டுக் கொளுத்துவதை எதிர்த்து, இங்கே ராமர் பொம்மையை எரிக்கத் திட்டமிட்டுத்தான் பேரணி சென்றோம். இதுதான் நடந்த உண்மை!

ஆனால், துக்ளக் விழாவில் பேசிய ரஜினிகாந்த், 'ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி - சீதை உருவங்கள் உடையில்லாத நிலையில் செருப்பு மாலை அணிந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது' என்று சொல்லியிருக்கிறார். ராமர் - சீதை உருவங்கள் நிர்வாணமாக எடுத்து வரப்பட வில்லை என்பதை தற்போது வெளியாகியுள்ள துக்ளக் பத்திரிகையிலுள்ள படங்களே சொல் கின்றன. எனவே, ரஜினிகாந்த் சொல்லியதும் பொய்; அவுட்லுக் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையும் பொய் என்று தெரிகிறது. அன்றைக்கு முதல்வர் பொறுப்பில் இருந்த கருணாநிதிக்கும் கூட, மாநாட்டைப் பற்றிய பொய்யான தகவல்கள் சொல்லப்பட்டிருக்கலாம். அரசுப் பொறுப்பில் இருந்த அவரும் அதற்காக வருத்தம் தெரிவித்திருக்கலாம்.''

***"1967-லேயே இதேபோன்றதொரு நிகழ்வு ஒன்றில், 'தி.க-வினர் செருப்பு மாலை அணிவித்ததாகவும் அதை அன்றைய முதல்வர் காமராஜர் கண்டிக்கவில்லை. அதுபோல் நான் இருக்கமாட்டேன்' என்றும் கருணாநிதி தெரிவித்திருக்கிறாரே?''***

"இப்போதும்கூட, 'ஊர்வலத்தில் ராமர் படத்துக்குச் செருப்பு மாலையிட்டிருந்த காட்சி' என்று துக்ளக் பத்திரிகை, ஒரு தெளிவில்லாத படத்தைத்தான் பிரசுரித்திருக்கிறது. தெளிவற்ற அந்தப் படத்தை உறுதியாக எடுத்துக்கொள்ள முடியாது.

ஏற்கெனவே சொன்னதுபோல், ஆளுங் கட்சியாக அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் பொறுப்பில் இருந்தவர் அன்றைய முதல்வர் கருணாநிதி. அவருக்குச் சொல்லப்பட்ட தகவலின் அடிப்படையில் அரசியல்ரீதியான பதில் ஒன்றைத் தெரிவித் திருக்கிறார்.

ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட அன்றைய பேரணிக்கு எதிராக, ஜனசங்கத்தினர் கறுப்புக்கொடி காட்ட அனுமதி கேட்டிருந்த சூழலில், முதல்வராக இருந்த கருணாநிதியும் ஜனநாயகத்தை மதித்து அனுமதி வழங்கியிருந்தார். ஆனால், அவர்களோ அந்த ஜனநாயகத்தை அத்துமீறித்தான் பேரணியினர் மீது செருப்பை வீசியிருக்கிறார்கள். வீசப்பட்ட அந்தச் செருப்பை எடுத்து எங்கள் தொண்டர் களும் படங்களின்மீது கூடுதலாகவேகூட அடித்திருக்கலாம். ஆனால், இதுகுறித்துப் பேசுகிற அனைவருமே முதல்வினை குறித்துப் பேசாமல், எதிர்வினையை மட்டுமே பேசுவதைத்தான் அரசியல் என்கிறோம்.''

***''இந்து மதத்தை மிகக் கடுமையாக விமர்சிக்கிற நீங்கள், மற்ற மதங்களிலும் உள்ள மூடநம்பிக்கை, ஆபாசங்களை இதுபோல் விமர்சிப்பதில்லையே... பயமா?''***

"நடைமுறையில், நாங்கள் நாத்திகர்களாக இருந்தாலும் 'சட்டப்படி நாங்களும் இந்துக்கள்' தான். அந்த இந்து மதம்தான் எங்களை 'தாசி புத்திரர்' என்று பொருள்படும்படியாக 'சூத்திரர்' என்று சொல்லி இழிவுபடுத்துகிறது. அந்த இந்து மதம்தான், நாங்கள் இந்துக்களாக, பக்தியாளர் களாக இருந்தாலும்கூட 'நீங்களெல்லாம் கோயிலுக்குள் நுழையக்கூடாது' என்று பிறப்பின் அடிப்படையில் பேதம் கற்பித்து எங்களை யெல்லாம் வெளியே நிறுத்திவைத்திருக்கிறது. அந்த இந்து மதம்தான், பக்தியோடு நாங்கள் ஆகமம் கற்றிருந் தாலும் வழிபாட்டுப் பயிற்சி பெற்றிருந்தாலும் 'நீங்களெல்லாம் அர்ச்சகர் களாக முடியாது' என்று சொல்லிக் கேவலப் படுத்துகிறது. அந்த இந்து மதத்தின் யோக்கியதையை விளக்குவதுதான் பெரியாரிய இயக்கங்களின் நோக்கங்கள். எங்களை சமமாகப் பாவிக்கிற ஏனைய மதங்களைப் பற்றி நாங்கள் பேச வேண்டிய தேவையே எழவில்லை. அதே சமயம் பகுத்தறிவு அடிப்படையில் எல்லா மதக் கடவுளர்களையும்தான் நாங்கள் மறுக்கிறோம்.

'ஞாயிறு மையக் கோட்பாட்டை' வலியுறுத்தியதற்காகவே கிறித்துவர்களால் சிறையிலடைக்கப்பட்டு இறந்தும்போனார் கலிலியோ. 350 வருடங்களுக்கு முன்பு நடந்து முடிந்த இந்தத் தவற்றுக்கு (1919) போப் ஃபிரான்சிஸ் வருத்தம் தெரிவிக்கிறார்; மன்னிப்பு கேட்கிறார். காலம் கடந்தாவது தங்களது தவற்றை உணர்ந்து திருத்திக்கொள்கிற திறந்த மனப் பான்மையுள்ள அவர்களோடு, 'தாசி புத்திரர்கள்' என்று எங்களை இழிவுபடுத்துகிற சொல்லைக் கூடத் திரும்பப் பெற முடியாதவர்களை எப்படி ஒப்பிட முடியும்?"

*''தமிழ்நாட்டில் வலுவாக இருக்கும் தி.மு.க-வை வீழ்த்த, 'பெரியார் எதிர்ப்பு அரசியலை' முன்னெடுக்கிறார்கள் வலதுசாரிகள்' என்ற விமர்சனத்தை உணர்ந்திருக்கிறீர்களா?''*

''பெரியார் பற்றி அவதூறாக, இல்லாததை இட்டுக்கட்டுகிறார் என்று ஆரம்பத்தில் ரஜினி காந்துக்கு கண்டனம் மட்டுமே தெரிவித்தோம். ஆனால், இப்போது பா.ஜ.க-வின் கட்டளையை ஏற்று, 'மன்னிப்பு கேட்கமாட்டேன்' என்று ரஜினிகாந்த் சொல்கிறபோதுதான் அவரை எதிர்த்து நாங்கள் போராடுகிற நிலைக்கு வந்திருக்கிறோம். இதனால், தி.மு.க-வுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதைப் பற்றியெல்லாம் நாங்கள் சிந்திக்கவில்லை.

எங்கள் தத்துவத் தலைவரைப் பற்றித் திட்டமிட்டுப் பொய்யாகப் பேசுகிறபோது, அதைக் கண்டிக்க வேண்டியதும், ஆணவமாக நடக்கிறபோது அதை எதிர்த்துப் போராடுவதுமான தேவையும் வந்துவிடுகிறது. அதேநேரம் தி.மு.க பற்றி எங்களுக்கு ஆயிரம் விமர்சனங்கள் இருந்தாலும் போதாமை பற்றி கருத்து கொண்டிருந்தாலும் இந்துத்துவா ஆபத்திலிருந்து மக்களைக் காக்கக்கூடிய ஒரே அரசியல் கட்சியாக நாங்கள் தி.மு.க-வை மட்டும்தான் பார்க்கிறோம்.''

*''தமிழகத்தில் பா.ஜ.க. காலூன்ற முடியாது; அரசியலில் ரஜினிகாந்த் வெற்றிபெற முடியாது என்றெல்லாம் விமர்சிக்கிற நீங்களே, ரஜினிகாந்த்தின் பேச்சுக்கு எதிராகப் பதறுவது உங்கள் பயத்தைத்தானே காட்டுகிறது?''*

''தமிழ்நாட்டில், பா.ஜ.க காலூன்றிவிடும்; ஆட்சியைப் பிடித்துவிடும், தாமரை மலரும் என்பதையெல்லாம் துக்ளக் படிக்கிற அறிவாளியான ரஜினிகாந்த்தே நம்பமாட்டார்.''

*''பெரியாரின் இனக்கொள்கை, மொழிக் கொள்கையை விமர்சிக்கும் பெ.மணியரசன், 'கடவுள் பக்தியை மறுக்கிற இவர்கள் பெரியார் பக்தியை மட்டும் தொடரலாமா...' என்று கேள்வி கேட்கிறாரே?''*

''சீமானைப் பற்றிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போதுதான் நான் தோழர் பெ.மணியரசனைப் பற்றியும் பேசவேண்டிவந்தது. அதாவது, 'இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தமிழ் அறிஞர்கள் தொடங்கினார்கள்; பெரியார் வந்து சேர்ந்துகொண்டார். சுயமரியாதைத் திருமணங்களைத் தமிழ் அறிஞர்கள் அறிமுகப்படுத்தினார்கள்; பெரியார் வந்து சேர்ந்துகொண்டார். தமிழ்நாடு தமிழருக்கே என்று தமிழ் அறிஞர்கள்தான் முதலில் சொன்னார்கள்; பின்னர்தான் பெரியாரும் சொன்னார்' என்று எப்போதுமே திசை திருப்பல் வாதங்களை வைத்துக்கொண்டிருப்பார் தோழர் மணியரசன்.

அவரது மூன்று விமர்சனங்களுக்கும் விளக்கமாக 'பெரியாருக்கு எதிரான முனை மழுங்கும் வாதங்கள்' என்ற தலைப்பில், தொடர் ஒன்றை எழுதி அதைப் புத்தகமாகவும் வெளியிட்டோம். ஆனால், இந்தப் புத்தகம் வெளிவந்த பின்னரும்கூட அதை உள்வாங்கிக் கொள்ளாமல், மீண்டும் பழைய விமர்சனத்தையே அவர் வைத்தபோதுதான் 'சீமான் பாவம் விவரம் தெரியாதவர், விட்டுவிடலாம்; ஆனால், அரசியல் தெரிந்த தோழர் பெ.மணியரசன் பேசுவதுதான் ஆபத்தானது' என்று நான் பேசினேன். அவர் வைத்த விமர்சனங்களுக்கு அறிவுபூர்வமான விவாதத்தை விடையாக முன்வைத்த பிறகும்கூட, அதற்கான அறிவுபூர்வமான பதிலைப் பேசாமல், அதே பழைய வாதங்களையே பேசிக் கொண்டிருந்தால், அவரைப் பற்றி என்ன சொல்ல முடியும்? இதில் பெரியார் பக்தி எங்கிருந்து வந்தது?''

*''பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதான கீழடி நாகரிகத்தைக்கூட 'திராவிட நாகரிகம்' என்று கட்டமைக்க முயல்வது சரிதானா?''*

''கீழடியைப் பொறுத்தவரை, 'தமிழர் நாகரிகம்' என்றுதான் நாங்கள் குறிப்பிட்டு வருகிறோம். அதேசமயம், அதை 'திராவிடர் நாகரிகம்' என்று குறிப்பிட்டாலும் தவறு இல்லை. ஏனெனில், எந்த ஒரு சொல்லுக்கும் இரண்டு சொற்கள் வரலாற்று ஆசிரியர்களால் பயன்படுத்தப்படும். ஒன்று எண்டோனிம் (endonym), இன்னொன்று எக்ஸோனிம் (exonym). இதில் என்டோனிம் என்பது, அந்தந்த மக்கள் தங்களைப் பற்றிக் குறிப்பிடும் சொல். எக்ஸோனிம் என்பது அந்த மொழிக்கு அப்பால் உள்ளவர்களால் குறிக்கப்படும் சொல்.

உதாரணமாக, கிரேக்கர்களை நம் தமிழ் இலக்கியங்கள் 'யவனர்கள்' என்றுதான் குறிப்பிடுகின்றன. அதுவே, கிரேக்கர்களிடம் போய், 'நீங்கள் யவனர்கள்தான்' என்று சொன்னால், 'இல்லை, இதை நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம்' என்று அவர்கள் சொல்ல முடியாது. ஏனெனில், 'இயோனியன் (ionian)' என்பதுதான் அவர்களது

பெயர்களில் ஒன்று. அதைத்தான் தமிழ்ப்படுத்தி நாம் 'யவனர்' என்று பயன்படுத்தி வருகிறோம். இந்தவகையில் பார்க்கும்போது, தமிழர் அல்லாத வரலாற்றாசிரியர்கள் அனைவருமே 'திராவிடன்' என்றே நம்மை அடையாளப்படுத்தியிருக்கிறார்கள். அடுத்ததாக, கீழடி நாகரிகம் என்பது தமிழ் மக்களால் மட்டுமே படைக்கப்பட்டதல்ல. இப்போது வேறு மொழி பேசிப் பிரிந்துபோனவர்களின் அப்போதைய மூதாதையரும் இங்கிருந்தவர்கள்தானே... எனவே, பிரிந்துபோன அந்த மக்களுக்குமான நாகரிகம்தான் கீழடி நாகரிகம்!

ஆரியர் வருகைக்கு முன், இந்தியா முழுக்கவே தமிழர்கள்தான் பரவிக்கிடந்தோம். ஆனாலும் தமிழர்களாக இப்போது நாம் ஒதுங்கி வந்துவிட்ட பின்னால், சிந்துவெளி நாகரிகத்தை 'தமிழர் நாகரிகம்' என்று சொல்லமுடியாது. அந்தக் காலகட்டத்தில் சிந்துவெளியில் இருந்த மக்கள் தமிழ் போன்றதொரு மொழியை உச்சரித்துப் பேசிவந்திருக்கலாம், அவ்வளவுதான்!"

***"சமீபகாலமாக ஈழத் தமிழ்த் தலைவர்கள் இந்துத்துவ சக்திகளோடு தங்களை இணைத்துக் கொண்டு தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க முயலும் முயற்சிகளை எப்படிப் பார்க்கிறீர்கள்?"***

"தங்களால் விடுதலையை வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் போராடிக் கொண்டிருந்தவர்கள், தனியொருவர் யாரையும் சார்ந்திருக்கவில்லை; அதேசமயம் எல்லோரையும் அனுசரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், 'தங்களால் முடியுமா, முடியாதா' என்ற சந்தேகத்துக்கு உட்பட்ட தன்னம்பிக்கையற்றவர்கள் தான் 'எங்கேயாவது சார்ந்து கொண்டு, சாய்ந்து கொண்டு இதை வெற்றிபெற முடியுமா' என்று இப்போதைய ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது அவர்கள் விருப்பம்."

***"ஈழத்தில், 'இறுதிப் போரின்போது காணாமல் போனவர்கள் உயிருடன் இல்லை' என்று கோத்தபய ராஜபக்சே சொல்கிறார்... பிரபாகரன், அவர் மனைவி மதிவதனி, மகள் துவாரகா, மற்றும் பொட்டு அம்மான் நிலை என்ன?"***

"நான் பகுத்தறிவுவாதி; ஆதாரம் இல்லாமல் எதையும் பேச முடியாது. 'பிரபாகரன் உயிரோடு இருக்க வேண்டும்' என்று விரும்புகிறேன். ஆனால், 'இருக்கிறாரா' என்பது எனக்குத் தெரியாது. ஏனெனில், காலம் தள்ளிப்போகப் போக, இவ்வளவு நெருக்கடிகளைத் தமிழ் மக்கள் சந்தித்துவருகிற சூழலிலும்கூட, 'பிரபாகரன், பொட்டு அம்மான் உயிரோடு இருந்திருந்தால், வராமல் இருந்திருப்பார்களா...' என்று அவர்களது இருப்பைப் பற்றிய ஐயம் எனக்குள் கேள்வியாக எழுகிறது."

**தி.மு.க பற்றி எங்களுக்கு ஆயிரம் விமர்சனங்கள் இருந்தாலும் போதாமை பற்றி கருத்து கொண்டிருந்தாலும் இந்துத்துவா ஆபத்திலிருந்து மக்களைக் காக்கக்கூடிய ஒரே அரசியல் கட்சியாக நாங்கள் தி.மு.க-வை மட்டும்தான் பார்க்கிறோம்.'**

***"ராஜீவ் படுகொலை வழக்கில் சம்பந்தப்பட்ட 'எழுவருக்கும் பா.ஜ.க ஆட்சியில் இருக்கும்வரை விடுதலை சாத்தியமில்லை' என்கிறாரே சுப்பிரமணியன் சுவாமி?"***

"மத்திய அரசின் பங்கு இல்லாமலேயே எழுவரையும் தமிழக அரசால் விடுதலை செய்ய முடியும். ஏனெனில், இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவு 72-க்கு என்ன மரியாதை உண்டோ அதே மரியாதை பிரிவு 161-க்கும் உண்டு. இரண்டும் சம வலிமை உடைய சட்டப்பிரிவுகள்தான். மாநில அமைச்சரவையின் சொல்லைக் கேட்டுச் செயல்பட வேண்டியதுதான் ஆளுநரின் வேலையே தவிர, அவராகவே சுயமாகச் செயல்பட முடியாது. ஆனால், அரசியல் சட்டம் காலக்கெடு விதிக்கவில்லை என்ற அம்சத்தை சாதகமாக்கிக்கொண்டு இந்தக் காலதாமதத்தைச் செய்து கொண்டிருக்கிறார் ஆளுநர்.

தமிழக அரசு, இரண்டாவது முறை தீர்மானம் நிறைவேற்றிவிட்டால், அவர்கள் எழுவரையும் விடுதலை செய்வதைத்தவிர ஆளுநருக்கு வேறு வழியில்லை. ஆனால், இரண்டாவது தீர்மானம் இயற்றுவதற்குத் துணிச்சல் இல்லாத மாநில அரசும் தனக்குக் கொடுக்கப்பட்ட வரையறைகளைக் கணக்கில் கொண்டு ஏமாற்றுகிற வஞ்சகம் நிறைந்த ஆளுநரின் போக்கும்தான் இன்றைய நிலைக்குக் காரணம்.

இவற்றுக்கு மாறாக ஒரு நாணயமான, நேர்மையான, சட்ட உணர்வுள்ள ஆளுநர் இருந்தாலோ அல்லது இரண்டாம் முறை தீர்மானம் நிறைவேற்றக்கூடிய துணிச்சலான மாநில அரசு இருந்தாலோ எழுவர் விடுதலை சாத்தியப்பட்டுவிடும். எனவே, எப்போதுமே இல்லை என்று நாம் அஞ்ச வேண்டியதில்லை!"

- ஆனந்தவிகடன்' ஏட்டுக்கு அளித்த பேட்டி



# கோயிலுக்குள் நுழையும் 'பிராமணர்கள்' இழிகுலத்தார் என விலக்கப்பட்டனர்

● வெ. ஜீவகுமார்

*தஞ்சாவூர் பரபரப்பாக உள்ளது. இங்கு கேட்கும் ஒலி குதிரையின் குளம்பு சப்தம் அல்ல. இளவரசிகளின் பெருமூச்சோ ராணிகளின் விசும்பலோ அல்ல. வரலாற்றுத் தேர் தன் தடத்தில் அழுந்த கால் பதித்து நடக்கும் ஒலிதான். இந்திய சுதந்திரத்திற்கு பிந்தைய மூன்றாவது குடமுழுக்குக்கு தஞ்சாவூர் பெரியகோயில் தயாராகிறது. இதற்கு முன் 1980, 1997களில் குடமுழுக்கு நடந்தது. பொதுவாக 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்கு என நியதி உண்டு. பெரிய கோவிலைப் பொறுத்தவரை அந்த நியதி நடைமுறையில் இல்லை. முதல் குடமுழுக்கு கி.பி 1010இல் நடந்தது. கி.பி 1729, 1843 ஆண்டுகளில் நடந்த குடமுழுக்குக்கு கல்வெட்டு ஆவண சாட்சியங்கள் உண்டு. கி.பி 1797இல் ஐரோப்பியர் ஒருவர் ஸ்ரீவிமானம் மேல் ஏறியதால் தூய்மை கெட்டதாக சம்ரோட்சணம் என்பது நடத்தப்பட்டுள்ளது.*

*இந்திய கோவில்களில் தலைசிறந்ததாக பெரியகோயிலை என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா போற்றுகிறது. கி.பி 1006ல் துவங்கப்பட்ட பெரியகோயிலின் கட்டுமானம் கி.பி 1010ல் முடிந்தது.*

*பாரந்தூக்கிகள் இல்லாத அக்காலத்தில் 42000 டன் எடையுள்ள கருங்கல் விமானம் உயர்த்தப் பட்டது. கடைக்காலில் துவங்கி விமானத்து சிகரம் வரை கருங் கற்களால் உருவாக்கப்பட்டது. 240 அடி நீளமும் 120 அடி அகலமும் கொண்ட கோவிலின் நடுப் பகுதியில் 216 அடி உயரம் உள்ள பிருமாண்ட கோபுரம் அமைக்கப்பட்டது.*

### கல்வெட்டு ஆய்வாளர் ஹீல்ஷ்

*மராத்திய மொழியில் எழுதப் பெற்ற தஞ்சைபுரி மான்மியமும் வடமொழியில் எழுதப்பட்ட பிரகதீஸ்வர மகாத்மியம் என்ற புராணமும் பெரியகோயிலை யார் கட்டியது என உதார் விட்டிருந்தனர். காடு வெட்டிச் சோழன் என்பவன் பெரிய கோயிலை கட்டியதாக ஜி.யு. போப் குறிப்பிட்டார். காடு வெட்டி சோழனும் ஜீபூம்பா பூதமும் கோவிலைக்கட்டியதாக வதந்திகள் உலவிய போது இல்லவே இல்லை என சொன்னவர் எச். ராஜா அல்ல. இராஜராஜ சோழன்தான் இதைக் கட்டியதாக 1886இல் கூறியவர் ஹீல்ஷ் என்ற ஜெர்மானியர் ஆவார்.*

*ஹீல்சை கல்வெட்டு ஆய்வாளராக நியமித்தனர். அவர் தஞ்சை பெரியகோயில் கல்வெட்டுகள் பலவற்றை படி யெடுத்து படித்தார். அக்கல் வெட்டுகள் அனைத்தும் தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி 2இல் உள்ளன.1892இல் வெங்கையா என்பவர் இதனை பதிப்பித்தார். கோவிலைக் கட்டியது சுற்றிலும் இருந்த 200 கிராமங்களை சேர்ந்த (சூத்திர-பஞ்சம) உழைப்பாளிகளே ஆவர். அவர்களுக்கு ஏட்டுக் கல்வி இல்லை. மாபெரும் கட்டுமான அறிவும், அர்ப் பணிப்பு உணர்வும் இருந்தது. கோயிலில் இறைவழிபாடு செய்ததும் தமிழர்களே. மாடுகள் கட்டப்பட்டிருந்த பெரிய கோயிலின் உள்ளே மாடங்களில் பறவைகள் கூடு கட்டிய பெரியகோயிலின் உள்ளே ஆடம்பரமோ படா டோபமான விளக்கொளியோ இல்லை. சொல்லப்போனால் பெரியகோயில் என்பது வழிபாட்டு கோயில் மட்டுமல்ல. தொன்மை வரலாற்றின் அருங் காட்சியகமாகவும் இது அமைந்தது. 1000 ஆண்டுகால தமிழக ஆடல் கலை, ஓவியம், சிற்பம் இவற்றின் வரலாறு அங்கு உள்ளது. பெரிய கோயிலில் தினமும் ஆலயத்தில் பண்ணிசையோடு தேவாரத் தமிழ் பாட 48 பிடாரர்களையும் இரண்டு இசைக்கருவி வாசிப் பவர்களையும் மன்னர் நியமித்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது.*

*பெரிய கோயிலில் பேரெழில் பொழியும் பால் பௌர்ணமி ஒளி கண்டு பூரிப்படைந் தோரில் பாண்டியர், போர்த்துக் கீசியர்கள், டச்சுக்காரர்கள், மராட்டியர், மாலிக்காபூர் என பலர் உண்டு. ஆனால் அடிப் படையில் அப்போது இந்து சட்டம் என்ற ஒன்று இல்லவே இல்லை. பார்ப்பனர்கள் கோயிலுக்குள் நுழையக்கூடாது என்றது ஆரம்பகால "பிராமணியம்". கோயிலுக்குள் நுழைந்து தொண்டு செய்யும் "பிராமணர்" இழிகுலத்தார் என்றது மனு சாஸ்திரம். ஆலயத் துக்குள் நுழைந்து வணங்கும் பிராமணர்கள் அப்போதே சாதி நீக்கம் செய்யப்பட்டனர். மானவர்கள் (Manova) என்ற சாதிக்கு மட்டுமே இந்து சட்டம் எழுதியதாக மனு குறிப்பிட்டார்.*

> **காடு வெட்டி சோழனும் ஜீபூம்பா பூதமும் கோவிலைக்கட்டியதாக வதந்திகள் உலவிய போது இல்லவே இல்லை என சொன்னவர் எச். ராஜா அல்ல. இராஜராஜ சோழன்தான் இதைக் கட்டியதாக 1886ல் கூறியவர் ஹீல்ஷ் என்ற ஜெர்மானியர் ஆவார்.**

*ஆகம விதிப்படி தீட்சதை பெறாவிட்டால் பிராமணர்கள் கூட கர்ப்பக் கிரகம் நுழையக் கூடாது என்றார் நீதிபதி சதாசிவ ஐயர். அர்ச்சகர்கள் என்போர் கோயில் உள்துறை ஊழியர்களே. எந்த சாதியினர் வேண்டுமானாலும் அர்ச்சகர் ஆகலாம் என்று தமிழகத்தில் அமைக்கப்பட்ட நீதிபதி மகராஜன் குழு அறிக்கை பரிந்துரை செய்தது. இந்தியா வில் அதை அமலாக்கியது கேரள இடதுசாரி அரசு. (தமிழ் நாட்டில் அனைத்து ஜாதி யினரும் அர்ச்சகராக உரிமை கோரி தி.மு.க. ஆட்சி இரண்டு முறை சட்டங்கள் கொண்டு வந்தது)*

### களவாடப்படும் வரலாறும் அழிக்கப்படும் அடையாளங் களும்

*வரலாறு தொடர்ந்து பெரிய கோயிலில் களவாடப்படுகிறது. 12 ஆண்டுகளுக்கு முன் கோயிலை பராமரிக்கப் போவதாக தொல்லியல் துறை யினர் பலகோடி ரூபாய் செலவு கணக்கு காட்டினர். எனினும் அங்கு பொறிக்கப்பட்டிருந்த இராஜராஜ சோழனின் நான்கு கல்வெட்டு தூண்கள் உடைக்கப்பட்டிருந்தன. தஞ்சை பெரியகோயில் தூய்மைப்பணி என ஆந்திர கம்பெனி ஓர் ஒப்பந்தம் செய்தது. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியினர் முன்னொரு காலத்தில் கோயிலை சத்திரமாக்கி தங்கி*

இருந்தனர். இதற்கான அறிவிப்பு கோயிலில் இரு இடங்களில் இருந்தது. அங்கு தங்கி இருந்த ஆங்கில சிப்பாய் ஒருவர் சுற்று மண்டப தூண்களில் ஒன்றை துப்பாக்கியால் சுட்டிருந்தார். குண்டு பாய்ந்த துளையுடன் விரிசலும் தெரிந்தது. தூணை மாற்றுவதாக கூறி திருச்சுற்று மாளிகையில் வடபுறத்தில் ஒரு பகுதியை பிரித்து மேய்ந்தனர். அடையாளங்கள் அழிக்கப் பட்டன. அங்கு புதிய தூண் அமைத்து புதிய கூரையும் கல்லால் அமைத்து கோடிக் கணக்கான ரூபாய் செலவு கணக்கு காட்டப்பட்டது.


1896ல் ஹீல்ஸ் படியெடுத்து வெளியிட்ட புத்தகம் மட்டுமே பல கல்வெட்டுகளுக்கு ஆதாரம். அத்தகைய உண்மைத் தூண்கள் இப்போது அங்கு இல்லை. காணாமல் போன கல்வெட் டுகள் ஏராளம். ஆங்கில ஏகாதி பத்தியத்தை எதிர்த்து போரா டியவர்கள் மருது சகோதரர்கள் ஆவர். அவர்களை கைது செய்ய ஆங்கில தளபதிக்கு மராட்டிய மன்னர்கள் தங்கள் தளபதியை அனுப்பி உதவினர். அந்த கல் வெட்டு செய்தி அங்கு உள்ளது. தஞ்சாவூரை சேர்ந்த வெட்டி யான் தொழில் புரிந்த இருவர் தங்களுக்குள் சண்டை யிட்டனர். இது குறித்து உண்மையை அறிவதாகக் கூறி கொதிக்கும் நெய்யில் இருவரையும் கையை விட சொன்ன தீர்ப்பு நாகரி எழுத்துகளில் கல்வெட்டில் உள்ளது. இவை பிந்தைய காலத்தில் பொறிக்கப் பட்ட கல்வெட்டுகள் ஆகும்.

**பண்பாட்டு ஆபத்தின் விளிம்பில்**

கடந்த 200 ஆண்டுகளில் மட்டும் பூமி சுமார் 10 நில நடுக்கங்களால் குலுக்கப்பட் டுள்ளது. 1342ஆம் ஆண்டில் தென்னகத்தை ஒரு பூகம்பம் அச்சுறுத்தியது. கேரளாவில் கொச்சி அருகே விபின் தீவு என்ற நிலத் திட்டே உருவானது. தஞ்சாவூர் பெரியகோயிலுக்கு அப்போதெல்லாம் எந்த ஆபத்தும் இல்லை. இப்போதோ பெரியகோயில் பண்பாட்டு கலாச்சார ஆபத்தின் விளிம்பில் நிற்கிறது. பெரிய கோயிலில் நடக்கும் பூசைகள் மேல்ஏகாதச ருத்ர ஜபம், ஸ்ரீருத்ராபிஷேக பூர்ய பிரசன்னாபிஷேகம், சூர்யஅக்கினி ஸங்கிரஹரணம், கும்பலங்காரம், தேவதா கலா கர்ஷணம், இஷ்ட தானம், தசதானம், பஞ்ச தானம், யாத்ரா தானம், யாதரா ஹோமம், யாக சானா பிரஷேகம், யாக பூஜை, ஹோமம், யாக்சனம், பிரமோசம், பூர்ணஹர்தி, தீபாராதனை, கோபூஜை, கஜ பூஜை, அஸ்வ பூஜை என்று அழைக்கப்படுகின்றன. சொற் களின் பூகம்பத்தால் பெரிய கோயிலில் தள்ளாடுகிறது.

இது தஞ்சையின் மொழி அல்ல. உழைப்பாளிகள் தங்கள் குலதெய்வத்தை மாரியம்மனை, காளி அம்மனை, பிடாரி கோயிலை வழிபடும் மொழி யால் தான் பெரியகோயிலிலும் வழிபாடு நடத்தினர். வழிபாட்டு மொழியில் தமிழ் வெல்வது மட்டும் அல்ல, வழிபாட்டு முறைகளில் கூட அன்னியம் தகர்க்கப்பட வேண்டும். “புதிய இந்தியா விவசாயிகளின் குடிசை களிலிருந்தும் அவர்கள் சுமந்த ஏர்க் கலப்பைகளிலிருந்தும் மீனவர்களின் குப்பங்களிலிருந் தும் செருப்பு தைப்பவர்கள், தெரு கூட்டுபவர்களின் தாழ்ந்த குடிசைகளிலிருந்தும் எழட்டும். இந்த எளிய மக்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் ஒடுக்கப் பட்டு வாழ்கின்றனர்.... முடிவற்ற வேதனை அவர்களுக்கு அளவற்ற ஆற்றலைத் தருகிறது..... புதிய விடியல் கீழ்வானில் செந்நிறம் பரப்பி படர்கிறது. புது யுகம் பிறக்கிறது” என்று விவேகானந்தர் ஒருமுறை கூறினார். தஞ்சையின் வீதி அமைப்பு கூட சாதி ரீதியாகவே அமைந்து இருந்தது. இப்போது தான் மாறி வருகிறது. வரலாற்று தேர் உருண்டு கொண்டே இருக்கும். அன்னியம் அகற்றப்பட்டு பெரியகோயிலும் தஞ்சை உழைப்பாளி மக்களால் சுவீகரிக்கப்படும்.

**இணையத்திலிருந்து**



புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.org

ஆண்டுக் கட்டணம் ரூ.200

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.

✆ 7373684049 – periyarmuzhakkam@gmail.com

# ‘டாம்பாய்’ : பெண் விடுதலையின் அடையாளம்



பெண்ணுரிமை என்று பலரும் பேசிய காலத்தில் ‘பெண் விடுதலை’யை முன்மொழிந்தார் பெரியார். பெண் ஆண் வேறுபாடு எந்த வடிவிலும் அழிக்கப்பட்டாக வேண்டும் என்று கூறிய பெரியார், பெண்கள் - முடிவெட்ட வேண்டும்; ஆண்களைப்போல உடையணிய வேண்டும்; ஆண்மை என்ற பதம் அகராதியில் இருக்கக் கூடாது என்றார். கருப்பையை வெட்டி எறியுங்கள் என்ற எல்லை வரை அவரது புரட்சிக் குரல் ஒலித்தது. பெரியார் காண விரும்பிய விடுதலைப் பெண்கள், இப்போது ஏராளமாக உருவாகி விட்டனர். ‘டாம்பாய்’ என்ற அடையாளத்துடன் வலம் வரும் பெண்கள், பெண்களுக்கான புடவை, சுடிதார்களுக்கு விடை கொடுக்கத் தொடங்கி விட்டதை விளக்குகிறது இக்கட்டுரை.

பசங்களுக்கு ‘புள்ளிங்கோ’ லுக் அடையாளமாகிவிட்டது. அந்தப் புள்ளிங்கோக்களுக்கே கடும் போட்டி கொடுக்கும் இளம் பெண்களும் இருக்கிறார்கள். அந்தப் பெண்கள் ‘டாம்பாய்’ என்ற திருநாமத்துடன் அழைக்கப்படுகிறார்கள். முன்பைவிட ‘டாம்பாய்’ பெண்கள் இப்போது அதிகரித்திருக்கிறார்கள். இளம் பெண்களின் இந்த ‘டாம்பாய்’ அவதாரத்துக்கு என்ன காரணம்?

நீண்ட தலைமுடி என்பது பெண்களின் அடையாளமாகவே மாறிவிட்டது. குட்டை முடியுடன் வலம் வரும் மகள்களைப் பார்த்தாலே வீட்டில் சாமியாடும் அம்மாக்களும் இருக்கிறார்கள். ஆனால், இன்றோ ஆண்களைப் போலவே முடியை வெட்டிக்கொள்ளும் போக்கு இளம் பெண்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

‘டாம்பாய்’ லுக் என்ற டிரெண்ட் இன்று பெருநகரங்களைத் தாண்டி சிறு நகரங்கள்வரை இளம் பெண்களிடம் ஊடுருவிக்கொண்டிருக்கிறது. இந்த ‘டாம்பாய்’ ஸ்டைலின் பின்னணியில் கல்வி அறிவு, சமூக மாற்றம், ஆண்-பெண் சமத்துவம் போன்ற விஷயங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

‘டாம்பாய்’கள் என்று அழைக்கப்படுவோரெல்லாம் ஸ்டைலுக்காக மட்டும் சிகை அலங்காரத்தை மாற்றிக்கொள்வதில்லை. ‘டாம்பாய்கள்’ என்போர்,

ஆண்களைப் போல் தலைமுடி வைத்துக் கொள்ளவும் உடையணியவும் எந்தவித தயக்கமோ அச்சமோ இல்லாமல் தன்னுடைய கருத்துகளை வெளிப்படுத்தவே என்கிறார்கள் ‘டாம்பாய்’ ஸ்டைலை விரும்பும் பெண்கள். இன்னும் சொல்லப்போனால், மாற்றத்தை விரும்பும் பெண்களால் உருவானதுதான் ‘டாம்பாய்’ லுக் என்றும் சொல்கிறார்கள்.

பெண்ணுடைய சுதந்திரம் என்பது உருவத் தோற்றத்தால் மட்டும் தீர்மானிக்கப்படக் கூடாது என்பதுதான் ‘டாம்பாய்’ பெண்களின் நோக்கம். ஆண்களுக்கு உள்ள அதே சுதந்திரம் பெண் களுக்கு இருக்க வேண்டும் என்கிறார்கள் ‘டாம்பாய்’கள். அதன் முதல் படிதான் ஆண்களைப் போல் சிகை அலங்காரம் செய்துகொள்வது. ஆண்களைப் போலவே சட்டை, பேண்ட், ஷூ எனப் பெண்ணின் வெளிப்புறத் தோற்றத்தை மாற்றிக்கொள்வதும்.

இப்படிச் சிகை அலங்காரம், உடை மாற்றம் செய்து கொள்வது தன்னம்பிக்கையை அளிக்கிறது என்கிறார் மதுரையைச் சேர்ந்த ‘டாம்பாய்’ சுரேகா.

**கெத்தா ஃபீல்**

“எனக்குச் சின்ன வயசுலேர்ந்து அண்ண னுடைய சட்டை, பேண்டு போட்டுக் கொள்ளப் பிடிக்கும். சுடிதார், புடவை அணிவதென்றால் அசௌகரியமா உணருவேன். இந்த உடையை அணிந்தால், அதன் மீதே நம் கவனம் இருந்து கொண்டேயிருக்கும். ஆனால் சட்டை, பேண்ட் அணியும்போது அந்தப் பிரச்சினையே இல்ல.

உடை மீதே கவனம் செலுத்த வேண்டிய தேவையே இருக்காது” என்கிறார் சுரேகா. மதுரை சட்டக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வரும் சுரேகா பேண்ட், சட்டை மட்டுமல்லாமல் வேட்டி, சட்டை அணிந்துகொண்டு கல்லூரிக்குச் செல்வதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார்.

“இந்த மாதிரி டிரஸ் போடுவதே தைரியத்தையும் துணிச்சலையும் கொடுக்குது. ரோட்டுல நடந்துபோகும் போதே கெத்தா உணர்வேன். தவறான எண்ணம் கொண்ட ஆண்கள்கூடத் தோற்றத்தைப் பார்த்து விலகிப் போறாங்க. மகள், மகன் என்ற பாகுபாடுயெல்லாம் எங்க வீட்டுல கிடையாது.

அதனால் என்னுடைய விருப்பப்படி இருக்க முடியுது. ஆண்களைப்போல் டிரஸ் போடும் போது என்னோட தலைமுடி கொஞ்சம் இடைஞ்சலா இருந்தது. இந்த முடியை என்ன பண்ணலாம்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன், அப்போதுதான் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு தானம் கொடுக்கலாம்னு முடிவு பண்ணி முடியை வெட்டிட்டேன்” என்கிறார் சுரேகா.

**சுதந்திர உணர்வு**


பெண்களின் வெளித்தோற்றம் ஆணாதிக்கச் சிந்தனைகளாலேயே நிர்ணயிக்கப்படுகிறது என்பதும் டாம்பாய்கள் வைக்கும் புகாரில் ஒன்று. “பள்ளியில் படித்த காலத்தில் ரெட்டை ஜடையுடன் தான் செல்வேன். முழங்கால் அளவு எனக்குத் தலைமுடி இருந்துச்சு. எப்போது நான் வெளியே போனாலும் ‘நீ ஒரு பெண்’ என்ற வார்த்தை எனக்குள் கேட்டுக்கிட்டே இருக்கும். அது என்னை மனதளவில் பாதிச்சது. பிறகுதான் என் தலைமுடியை வெட்டிக்கொண்டேன், சுடிதார்களை விட்டுவிட்டு பேண்ட், சட்டைக்கு மாறினேன்.

இந்தத் தோற்றம் எனக்குச் சுதந்திர உணர்வைக் கொடுத்தது. பிறகு பைக் ஓட்ட கற்றுக்கொண்டேன். ஆண்கள் என்னை எளிதாக அணுக முடியாது என்ற நம்பிக்கையை அது விதைச்சது. இந்த லுக்கில் நான் ரொம்ப மகிழ்ச்சியாக உணர்கிறேன்” என்கிறார் ஷாமிலி. ஒளிப்படக் கலைஞராக உள்ள ஷாமிலி தென்னிந்தியாவின் சிறந்த பெண் ஒளிப்படக் கலைஞர் என்ற தொழில்முனைவோர் விருதைப் பெற்றவர்.

‘டாம்பாய்’ தோற்றத்தில் உள்ள பல பெண்கள் தங்களுடைய இந்தத் தோற்றம் தன்னம்பிக்கையை அளிக்கிறது என்று கூறினாலும், அதைப் பற்றிச் சமூகத்தில் சரியான புரிதல் இல்லாத நிலை இருப்பதையும் பார்க்க முடிகிறது. ”ஒரு பொண்ணு பையன் மாதிரி டிரஸ் பண்ணினா அவங்களைத் தன்பாலினத்தவர் எனத் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள்.

இந்த எண்ணம் மாறணும். ஆணும் பெண்ணும் சமம் என்பதை வலியுறுத்துவதுதான் ‘டாம்பாய்’ தோற்றத்தின் அம்சம். நாம் உடுத்தும் உடை சவுகரியமாக இருக்கிறதா அல்லது நம்மைக் காட்சிப் பொருளாக்குகிறதா என்ற தெளிவு அனைவருக்கும் இருக்கணும். அதற்கு உதவியாக இந்த ‘டாம்பாய்’ லுக் இருக்கிறது” என்கிறார் ஷாமிலி.

நன்றி : ‘தமிழ் இந்து’ இணைப்பு, பிப். 4, 2019




# அறிவியலால் விடை காண முடியாத 'அற்புதங்கள்' ஏதும் இல்லை

***உச்சநீதிமன்ற நீதிபதி இராம சுப்பிரமணியம் நூலுக்கு ஆணித்தரமான அறிவியல் மறுப்பு***

● எட்வின் பிரபாகரன்

இப்போது உச்சநீதிமன்ற பதவியாக இருக்கும் வெ. இராம சுப்பிரமணியம், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தபோது அறிவியலையே கேள்விக்குள்ளாக்கும் தொடர் கட்டுரை ஒன்றை 'தினமணி' நாளேட்டில் எழுதினார். அறிவியல் மனப்பான்மையை வளர்த்தெடுக்க வேண்டிய சட்டக் கடமையிலிருந்து விலகி, 'அறிவியலுக்கு அப்பால்' அற்புதங்களைத் தேடிய அவரது கட்டுரைத் தொடர் பிறகு நூலாகவும் வெளியிடப்பட்டது. நீதிபதி எடுத்து வைத்த கருத்துகள் அறிவியலா? அறிவியல் என்ற பெயரில் பரப்பப்பட்ட கற்பனைச் சரடுகளா? இந்தக் கேள்விகளுக்கு ஆணித்தரமான மறுப்பைத் தருகிறது

இக்கட்டுரை. முக்கியத்துவம் பெற்ற இக்கட்டுரையை அறிவியலில் பகுத்தறிவில் உடன்பாடு உள்ள அனைவரும் மக்களிடம் பரப்ப வேண்டும்.

– ஆசிரியர்

"அறிவியலுக்கு அப்பால்" என்ற பெயரில் நீதியரசர் வெ. இராம சுப்ரமணியன், ஒரு நூலை 2014ஆம் ஆண்டு எழுதியுள்ளார். அறிவியலால் விடை கூறமுடியாத புதிர்களாக அவர் கருதியனவற்றை தொகுத்தளித்துள்ளார். அவர் புதிர்களாக கருதியவற்றுக்கு விடை காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

புதிர் 1: இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ரோஸ் மேரி பிரவுன் என்பவர், மறைந்த இசைக் கலைஞர்கள் பலரின் ஆவியோடு பேசி அவர்களின் இசையை உள்வாங்கி இசையமைத்தார். இத்தனைக்கும் அவர் இசை கற்காதவர். இன்று வரை அவர் எப்படி இசையமைத்தார் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

விடை: 1994இல் ராபர்ட் கரோல் தொகுத்த "The skeptics Dcitionary"யில் (கேள்வி கேட்போர் அகராதி) இதற்கான விடை உள்ளது. எல்லோரும் சொல்வதைபோல, ரோஸ் மேரி பிரவுன் இசை தெரியாதவரல்ல. அவர் 2 ஆண்டுகள் இசை பயிற்சி பெற்ற தகவலும் இந்த அகராதியில் உள்ளது. அது மட்டுமல்லாமல், அவருடைய குடும்பமே இசைக்குடும்பம் என்பதையும் அவர் மறைத்துள்ளார். 1989இல் வேரன் ஜோன்ஸ் எழுதிய "Anomalistic psychology: A study of Magical thinking" என்ற நூலில் ரோஸ் மேரி பிரவுனின் இசைகளை ஆய்வு செய்து, அது அவருடைய ஆழ்மனதில் இருந்து வந்தவையே தவிர, ஆவிகளோடு பேசி பெறப் பட்டவையல்ல என்பதை நிரூபித்துள்ளார். 1989லேயே நிரூபிக்கப்பட்ட ஒன்று, 2014இல் நூலை எழுதிய நூலாசிரியருக்கு புதிராகத் தெரிவது விந்தையிலும் விந்தை.

புதிர் 2: ஜூலெஸ் வெர்னே என்ற நாவலாசிரியர் எழுதியவையெலாம் அப்படியே பிற்காலத்தில் நடந்துள்ளன. 1870 இல் "Around the Moon" (நிலவைச் சுற்றி என்ற நூலை எழுதினார். அந்நாவலில் அவர் 4 விஷயங்களை எழுதியிருந்தார். 1. கேப்டவுனில் இருந்து நிலவுக்கு

**அமெரிக்க அதிபர் கென்னடியின் கொலையை முன்கூட்டியே கனவில் கண்டதாக கருதப்பட்ட ஜீயேன் டிக்சனுடைய பல கனவுகள் பொய்யாகிப் போயுள்ளன. பார்ப்பனர்களை எதிர்த்தால் நீங்கள் கொல்லப்படுவீர் என்று காந்தியிடமே பெரியார் கூறியதற்கு பின்னால், எந்த தெய்வீக சக்தியும் இல்லை. மாறாக, சமூக, அரசியல் அறிவே இருந்தது.**

செயற்கைக்கோள் அனுப்பப்படும். 2. செயற்கைக் கோள் கோண வடிவில் இருக்கும். 3. அதில் 3 பயணிகள் பயணிப்பார்கள், 4. 39, 600 கிலோ மீட்டர் வேகத்தில் செயற்கைகோள் நிலவை அடையும். அவர் இவற்றை எழுதி 99 ஆண்டுகளுக்கு பின், இவையனைத்தும் நடந்தன. 1969இல் கேப் டவுனில் இருந்து அப்போல்லோ 11 என்ற கோண வடிவிலான செயற்கைகோள், மூன்று பயணி களுடன் (எட்வின், ஆர்ம்ஸ்ட்ராங்க், காலின்ஸ்), 38, 500 கிலோமீட்டர் வேகத்தில் நிலவை அடைந்தது. நடக்கப்போவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் ஆன்மீக சக்தி அவரிடம் இருந்தது.

விடை: எதிர்காலத்தில் நடக்கப்போகும் அறிவியல் மாற்றங்களை முன்கூட்டியே கணிப் பதற்கு ஆன்மீக சக்தி எதுவும் தேவையில்லை. அறிவியல் போகும் திசையை படித்து, கற்று உணர்ந்திருந்தாலே போதும். பெரியார் தன்னுடைய "இனி வரும் உலகம்" (1943) என்ற நூலில் சோதனைக்குழாய் குழந்தை, அலைபேசி போன்ற எதிர்கால அறிவியல் கண்டுபிடிப்புகளை கணித்து கூறியிருந்தார். இதற்கு காரணம் ஆன்மீக சக்தியல்ல. பெரியார் அறிவியலின் போக்கை உன்னிப்பாக கவனித்ததே காரணம். இது தர்க்கரீதியான பதிலாக இருந்தாலும், ஜூலெஸ் வெர்னே தன்னுடைய கணிப்பைப் பற்றி என்ன சொன்னார் என்று தெரிந்து கொள்வது அவசியமாகும். Strand என்ற இதழில், 1895இல், மரியி பெல்லோக் எழுதிய "வீட்டில் ஜூலெஸ் வெர்னே" என்ற கட்டுரையில் ஜூலெஸ் வெர்னேவின் பேட்டி பதிவாகியுள்ளது. எதிர்கால கண்டுபிடிப்புகளை வெர்னே நாவலில் குறிப்பிட்டது தற்செயலானது என்றும், கதைகளை எழுதுவதற்கு முன், புத்தகங்கள், செய்தித்தாள்கள், இதழ்கள், அறிவியல் அறிக்கைகள் ஆகியவற்றை படித்து விட்டு எழுதியதாகவும் அவரே ஒப்புக் கொண்டுள்ளார். எனவே, இதில் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி

எதுவும் இல்லை.

புதிர் 3: கனவுகள், அறிவியல் கண்டு பிடிப்புகளின் அடிப்படையாக இருந்துள்ளன. Benzene மூலக்கூற்றின் வடிவத்தை ஃப்ரடரிக் வோன் தன் கனவிலேயே முதலில் கண்டார். நரம்பு அதிர்வுகள் மின்சக்தியாக கடத்தப்படவில்லை; ரசாயன மாற்றங்களாகத் தான் கடத்தப்படு கின்றன என்று ஓட்டோ லூயி கண்டுபிடித்ததும் கனவில் தான். தையல் இயந்திரத்தின் வடிவமைப்பு, எலியஸ் ஹோவேயின் கனவில் தான் முதலில் வந்தது. துப்பாக்கி ரவை செய்யும் தொழில் நுட்பத்தை ஜேம்ஸ் வாட் கனவாகக்கண்டார். இத்தகைய கனவுகளுக்கு அறிவியலில் விளக்கம் இல்லை.

விடை: உளவியல் ஆராய்ச்சியாளர் சிக்மண்ட் ஃப்ரூட், "ஆழ்மனத்தின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் விதமாகவே கனவுகள் வருகின்றன" என்றார். தற்கால உளவியல் ஆராய்ச்சியாளரான டெய்ர்ட்ரே பாரெட், மூளையில் ஏற்படும் ரசாயன எதிர்வினைகளால் தான் கனவுகள் உருவாகிறது என்று கண்டு பிடித்துள்ளார். இந்த எதிர்வினைகளுக்கும், நம்முடைய சிந்தனைகளுக்கும் தொடர்புண்டு. நீண்ட நாட்களுக்கு ஆராய்ச்சியில் ஈடுபடும் ஒரு விஞ்ஞானிக்கு, அவருடைய ஆராய்ச்சியோடு தொடர்புடையவை கனவாக வர வாய்ப்புகள் அதிகம். எனவே ஆராய்ச்சி சார்ந்த சிந்தனைகள் தான் கனவுக்கும், அறிவியல் கண்டுபிடிப்பு களுக்கும் அடிப்படையே தவிர, கனவுகள் கண்டு பிடிப்புகளுக்கு அடிப்படையாகாது. அமெரிக்க அதிபர் கென்னடியின் கொலையை முன்கூட்டியே கனவில் கண்டதாக கருதப்பட்ட ஜீயேன் டிக்சனுடைய பல கனவுகள் பொய்யாகிப் போயுள்ளன. பார்ப்பனர்களை எதிர்த்தால் நீங்கள் கொல்லப்படுவீர் என்று காந்தியிடமே பெரியார் கூறியதற்கு பின்னால், எந்த தெய்வீக சக்தியும் இல்லை. மாறாக, சமூக, அரசியல் அறிவே இருந்தது. அதைப்போலவே தான் கென்னடியின் மரணத்தை கணிக்க கனவுகள் தேவையில்லை. அரசியல் அறிவே போதும். கனவுகளில் பெரும்பாலானவை பலிப்பதில்லை.

புதிர் 4: உரி கெல்லெர் என்பவர் 23.11.1973 இல் பிபிசி தொலைக்காட்சியில், உலோகப் பொருள்களை பார்வையாலும், தொடுதலாலும் வளைத்துக் காட்டியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. ஹெரால்ட் புத்தோஃப், ரஸல் டர்க் ஆகிய ஆன்மீக உளவியல் ஆராய்ச்சியாளர்கள் உரி கெல்லெரை சோதித்துப் பார்த்து, அவரிடம் உள்ள அமானுஷ்ய சக்தியை ஒப்புக்கொண்டனர். இதை எந்த அறிவியல் வல்லுனராலும் விளக்க முடியவில்லை.

விடை: மார்க்ஸ் டேவிட் என்ற உளவிய லாளரிடம் இதற்கான பதில் உள்ளது. அவர் 25க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள், "The Non- Psychic powers of Uri Gellar" என்ற நூல் புகழ்பெற்றது. 1977இல் எழுதப்பட்ட இந்த நூலில் உரி கெல்லரின் தில்லுமுல்லுகளை மார்க்ஸ் டேவிட் அம்பலப்படுத்தியுள்ளார். ஹெரால்ட் புத்தோஃபும், ரஸல் டர்க்கும் செய்த ஆய்வே மோசடியானதாகும். உரி கெல்லரை ஆய்வுக்கு உட்படுத்திய அறையில் சில ஓட்டைகள் இருந்தன அதன் வழியே படங்களை பார்க்கும் வசதி உரி கெல்லருக்கு இருந்தது. மேலும், ஆய்வாளர்களுக்கும் கெல்லருக்கும் இடையே "இன்டர்காம்" எனப்படும் தொலைபேசி வசதியும் இருந்தது. இதனூடே, ஆய்வாளர்கள் பேசிக் கொள்வதை கெல்லரால் கேட்டிருக்க முடியும். எனவே, இந்த ஆய்வை நிராகரிக்கும் மார்க்ஸ் டேவிட், அறிவியல்ரீதியாக கட்டுப்படுத்தப்பட்ட நிலைமையில் செய்யப்படும் ஆய்வு தான் சரியான ஆய்வாக இருக்க முடியும் என்று நிறுவுகிறார். Brian Sapient என்பவர், "Rational Response Squad" (பகுத்தறிவு மறுமொழிக் குழு) என்ற யூடியூப் கணக்கில் பதிவேற்றிய காணொளியில், உரி கெல்லெர் தன்னுடைய வித்தையை செய்ய முயன்று தோற்றுப்போன தருணங்களை சேர்த்திருந்தார். இதனை எதிர்த்து காப்புரிமை வழக்காடி உரி கெல்லெர் தோற்றுப்போனது குறிப்பிடத்தக்கது.

புதிர் 5: சோவியத் ரஷ்யாவில் மேடம் நீனா குலகினா என்பவர் இருந்தார். அவர் பார்வையாலேயே பொருள்களை நகர்த்தும் திறன் பெற்றிருந்தார். நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் உட்பட பலரும் அவரை சோதித்தனர். யாராலும் அவருடைய சக்தியை மறுக்க முடியவில்லை

விடை: 1983 இல் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழக அச்சகம் வெளியிட்ட "Science: Good, Bad & Bogus" என்ற நூலில் இந்த சித்து விளையாட்டு களைப் பற்றிய தகவல்கள் உள்ளன. சோவியத் விஞ்ஞானிகளிடம், ஒரு முறைக்கு மேல்,

**முறையாக மருத்துவம் கற்காமல் வைத்தியம் பார்த்ததாலும், மருத்துவ உரிமம் இல்லாததாலும் இருமுறை சிறை சென்றவர் அரிகோ.**

ஏமாற்றும் போது மேடம் நீனா குலகினா சிக்கியுள்ளார்.1991 இல் சோவியத் ரஷ்யா உடைந்த பின், 2002ஆம் ஆண்டு, லெவி ஜோயல் என்ற ஆய்வாளர் எழுதிய, "K.I.S.S. Guide to the Unexplained" என்ற நூலில், மேடம் நீனா குலகினா, பொருள்களை அசைக்க கண்ணுக்கு புலப்படாத நூலை பயன்படுத்திய தகவலும், காந்தங்களை மறைத்து வைத்து பயன்படுத்திய தகவல்களும் உள்ளன. எனவே, மேடம் நீனா குலகினா செய்வதை ஒரு மாயாஜால ஏமாற்று வேலை என்று தான் கருத முடியும்.

**புதிர் 6: ராபர்ட் எம். மில்லெர் என்ற விஞ்ஞானி தன்னுடைய தோட்டத்தில் புற்களை வளர்த்தார். பிரார்த்தனைகளுக்கு சக்தி உண்டா? என்பதை அறிய ஒரு சோதனையை நடத்தினார். பிரார்த்தனைக்கு பேர்போன ஒல்க வோரல் & அம்புரோசு தம்பதியினரை தன்வீட்டில் பிரார்த்தனை செய்ய அழைத்தார். அவர்கள் பிரார்த்தனை செய்யாத நேரத்தில் 0.00625 அங்குலம் வளர்ந்த புற்கள், பிரார்த்தனை செய்யும்போது, 0.0525 அங்குலம் வளர்ந்ததைக் கண்டார். பிரர்த்தனைக்கு சக்தியுண்டு என்பதை உணர்ந்து கொண்டார்.**

விடை: முதலில் இது நடந்த சம்பவமா? கற்பனையா? என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது. எப்படியிருப்பினும், தாவரங்களின் வளர்ச்சி எவற்றை சார்ந்து உள்ளது என்பதை இங்கு காண்போம். பொதுவாக, ஒரு தாவரத்தின் வளர்ச்சி, ஒளி, நீர், தட்பவெப்பநிலை, சத்துப் பொருள்கள் போன்றவற்றை சார்ந்து தான் இருக்கிறது. பிரார்த்தனையினால் தாவரம் வளர்ந்ததாக எந்த ஒரு ஆய்வு அறிக்கையும் இல்லை. ஒருவேளை மேற்கூறிய சம்பவம் உண்மையாக நடந்திருந்தால், அதற்கு வேறு சில அறிவியல் காரணங்கள் இருக்கலாம். தாவரங்கள், பொதுவாக மாலை & இரவு நேரங்களில் அதிகமாக வளர்கின்றன. அந்த நேரத்தில் பிரார்த்தனை செய்தால், தாவர வளர்ச்சிக்கு பிரார்த்தனை தான் காரணம் என்று தவறாக முடிவெடுக்க வேண்டியிருக்கும். அதே போல், சில தாவரங்கள் ஒலியைச் சார்ந்து வளர்கின்றன. "Research in Plant Diseases" (தாவர நோய்களில் ஆராய்ச்சி) என்ற ஆய்விதழில் 2014ஆம் ஆண்டு வெளியான "Update on the effects of sound wave on plants" என்ற ஆய்வறிக்கையில், குறிப்பிட்ட மாதிரியான ஒலியை எழுப்புவது, சில தாவரங்களின் வளர்ச்சிக்கு பயன்படும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, பிரார்த்தனையின் போது, குறிப்பிட்ட ஒலியால் வளரக்கூடிய தாவரமாக அந்த புற்கள் இருந்திருந்தால், ஒலியினால் வளர்ந்திருக்குமேயன்றி பிரார்த்தனையால் வளர்ந்திருக்க முடியாது. அதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

**புதிர் 7: ஜேம்ஸ் எஸ்டெய்ல் (1808 – 1859) என்ற அறுவை சிகிச்சை நிபுணர், பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தில் வேலை பார்த்தார். அப்போது, மயக்க மருந்து இல்லாமல், hypnotism (அறிதுயில் நிலை – மன வசியம்) மூலம் நோயாளிகளை அரை மயக்க நிலையடையச் செய்து அறுவை சிகிச்சை செய்து சாதனை படைத்தவர். மனவசியத்துக்கு இன்று வரை எந்த அறிவியல் விளக்கமும் இல்லை. ரமண மகரிஷி தன்னைத் தானே மன வசியம் செய்துகொண்டவர்.**

விடை: ஜேம்ஸ் எஸ்டெய்ல் செய்த மன வசியத்தின் பலன் எதுவும் ஆய்வு செய்யப்பட்டு, ஆவணப்படுத்தப்படவில்லை. எனவே, அது மிகவும் பலனளிக்கவல்லது என்று கூற முடியாது. இன்று வரை, hypnotism (அறிதுயில் நிலை) என்பதை ஒரு பெரும்பயனுள்ள முறை என்று நிரூபிக்க போதிய சான்றுகள் இல்லை. எனவே, மனவசியம், மாற்று மருத்துவத்தின் பகுதியாகத் தான் பார்க்கப்படுகிறது. எனவே, மனவசியத்தை பற்றிய மிகைக்கூற்றை ஏற்க முடியாது. அதுவும், ரமண மகரிஷி இதை செய்தார் என்று நம்புவதற்கு எந்தவித முகாந்திர மும் இல்லை. தனது சொத்துக்களையெல்லாம் குடும்பத்தினருக்கு எழுதி வைத்துவிட்டு புற்று நோயால் மரணமடைந்தவர் ரமணரிஷி.

**புதிர் 8: பிரேசில் நாட்டைச் சேர்ந்த அரிகோ என்ற விவசாயி, பல மருத்துவர்களால் குணப்படுத்த முடியாத நோய்களை குணப் படுத்தினார். துருப்பிடித்த கத்தியையும், கத்தரிக்கோலையும் வைத்தே அறுவை சிகிச்சை செய்தார். முறையாக மருத்துவம் படிக்காத இவரால் எப்படி அறுவை சிகிச்சை செய்ய**

முடிகிறது? என்ற கேள்விக்கு மருத்துவ உலகில் பதில் இல்லை.

விடை: முதலில் அரிகோ பல நோய்களை குணப்படுத்தியதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. உலகப் புகழ்பெற்ற நாத்திக அறிஞர் ஜேம்ஸ் ரண்டி, 1982 இல் இதை பற்றி "Film – Flam Psychics Especially Unicorns & other delusions" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். மாயாஜாலம் (தந்திரம்) செய்பவர்களின், மக்களை ஏமாற்றும் "கை சாதுரியத்தை" விளக்கும் படங்களை வெளியிட்டு, அதனை அரிகோவின் கை சாதுரியத்தோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். முறையாக மருத்துவம் கற்காமல் வைத்தியம் பார்த்ததாலும், மருத்துவ உரிமம் இல்லாததாலும் இருமுறை சிறை சென்றவர் அரிகோ. இவருடைய பெரும்பாலான நோய் குணப்படுத்துதல் என்பது, இயேசு கிறிஸ்து பார்வையற்றவர்களுக்கு பார்வை அளித்ததைப் போன்ற கட்டுக்கதையே ஆகும்.

*புதிர் 9: பிரஞ்சு புரட்சி நடைபெறுவதற்கு 4 ஆண்டுகளுக்கு முன்பு இளவரசர் கலந்துகொண்ட கேளிக்கை விருந்தில், ஜாகுயெஸ் கஸோட் என்பவர் ஆளும்வர்க்கத்தினர் ஒவ்வொருவரும் எப்படி கொல்லப்படுவார்கள் என்று துல்லியமாகக் கணித்தார். தற்கொலை செய்பவர்கள், எத்தனை முறை கத்தியால் கீறி இறப்பார்கள் என்பதுவரை கணித்தார். அவர் சொன்னதைப் போலவே, 1792இல் நடந்த புரட்சியில் ஆளும்வர்கத்தினர் பலர் கொல்லப்பட்டனர். எதிர்காலத்தில் நடக்கப் போவதை ஜாகுயெஸ் கஸோட் முன்கூட்டியே கணித்தது எப்படி என்பது புரியாத புதிராகவே உள்ளது.*

விடை: நடிகர் ரஜினிகாந்த், துக்ளக்கில் (1971) சோ, பெரியார் ராமன் சிலையை நிர்வாணமாக எடுத்துச் சென்றதாக துணிச்சலாக எழுதியுள்ளதாகக் கூறினார். ஆனால், ஆதாரம் எங்கே? என்று கேட்டபோது, 2017இல் வெளியான அவுட்லுக் இதழை காண்பித்தார். 1971இல் நடந்த சம்பவத்துக்கு 1971 துகளக்கை தானே ஆதாரமாகக் காட்டியிருக்க வேண்டும்? அதே போல, 1788இல் கஸோட் சொன்ன தீர்க்கதரிசனங்களுக்கு 1788இல் ஆதாரம் காட்டுவது தானே முறையாகும்!! ஆனால், கஸோட்டை தீர்க்கதரிசியாகக் காட்டுபவர்கள் 1805ஆம் ஆண்டு லவு ஹார்ப் என்பவர் தொகுத்த நூலையே சான்றாகக் காட்டுகின்றனர். எனவே, இத்தகைய கணிப்பு நடந்திருக்க வாய்ப்பே இல்லை. பிறரின் இறப்பை கணிக்கத் தெரிந்த கஸோட்டால், தன் இறப்பை கணிக்கத் தெரியவில்லை. அதே பிரஞ்சு புரட்சியில் அவரும் கொல்லப்பட்டார்.

**எவ்வளவோ சோதனைகளை நடத்திய போதும், நுண்ணுணர்வை நிரூபிக்க ஒரு சான்றும் கிடைக்கவில்லை என்ற உண்மையை டால்க்விஸ்ட் (1994), ஹோக்கார்ட் (1995), ராபர்ட் கோகன் (1998), டெரன்ஸ் ஹைன்ஸ் (2003) ஆகிய பேராசிரியர்கள் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.**

*புதிர் 10: உப்டோன் பியல் சின்கிலைர் என்ற அமெரிக்க எழுத்தாளர், தன்னுடைய துணைவி மேரி கிரெய்க்குக்கு, Telepathy (நுண்ணுணர்வு) இருப்பதை அறிந்துகொண்டு, நுண்ணுணர்வில் ஆய்வு செய்தார். தன்னுடைய துணைவிக்கு நுண்ணுணர்வு திறனால் கிடைத்த அனுபவங்களை, "Mental Radio" என்ற பெயரில் நூலாக வெளியிட்டார். தன் வீட்டுக்கு வரும் பல முக்கிய பிரமுகர்களுக்கு, தன் துணைவியின் நுண்ணணர்வுத் திறனை நிரூபித்துக் காட்டியுள்ளார். இதனால், அறிவியலை மிஞ்சிய ஆன்மீக உளவியல் உண்டு என்பது உறுதியாகிறது.*

விடை: எவ்வளவோ சோதனைகளை நடத்திய போதும், நுண்ணுணர்வை நிரூபிக்க ஒரு சான்றும் கிடைக்கவில்லை என்ற உண்மையை டால்க்விஸ்ட் (1994), ஹோக்கார்ட் (1995), ராபர்ட் கோகன் (1998), டெரன்ஸ் ஹைன்ஸ் (2003) ஆகிய பேராசிரியர்கள் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். அமேரிக்க தேசிய ஆராய்ச்சிக் குழு, "130 ஆண்டுகால ஆராய்ச்சியில் நுண்ணுணர்வை நிரூபிக்கும் சான்று ஒன்றும் இல்லை என்று அறிவித்துள்ளது. ஆன்மீக உளவியலையே (Para Psychology) போலி அறிவியல் என்று மருத்துவ உலகம் பிரகடனப்படுத்துகிறது.

இவ்வாறாக ஆன்மீக உளவியல் என்ற கற்பனையை வைத்துக்கொண்டு, மக்களை ஏமாற்றி வயிறு வளர்ப்பவர்கள் மத்தியில், தாங்கள் செய்வது மந்திரமல்ல, தந்திரமே!! என்று முரசறைபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். அத்தகையோருள் ஒருவர் ஹேரி ஹவ்டினி. உலோகத்தால் செய்யப்பட்ட பூட்டுகளையும், கை விலங்குகளையும் சர்வசாதாரணமாக

உடைப்பதில் வல்லவர். 1899ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆம் தேதி சான் ஃப்ரான்சிஸ்கோ நகர போலீஸ் தலைமையகத்தில், அவருடைய சவாலை ஏற்று, காவல்துறையினர் அவரை நிர்வாணமாக்கி, அவர் உடலில் ஏதாவது மறைக்கப்பட்டிருக்கிறதா என்று பரிசோதித்த பின், அவருடைய கைகளை பின்னால் இணைத்து, 10 விலங்குகளால் அவரைப் பூட்டினர். கைகள் மற்றும் முழங்கால்கள் பல சங்கிலிகளால் கோர்க்கப்பட்டு, அவற்றின் மீது பூட்டுகள் போடப்பட்டன. அவரை ஒரு சிறை அறையில் அடைத்து வைத்துவிட்டு, வெளியே பூட்டு போட்டனர். யாரும் எதிர்பார்க்காத வண்ணம், 10 நிமிடங்களில், அனைத்து பூட்டுகளிலிருந்தும், விலங்குகளிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டு, கம்பீரமாக வெளியே வந்தார் ஹேரி ஹவ்டினி. அவர் நினைத்திருந்தால், தன்னிடம் ஏதோ சக்தி இருக்கிறது என்று கூறி, மக்களை ஏமாற்றி பிழைத்திருக்க முடியும். ஆனால், சீரிய பகுத்தறிவாளரான அவர், அதைச் செய்யவில்லை. மாறாக, தனக்கு தெரிந்த மந்திர (தந்திர) வித்தைகளை பயன்படுத்தி, யாரெல்லாம் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று மக்களுக்கு அடையாளம் காட்டினார். "Scientific American" (அறிவியல் அமெரிக்கன்) என்ற அமைப்பில் இணைந்து போலி மதகுருக்களின், போலி அறிவியலாளர்களின் மந்திர தந்திரங்களை அம்பலப்படுத்தி பகுத்தறிவுத் தொண்டாற்றி மறைந்தார்.

இன்னும் சில புதிர்கள் "அறிவியலுக்கு அப்பால்" நூலில் கூறப்பட்டுள்ளன. இவற்றுக்கும் தெளிவான அறிவியல் விளக்கங்கள் உள்ளன. அதுவும் இந்த நூல் எழுதப்பட்ட 2014ஆம் ஆண்டுக்கு முன்பே இந்த புதிர்களுக்கு முறையான பதில்கள் கிடைத்துவிட்டன. அவற்றையெல்லாம் கவனித்து இருந்தால், இந்த நூலை எழுத வேண்டிய அவசியமே வந்திருக்காது.

**ஆதாரங்கள்:**

1. "Anomalistic psychology: A study of Magical thinking" - Warren Jones
2. "The Non- Psychic powers of Uri Gellar" - Marks David
3. "Science: Good, Bad & Bogus" - Oxford University press
4. "K.I.S.S. Guide to the Unexplained" - Levy Joel
5. "Film – Flam Psychics Especially Unicorns & other delusions" - James randi

(தொடரும்)

# பெரியார்–காந்தி இணையும் புள்ளி எது?



● ராமச்சந்திர வைத்தியநாத்

*காந்தி படுகொலையை முன் வைத்து பார்ப்பனர்களுக்கு எதிரான கலவரத்தைத் தூண்டி விடாமல் தந்தை பெரியார் அமைதியையும் அகிம்சையையுமே தொடர்ந்து வலியுறுத்தினார்.*

காந்தி ஸ்மிருதி என்று அழைக்கப்படும் காந்தியடிகளின் நினைவிடத்தில் வைக்கப்பட்டிருந்த, ஆன்ரி கார்த்தியே பிரெஸோன் எனும் புகழ் பெற்ற பிரெஞ்ச் புகைப்படக் கலைஞரின், காந்தியடிகளின் இறுதிப்பயண படங்கள் அகற்றப்பட்டு வருவதாக காந்தியடிகளின் கொள்ளுப் பேரன் துஷார் காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார். ஏற்கனவே 1948 ஜனவரி 20 அன்று கோட்சே கும்பல் கொலைக்கு ஒத்திகை பார்க்கும் விதமாய் எறிந்த கைக்குண்டு வெடித்த இடத்தை, அதே நிலையில் பிர்லா மாளிகையில் பாரமரிக்கப்பட்டு வந்ததாகவும், அதையும் தற்போது சிமெண்ட் பூசி மறைத்துவிட்டார்கள் என்றும் அறியமுடிகிறது. பெரும்பாலான தேசியப் பத்திரிகைகளில் இச்செய்தி இடம் பெற்றதாக தெரியவில்லை. ஆயின் துஷார் காந்தியின் அறிக்கையை மட்டுமே ஒரு சில பத்திரிகைகள் சம்பிரதாய பூர்வமாக வெளியிட்டிருந்தன.

பூசி மொழுகுவது, இருட்டடிப்பது என்பதெல்லாம் இந்துத்துவ சக்திகளின் கைவந்த கலை என்பதை தேசத்தின் வரலாற்றை அறிந்த அனைவருமே நன்கறிவர். ஆயின் தற்போது தேசிய அளவில் பத்திரிகைகளும் ஜனநாயகத்திற்கு எதிரான இத்தகைய செயல்பாட்டிற்கு துணை நிற்பது என்பது இந்துத்துவ சக்திகளின் எதிர்ப்பை விரும்பாத அபாயகரமான போக்கின் வெளிப்பாடே. இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர்களை சிறுமைப்படுத்துவது, இழிவுபடுத்துவது மட்டுமின்றி இருட்டடிப்பு செய்யும் முயற்சிகளை

இவ்வமைப்புகள் காலங்கால மாய் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் பாரதிய ஜனதா கட்சி மத்திய அரசில் பதவி யேற்றதும் இவை தீவிர மடைந்தும், விரிவு பெற்றும் வருகிறது. தவிர அரசியல் சட்டத்தை புறந்தள்ளி மனு தர்மத்திற்கு முக்கியத்துவ மளிக்கக்கூடிய பல்வேறு நட வடிக்கைகளை மேற்கொண்டு வருவதை அவர்களின் சமீபத்திய செயல்முறைகள் நேரடியாகவே வெளிப்படுத்தி வருகின்றன. இந்த தேசத்தின் விடுதலைப் போராட்டத்திலும் பிந்திய ஒடுக்கப்பட்டோரின் போரட்டங்களிலும் தங்களின் பங்களிப்பு இல்லாதது அல்லது கேள்விக்குரியது என்ற சிந்தனையின் அடிப்படையில் அவற்றையே அகற்றி, இந்துத்துவ தலைவர்களுக்கு புத்தாக்கம் தரும் பணிகளை அவர்கள் மேற்கொண்டு வரு கின்றனர். தங்களது இலக்கான ஒற்றைத் தன்மையை நிறுவிடும் பொருட்டு விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒரு சிலரை தங்களது சித்தாந்தத் திற்கு நெருக்கமானவர்களாக கூறி வருவதோடு அவர்களை தங்களது அடையாளமாக நிலை நிறுத்துவதும் வேகம் பெற்று வருகின்றது.

தேசிய அளவில் மட்டு மின்றி பிராந்திய அளவிலும் இப்படி பலரை அவர்கள் களவாடியதுண்டு. இதன் தொடர்ச்சிதான் தற்போது நிகழும் நகரங்கள், சாலைகள், விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றின் பெயர்மாற்றங் களும், சிலை உருவாக்கங்களும், படங்கள் அகற்றலும், பூசி மொழுகுவதும். இத்தோடன்றி காலங்காலமாய் பின்பற்றி வரக்கூடிய நினைவு நாட்களை யும் களவாடி வருகின்றனர்.

**காந்தியை தீர்த்துக் கட்ட சதி நடக்கிறது என்று நேரு, ராஜாஜி, ராஜேந்திர பிரசாத், பட்டேல் ஆகியோருக்கு முன் கூட்டியே கடிதம் எழுதினார் பெரியார்.**

இவை யாவுமே யதேச்சையாக நடைபெற்றதாக கருதலாகாது. சர்வதேச அளவில் மே தினம் தொழிலாளர் தினமாக பின்பற்றப்பட்டு வருகையில், இந்துத்துவ சக்திகள் விஸ்வ கர்மா தினமாக வேறு ஒரு நாளை தேர்ந்தெடுத்து கொண் டாடி வருகின்றனர். பாபர் மசூதி இடிப்புக்கு அம்பேத்கர் நினைவு தினத்தை தெரிவு செய்தது என்பதும், கிறிஸ்துமஸ் நாளை வாஜ்பாய் பிறந்த நாளென அறிவித்து பின்வாங்கியதும் வரலாற்றை மறைத்திடும் நோக்கங்களை கொண்டுள்ளது. இன்னும் சொல்லப் போனால் இத்தகைய செயல்பாடுகளுக்கு முன்னோ டியாக விளங்கிய அத்வானியும் இதற்கு இரையானார் என்று தான் சொல்ல வேண்டும். இந்துக் கோயில்களை தனது கனவுத் தொழிற்சாலைகளாக மாற்றிய அவரது பிறந்த நாள் நவம்பர் எட்டு அன்று வீழ்த்தப் பட்டது பண மதிப்பு மட்டு மல்ல, ரைசினாக் குன்றில் குடியேறும் அவரது நீண்ட நெடிய கனவும்தான்.

தவிர என்.பி.ஆரிலும் அவர் இடம் பெறுவாரா என்பதை மோடியும் அமித் ஷா மட்டுமே அறிவர். தற்போது அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் சென்ற ஆண்டு காந்தியடிகள் பிறந்த நாளை ஸ்வச் பாரத் தினமாக அதாவது கக்கூஸ் தினமாக முன் நிறுத்தி காந்தியடிகளின் நினைவை அகற்றும் கேவலமான செயல் துவக்கப்பட்டுள்ளது. தவிர தேர்வில் காந்திஜி தற்கொலை செய்து கொண்டாரா என்று கேள்வியை எழுப்பியது, ரூபாய் நோட்டில் காந்தி படத்தை அகற்றி லட்சுமி படத்தை இடம் பெறச் செய்ய வேண்டும் என்று சுப்பிரமணியசாமி கோரிக்கை விடுப்பது போன்ற அனைத் துமே இதில் அடங்கக் கூடியது தான். கொலைகாரன் கோட்சே தனது கொலைபாதகச் செயல் முற்றிலும் இந்து தர்மத்தையும் பகவத் கீதையையும் அடிப்படையாக கொண்டதாக கூறியதோடு, சிந்து அகண்ட பாரதத்தில் ஓடும் நிலை வரை தனது சாம்பல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், இந்துஸ்தான் என்ற பெயரில் இந்நாடு அழைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தான். சரஸ்வதியை தேடிக் கொண்டிருக்கும் பாஜக அரசு என்றென்றுமே சாம்பலை கரைக்க முடியாமல்போகும் என்பதால் கோட்சேவுக்கும், கோட்சே ஆப்தே இருவரின் சந்திப்புக்குப் பின்னர் “வெற்றி யோடு திரும்புங்கள்” என்று ஆசீர்வதித்த சாவார்க்கருக்கும் பாரத ரத்னா வழங்கக்கூடும். இத்தருணத்தில் கோட்சேயின் கருத்துக்கு மாறாக காந்திஸ் தான் என்ற பெயரில் இந்நாடு அழைக்கப்பட வேண்டும் என்று தென்னாட்டு பெரியவர் ஒருவரின் கோரிக்கையை இணைத்துப் பார்க்க வேண்டி யது அவசியமானது. ஆம். காந்தி யடிகள் இந்துத்துவ சக்திகளால் கொலை செய்யப்பட்டு தேசமே மிகவும் கொந்தளிப்பாக இருந்த நேரத்தில் இன்றைய தினம் அமித்ஷா, ஆதித்யநாத் தொடங்கி இந்துத்துவ சக்திகள் எவையுமே கைவைக்க அஞ்சக் கூடிய யோசனையொன்றை ஒருவர் முன்வைக்கிறார்.

அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டிக்கும், பண்டிட் நேரு, ராஜகோபாலாச்சாரியார், பட்டேல், ராஜேந்திர பிரசாத், ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆகியோருக்கு இதை கடித மாகவும் எழுதுகிறார். அது மட்டுமின்றி அன்றைய தினம் துணிச்சலாக எதிர்வினை யாற்றிய அவரை காந்தியடி களின் நினைவு நாளன்று நினைவு கூறாமல் இருக்க முடி யாது. இத்தனைக்கும் இத்துத்வ சக்திகளைப் போலவே அவரும் காந்தியடிகளை எதிர்த்து வந்தவர்தான். இன்னும் சொல்லப் போனால் கருத்தின் அடிப்படையில் எதிர்ப்பதாக வெளிப்படையாக கூறி சமரசத் துக்கு இடமின்றி தீவிரத்துவத் துடன் எதிர் வினையாற்றி வந்தவர். காந்தியடிகள் கொலையுற்ற பதினைந்தாவது நாளில் காந்தியாருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவது அவசிய மென்றும் அது நிரந்தரமான தாகவும் அதிசயமான பயனுள்ள தாகவும் இருக்க வேண்டும் என்றும் அவர் அறிக்கை யொன்றை விடுத்து அதில் நான்கு யோசனைகளை முன் வைக்கிறார். இதைத்தான் கடிதமாக அனுப்பி வைக்கிறார்.

1. இந்தியாவுக்கு இந்துஸ்தான் என்கின்ற பெயருக்குப் பதிலாக காந்தி தேசம் அல்லது காந்திஸ்தான் என்று பெயரிடலாம்.
2. இந்து மதம் என்பதற்கு பதிலாக காந்திமதம் அல்லது காந்தியிசம் என்பதாக மாற்றப்படலாம்.
3. இந்துக்கள் என்பதற்குப் பதிலாக மெய்ஞ்ஞானிகள் அல்லது சத்ஞானஜன் என்று பெயர் மாற்றப்படலாம்.
4. காந்தி மதக் கொள்கையாக இந்தியாவில் ஒரே பிரிவு மக்கள்தான் உண்டு. வருணாசிரம தர்மமுறை அனுசரிக்கப்பட மாட்டாது. ஞானமும் (அறிவும்) பட்சமும் (அன்பும்) அடிப் படையாகக் கொண்டது. சத் அதாவது சத்தியமே நித்தியமானது என்பதான சன்மார்க்கங்களைக் கொண்டதாகும் என்பதாக ஏற்படுத்தி கிருஸ்து ஆண்டு என்பதற்குப் பதிலாக காந்தி ஆண்டு என்று துவக்கலாம்.

**காந்தி கொலை செய்யப்பட்ட நேரத்தில் பெரியார் அதை நினைத்திருந்தால் பார்ப்பன எதிர்ப்பை கொழுந்துவிட்டு எரியச் செய்திருக்க முடியும். மாறாக திராவிட மக்கள் அமைதி, சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டுகோள் விடுத்தவர் பெரியார்.**

காந்தியடிகள் மீது மட்டு மின்றி நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் மிகுந்த நம்பிக்கை யும் வெகுவான அக்கறையும் கொண்டிருந்ததன் வெளிப் பாடுதான் இக்கோரிக்கை.

காந்தியடிகள் கோட்சேயின் துப்பாக்கிக்கு இரையான தருணம். சாதாரண மக்கள் மட்டுமின்றி காந்தியடிகளின் பாதையை பின்பற்றி வந்த பெருந்தலைவர்களும் சர்வதேச பிரமுகர்களும் அதிர்ச்சியில் உறைந்தனர். அன்றைய தினம் அகில இந்திய வானொலியில் மாலை ஆறு மணிக்கு அதிகார பூர்வமான அறிவிப்பு வெளி யிடப்படுகிறது. உள்துறையின் அறிவுறுத்தலுக்கிணங்க மராட்டிய மாநில சித்பவன பிராமணர் ஒருவரால் கொலை செய்யப்பட்டார் என்று அரை மணிக்கொரு முறை அறிவிப்பு வந்த வண்ணம் இருக்கிறது. இருப்பினும் இன்றைய பீகார், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒன்றுபட்ட மாகாணம், மத்திய மாகாணம், பம்பாய் ஆகிய வற்றில் இஸ்லாமியர் குறி வைத்து தாக்கப்பட்டனர். அதே தருணத்தில் அன்றைய தினம் சென்னையில் மத மோதலை தடுத்திடும் வகையில் ஒலி பெருக்கி பொருந்திய வண்டி யில் நகரின் பல பகுதிகளுக்கும் சென்று சுட்டவர் இஸ்லாமி யரல்ல இந்துதான் என்று உண்மையை எடுத்துரைத்த மறைந்த வி.பி.சிந்தன், மாயாண்டி பாரதி ஆகியோரின் உடனடிச் செயல்பாடென்பது கம்யூனிச இயக்கத்தின் பாரம் பரியத்தைக் கொண்டதாகும்.

காந்தியடிகளுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் பலரது உரையை அகில இந்திய வானொலி ஒலிபரப்பியது. 1948 ஜனவரி 31 அன்று திருச்சியில் தங்கியிருந்த காந்தியத்தை எதிர்க்கக்கூடிய இப்பெரியவரை உரை நிகழ்த்தும்படி கோரிக்கை விடுக்கிறது. அத்தருணத்தில் அவர் காலங்காலமாய் எதிர்த்து வந்த ஒரு சாதிப் பிரிவை சுட்டிக் காட்டி அவர்கள்தான் இக் கொலையை செய்தனர் என்றுரைத்து தமிழகத்தில் கொந்தளிப்பையும் சாதிப் பகைமையையும் பரட்டையாய் பற்ற வைத்திருக்க முடியும். ஆயின் அவர் மிகுந்த பொறுப் புடனும் நிதானத்துடனும் மட்டு மின்றி கண்ணியத்துடனும் உரை நிகழ்த்துகிறார். “எந்த மக்களுக்காக உயிர் வாழ்ந் தாரோ அல்லும் பகலும் இடையின்றி பாடுபட்டாரோ அவர்களாலேயே இந்த முடிவு ஏற்பட்டதென்றால் இது வெகு வெகு வெறுக்கத்தக்க காரியம். இவ்விழிதரமான காரியத்துக்கு

சுட்டவன் ஒருவனே பொறுப்பாளி என்று என்னால் கருத முடியவில்லை...... பொதுவாகவே இந்நாட்டில் பொது ஒழுக்கம் மோசமான தன்மை அடைந்து விட்டதை இச் சம்பவம் காட்டுகிறது. ஒரு நாகரிக நாட்டில் இப்படிப்பட்டவருக்கு இந்த மாதிரி சம்பவம் ஏற்படுவதென்பது சிறிதும் முடியாத காரியமாகும்.... திராவிட மக்கள் எப்படிப்பட்ட நிலையிலும் அமைதியுடனும் சகிப்புத் தன்மையுடனும் நடந்து கொள்ள வேண்டுமென்பது எனது விண்ணப்பம்.''

இது அவரது உரையின் ஒரு சில பகுதிகளே. இத்தோடு அவர் நின்றுவிடவில்லை. அறிவியல் மனோபாவம் இன்றி பிதற்றும் கும்பலையும், அவர்களுக்கு ஆதரவளிக்கும் சக்திகளையும் விடவில்லை. தன் தடியால் அடிக்கிறார். பதிவு செய்கிறார். காந்தியார் உயிர் நீத்த பின் அவரைப் பிழைக்க வைக்க தன்னால் முடியும் என்று ஒரு சாமியார் சென்னை பிரதமரிடம் வேண்டியிருக்கையில், டாக்டர் சுப்பராயனும் டாக்டர் அழகப்பா செட்டியாரும் விமானத்தில் அவரை டில்லிக்கு அழைத்துச் சென்றதைக் குறிப்பிட்டு சாடுகிறார். "காந்தியாரைக் கொலை செய்தவன் ஆரியன். அவனைத் தூண்டி விட்டது இந்து(மத)மகா சபை. அதற்குப் பட்டாளம் ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கம் (ஆர்.எஸ்.எஸ்) அதை ஆதரித்து வந்தவை (தேசிய) காங்கிரஸ் ஏடுகள்'' என்று நேரடியாக குற்றஞ்சாட்டும் அவர் காந்தியார் மறைவுக்கு தனது இயக்கம் சார்பில் ஒவ்வொரு ஊரிலும் ஒரே நாளில் அனுதாபக் கூட்டங்களை நடத்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்ததும் வித்தியாசமானதுதான். காந்தியார் அவர்கள் இயற்கைக்கு விரோதமாக கொல்லப்பட்டது குறித்து அனுதாபப்படவும் கொலைச் சம்பவத்தை கண்டிக்கவும் 29.02.1948 ஞாயிற்றுக் கிழமையன்று கண்டனக் கூட்டம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், கூட்டத்திற்கு ஆடம்பரம் கூடாது, செலவு கூடாது, ஒலிபெருக்கிக் கூடாது, சொற்பொழிவு கூடாது, அனுதாபத் தீர்மானத்தைப் படித்ததும் பொது மக்கள் ஒரு நிமிடம் மவுனமாக இருந்து மிக அமைதியாக பிரிந்து விட வேண்டியது என்று அறிக்கை விடுக்கிறார்.

அனுதாபத் தீர்மானத்தின் இறுதிப் பகுதி அவருக்கே உரிய முறையில் அமைந்துள்ளது. "இம்மரணத்துக்குக் காரணமாக இருந்த கொலை பாதகனையும், அவனுக்குப் பின்னால் ஆதரவாகவும் நடத்துபவர்களாகவும் இருந்த ஸ்தாபனங்களையும் மக்களையும் வெறுப்பு காட்டிக் கண்டிக்கிறது. இந்த பரிதாபகரமான நிகழ்ச்சியின் விளைவைப் படிப்பினையாகக் கொண்டு இந்நாட்டு மக்கள் யாவருமே சாதி மத இன வேறுபாடு காரணமாய் வேற்றுமை உணர்ச்சி இல்லாமல் ஒன்றுபட்டு வாழ்வோமாக!'' காந்தியடி களின் நினைவைப் போற்றி மக்கள் ஒற்றுமையையும் மத நல்லிணக்ககத்தையும் நிலைநாட்டும் வகையில் கிட்டத்தட்ட ஒரு மாதம் வரை குடிஅரசில் இடைவிடாது கட்டுரைகளை எழுதியிருக்கிறார். அதே நேரத்தில் இவற்றை சீர்குலைத்திடுவோரை சாடிட அஞ்சியதில்லை என்பதை அக் கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன. செய்திகளை திரித்து வெளியிட்டு முஸ்லீம்கள் மீதும், காங்கிரசுக்கு மாறுபட்ட கருத்துக் கொண்டோர் மீதும் துவேஷத்தை உண்டாக்கும் வகையில் அயோக்கியத்தனமாக மறைத்து திருத்தியும் பிரசுரித்தவர்களை சுட்டிக் காட்டியுள்ளார். இந்துத்துவாவை மறைமுகமாக ஊக்குவிக்கும் காங்கிரசை பகிரங்கமாக குறைகூறினார். சாதி சங்கங்களை தடை செய்து அதனதன் தலைவர்களையும் பிரமுகர்களையும் பந்தோபஸ்தில் வைத்து அவர்கள் சொத்துக்களை பறிமுதல் செய்யாமல் இந்து மகா சபை ஒழிக்கப்படாலும் சரி ராஷ்டிரிய சுயம் சேவக் சபை ஒழிக்கப்பட்டாலும் சரி மாறுதல் ஒன்றும் ஏற்படப் போவதில்லை என்பது தனது கல்போன்ற உறுதி என்று அழுத்தமாய் கூறுவது ஆச்சரியமானதுவே.

வருணாசிரம தர்மத்தை காப்பதில் பிடிவாதமான கவலை கொண்டிருப்பதாக காந்தியடிகளை அவர் கடுமையாக விமரிசனம் செய்து வந்த போதிலும், அவர் மறைவுற்ற தருணத்தில் கம்யூனிஸ்டுகளும் சமதர்மவாதிகளும் அவரிடத்தில் மதிப்பும் மரியாதையும் வைத்தவர்களாகவே இருந்து வந்திருப்பதை எடுத்துக் காட்டி திராவிட மக்கள் எப்படிப்பட்ட நிலையிலும் அமைதியுடனும் சகிப்புத் தன்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியதோடு காந்தியடிகளின் பதாகையை உயர்த்திப் பிடித்தவர் அம்மாமனிதர். அவர்தான் ஈ.வெ.ரா.பெரியார்.

கடந்த காலங்களில் இந்துத்துவ சக்திகளையும் புரையோடிக் கிடக்கும் பழமை வாதத்தையும் எதிர்த்த பல்வேறு விடுதலைப் போராட்ட வீரர்களை, சீர்திருத்தவாதிகளை ஏன் அம்பேத்கரையும் காவிப்

காந்தியடிகளின் நினைவைப் போற்றி மக்கள் ஒற்றுமையையும் மத நல்லிணக்கத்தையும் நிலை நாட்டும் வகையில் கிட்டத்தட்ட ஒரு மாதம் வரை குடிஅரசில் இடைவிடாது கட்டுரைகளை எழுதியிருக்கிறார். அதே நேரத்தில் இவற்றை சீர்குலைத்திடுவோரை சாடிட அஞ்சியதில்லை என்பதை அக்கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன

படையினர் விட்டு வைக்க வில்லை. தங்களின் சித்தாந்தத் துடன் நெருங்கியவர்களாக புதிய தலைமுறையினரிடம் சித்தரித்து வருகின்றனர். ஆயின் நாட்டின் பன்முகத் தன்மையை அங்கீகரித்து மத நல்லிணக்கத்தை உறுதியுடன் பின்பற்றிவந்த காந்தியடிகளும், மூடப்பழக்க வழக்கங்களுக்கும் அறியாமைக்கும் எதிராக ஒடுக் கப்பட்டோரை மேம்படுத்திட ஒரு கலகக்காரனாய் களத்தில் செயல்பட்ட பெரியாரும் காவிக் கும்பலால் நெருங்க முடியாத ஒளிப் பிழம்பாகவே இன்னமும் இருந்து வருகின்றனர். இந்த அடிப்படையில்தான் இருவர் குறித்து எதிர்மறையான கருத் தோட்டம் கட்டவிழ்த்து விடப்படுகிறது. இந்த அடிப் படையில் ஒற்றைத்தன்மை, மூடப்பழக்க வழக்கங்கள், அறியாமை ஆகியவற்றுக்கு எதிராக அணிதிரண்டிடவும் சாதி இனம் மொழி அடிப் படையில் ஒடுக்கப்படுவோருக் காக போராடிடவும், மத நல்லிணக்கத்தையும் மக்கள் ஒற்றுமையையும் பாதுகாத்திட வும் காந்தியடிகளையும் பெரியாரையும் இணைத்து எடுத்துச் செல்வது பொருத்த மாகவே இருக்கும். அதுவே இன்றைய தேவையாகும்.

நன்றி : 'தீக்கதிர்'

## கடவுளை அவமதிப்பது யார்?

*உத்தரப்பிரதேசம், தில்லி, ஹரியானா, பீகார் உள்ளிட்ட வட மாநிலங்களில், கோடைக் காலத்தின்போது, சாமி சிலைகளுக்கு 'வியர்க்கும்' என்று ஏர் கண்டிசன் வசதி செய்வதும், குளிர்காலங்களில் சிலைகள் 'நடுங்கும்' என்று அவற்றுக்கு ஸ்வெட்டர் அணிவிப்பதும் பக்தி என்ற பெயரால் நடைபெற்று வருகிறது. தில்லி உள்ளிட்ட மாநிலங்களில் அண்மையில் காற்றுமாசுபாடு ஏற்பட்டபோது, புதிதாக சுவாசக் கவசம் அணிவிப்பதையும் வடமாநில பக்தர்கள் அறிமுகப் படுத்தினர். இந்நிலையில், குளிர்காலம் துவங்கியிருப்பதையொட்டி, வழக்கம்போல உத்தரப்பிரதேச மாநில கடவுள் சிலைகளுக்கு தற்போது ஸ்வெட்டர் (கம்பளி ஆடை) அணிவிக்கும் வேலையை ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக, வாரணாசியில், படா கணேஷ் கோவில் கருவறை சிலையை அங்குள்ள கோயில் அர்ச்சகர்கள் 'குல்ட்' என்று கூறப்படும் கனத்த உடையால் மூடி வைத்துள்ளனர். பிள்ளையாரின் வாகனமான மூஷிகத்திற்கும் (எலி) ஒரு கம்பளி சால்வை வழங்கப்பட்டுள்ளது. சிவன் கோயில்களிலுள்ள சிவலிங்கங்களுக்கும் கூட ஷொட்டர் அணிவிக்கப்பட்டுள்ளது.கடவுள் சிலைகள் 'பிராண் பிரதிஷ்டா' என்ற பெயரில் எழுந்தருளல் செய்யப்பட்ட பிறகு, அவற்றுக்கு உயிர் இருப்பதாகவே நம்புகிறோம்; அதனால்தான் ஷொட்டர் அணிவிக்கிறோம் என்று ஆச்சார்யா சமீர் உபாத்யாயா என்பவர் விளக்கம் அளித்துள்ளார்.*

*சர்வ சக்தியுள்ள வேத மந்திரங்கள் ஏற்றப்பட்ட கடவுள்களால் குளிரையும், வெப்பத்தையும், காற்று மாசுபாட்டையும் தாங்க முடியாது என்று கூறி கடவுள்களை அவமதிப்பபது கடவுளை நம்புவோர் தான்!*

## 'கிரகப்பிரவேசம்' பற்றி 'மனு சாஸ்திரம்'

*கிரகப்பிரவேசம் என்பது தீட்டு அகற்ற செய்யப்படும் ஒரு சடங்கு முறைதான். இது எதற்காக செய்யப்படுகிறது, என்றால் புதிதாக கட்டப்பட்ட வீட்டில் கூலித் தொழிலாளியாக தாழ்த்தப்பட்ட கீழ்சாதிக்காரன் கொத்தனாராக, சித்தாளாக வேலை செய்திருப்பார்கள். அவர்கள் வேலை செய்ததினால் அந்த புது வீடு தீட்டாகிவிட்டது, அதனால் அந்த தீட்டை போக்குவதற்காக பிராமணர்களை வைத்து சமஸ்கிருத மொழியில் தீட்டுக் கழிக்கும் மந்திரத்தை சொல்லி பசுமாட்டு மூத்திரத்தையும், சாணியையும் கரைத்து தெளித்தால் தீட்டு போய்விடும் என்பதற்காக செய்யப்படும் ஒரு சடங்கு தான் கிரகப்பிரவேசம்.*

*ஆதாரம்: மனுஸ்மிருதி, அத்தியாயம் - 5 சுலோகம் - 12 வீடு முதலானவற்றிற்கு சண்டாளாதிகளால் அசுத்தம் நேரிட்டபோது விளக்குதல், மெழுகுதல், மேல் மண்ணை எடுத்து போடுதல், பசு மாட்டை ஒரு நாள் வசிக்கும்படி செய்தல் இவ் வைந்தினால் அப்பூமி பரிசுத்தப்படுத்தப்படுகிறது.*

*இவ்வாறு மனுதர்ம சாஸ்திரத்தில் சொல்லப்படுகிறது (சண்டாளாதிகளால்) இதற்கான அர்த்தம் கீழ் சாதிக்காரன் என்று பொருள்.*

*இந்த அடிப்படை உண்மையை பார்ப்பனரல்லாத மக்கள் தெரிந்து கொள்ளாமல் இதனை பின்பற்றி தன்னையும் அவமானப்படுத்திக் கொண்டுதான் சார்ந்திருக்கும் உழைக்கும் இனத்தையே இழிவுபடுத்திக் கொள்கிறார்கள்.*

# அம்பேத்கரை, தலைவராக ஏற்றார், பெரியார்



● விடுதலை இராசேந்திரன்

*'மொழி வழி மாநிலங்கள் குறித்த சிந்தனை' எனும் நூலில் புரட்சியாளர் அம்பேத்கர் தந்த எச்சரிக்கையைக் குறிப்பிட வேண்டும். "இந்தி பேசும் பெரும்பான்மையோரை, ஒன்றாக்கிவிட்டு, தென்னாட்டு மக்களை சிதறடித்திருக்கிறது, மாநிலங்களைப் பிரிக்கும் ஆணையம், தென்னாடு, வடநாட்டு ஆதிக்கத்தை எப்படி சகித்துக் கொள்ளும்?" என்று கேட்ட அவர், வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் உள்ள முரண்பாட்டையும் கூர்மையாக படம் பிடித்துக் காட்டினார்.*

*"வடக்கு பிற்போக்கானது; தெற்கு முற்போக்கானது. வடக்கு மூடநம்பிக்கையில் மூழ்கிக் கிடப்பது; தெற்கு பகுத்தறிவு சிந்தனை கொண்டது. தெற்கு முன்னேறிச் செல்வது, வடக்கு பின் தங்கிக் கிடப்பது. தெற்கின் கலாச்சாரம் நவீனமானது; வடக்கின் கலாச்சாரம் பழமையானது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் 1947 ஆக. 15இல் எப்படி பதவி ஏற்றுக் கொண்டார்? காசியிலிருந்து வந்த பார்ப்பனர்கள் யாகம் நடத்தி நாட்டை ஆளப் போகும் பிரதமரிடம், "ராஜ தண்டத்தை" அளித்து பார்ப்பனர் கையிலிருந்த புனித கங்கை நீரைக் குடித்து தானே பதவியை ஏற்றார்? இறந்த கணவனை எரியூட்டிய நெருப்பில் அண்மைக் காலங்களில் எத்தனைப் பெண்கள் உடன்கட்டை ஏற்றப்பட்டிருக்கிறார்கள்? நமது குடியரசுத் தலைவர் (இராஜேந்திர பிரசாத்) காசிக்குப் போய், பார்ப்பனர்களின் காலைக் கழுவி அந்தத் தண்ணீரை குடிக்கவில்லையா? வடக்கே இன்னும் 'சதி' என்னும் உடன்கட்டை ஏறுதல் நடந்து கொண்டுதானே இருக்கிறது?" என்று வடநாட்டுக்காரர்களின் மூடத்தன - பழமை - வைதிகப் போக்கைப்*

பட்டியலிட்டார். அதே போன்று 1949 நவம். 25 அன்று அரசியல் நிர்ணய சபையில் அரசியல் சட்ட வரைவை முன்மொழிந்து நிகழ்த்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையில் அவன் முன் வைத்த மற்றொரு கருத்தையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

"இந்தியர்கள் தங்கள் மத நம்பிக்கைகளுக்கு மேலாக நாட்டை கருதப் போகிறார்களா? அல்லது நாட்டைவிட மத நம்பிக்கைக்கே முக்கியத்துவம் கொடுக்கப் போகிறார்களா? இது எனக்குத் தெரியாது. கட்சிகள் நாட்டை விட தங்கள் மதக் கோட்பாடுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தால், நமது சுதந்திரத்துக்கு இரண்டாவது தடையாக ஆபத்து என்பதுடன், என்றென்றைக்குமாக நமது சுதந்திரத்தை இழப்பது என்பது நிச்சயம்."

அம்பேத்கர் மிகச் சரியாகவே எச்சரித்த வடநாட்டு பிற்போக்குப் பார்ப்பனிய சிந்தனையும் நாட்டைப் பின்னுக்குத் தள்ளி, மதவெறியைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிற அதிகார வெறியும் இப்போது கை கோர்த்து கோரத்தாண்டவமாடுகிறது. இந்தச் சூழலில் பெரியார்-அம்பேத்கரிய சிந்தனைகளும் சமூக ஒடுக்குமுறைகளுக்கான 'வேர்' - எங்கே பதுங்கி நிற்கிறது என்று அவர்கள் வெளிச்சப்படுத்தி அதற்காக முன்னெடுத்தப் போராட்டங்களின் வரலாறும் - சமூக விடுதலைக்கான ஒளி விளக்குகளாக வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன. 'பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு' வரலாற்றுத் தேவையாக பிறப்பெடுத்திருக்கிறது என்றே கூற வேண்டும். பரந்துபட்ட மக்கள் அணியை உருவாக்கும் நோக்கத்தோடு, பெரியார் கருஞ்சட்டைப் பேரணி என்ற மாபெரும் மக்கள் கூடுகையை பெரியார் நினைவு நாளையொட்டி (2018, டிச. 23) நிகழ்த்திக் காட்டி அடுத்தக் கட்டமாக அம்பேத்கர் நினைவாக நீலச்சட்டைப் பேரணிக்கு தயாராகி வருகிறது. இது காலத்தின் அறைகூவல்!

புராண காலந்தொட்டு இந்த நாட்டில் நடப்பது ஆரிய திராவிடப் போராட்டம்தான் என்று பெரியார் கூறினார் என்றால், அம்பேத்கர் - பவுத்தத்திற்கும் பார்ப்பனியத்துக்குமிடையே நடக்கும் போராட்டம் தான் இந்திய வரலாறு என்றார். பார்ப்பனர்களின் சமூக - அரசியல் ஒடுக்குமுறைகளால் 'சூத்திரர்', 'பஞ்சமர்' நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களின் சுயமரியாதைக்காகப் போராடிய பெரியார், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு சமூகப் பிரிவினருக்கும் நீதி கேட்டு காங்கிரசுக்குள்ளும் காங்கிரசிலிருந்து வெளியேறியும் போராடினார். அவர் பேசிய 'வகுப்புவாரி உரிமை'யை அம்பேத்கர், 'சமூக ஜனநாயகம்' என்ற சொல்லாடல்களுக்கு உட்படுத்தினார். சமூக ஜனநாயகம் இல்லாமல் அரசியல் ஜனநாயகம் ஒருபோதும் வெற்றி பெற முடியாது என்று அறிவித்தார். பார்ப்பனர் - பனியாக்கள் தங்கள் மேலாதிக்கத்தை அரசியல் ரீதியாக உறுதிப்படுத்த காங்கிரசையும் காந்தியையும் கருவிகளாகப் பயன்படுத்தி முன் வைத்த 'சுயராஜ்ய' கோரிக்கைகளில் அழுத்தமான மாறுபாடுகள் இரண்டு தலைவர்களுக்கும் இருந்தது. 'காலனி எதிர்ப்பு', 'தேச பக்தி' என்ற எல்லைக்குள் பார்ப்பனிய-பனியா சக்திகள் சுழன்று கொண்டிருந்த நிலையில் அந்த வலைக்குள் சிக்கி விடாமல் அதிலிருந்து விலகி நின்று, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உண்மையான சமூக விடுதலைக்கு களம் அமைப்பதில் இரண்டு தலைவர்களின் சிந்தனைகளும் ஒரே தடத்தில் பயணித்தன. இந்த ஒருமித்த சிந்தனை, அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்காத நிலையிலேயே காந்த சக்தியாக அவர்களை பிணைக்க வைத்தது.

1919 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சி இந்திய குடிமக்களுக்கு வாக்குரிமை வழங்குவது குறித்து பரிசீலிக்க நியமித்த சவுத்பரோ குழுவிடம் அம்பேத்கர் அளித்த சாட்சியம் தான் அவரது பொது வாழ்வின் தீவிரமான தொடக்கம். அந்த சாட்சியத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் அவலங்களையும் பறிக்கப்படும் உரிமைகளையும் விளக்கினார். அடுத்து பம்பாய் அருகே ஜல்கவோன் என்ற இடத்தில் நடந்த - தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் (29.5.1929) அம்பேத்கர் நிகழ்த்திய உரையை பெரியாரின் 'குடிஅரசு', 'பம்பாயில் சுயமரியாதை முழக்கம்' எனும் தலைப்பில் வெளியிட்டது (குடிஅரசு 16.6.1929).

'சமாஜ சமரா சங்' (சமுதாய சமத்துவ சங்கம்) என்ற பெயரில், அம்பேத்கர் தொடங்கிய அமைப்பு சார்பாக மராட்டியத்திலுள்ள 'சிட்ட கெய்ன்' என்ற பகுதியில் நடந்த முதல் மாநாட்டில் அம்பேத்கர் நிகழ்த்திய தலைமை உரையை வெளியிட்ட 'குடிஅரசு', 'முதல் மகாராஷ்டிரா சுயமரியாதை மாநாடு' என்ற தலைப்பிட்டது. இதே ஆண்டில் தொடக்கத்தில்தான் (1929, பிப்.17,

*18) பெரியார் சென்னை மாகாண முதல் சுயமரியாதை மாநாட்டை நடத்தினார். தான் நடத்திய சுயமரியாதை மாநாட்டுக்கு இணையாக அம்பேத்கர் நடத்திய தாழ்த்தப்பட்டோர் மாநாட்டை பெரியார் கருதினார். அம்பேத்கர் நடத்திய அந்த முதல் மாநாட்டுக்கு பெரியார் வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருக்கிறார். "தென்னிந்திய சுயமரியாதை இயக்கத்தின் பிரபல தலைவர் ஈ.வெ.ராமசாமி அனுப்பிய வாழ்த்துத் தந்தியும் கடிதமும் அங்கு படிக்கப்பட்டன" என்ற செய்திக் குறிப்பு, பெரியார் நடத்திய ஆங்கில இதழான 'ரிவோல்ட்டில்' பதிவாகியிருக்கிறது (ரிவோல்ட், 29.9.1929).*

*அம்பேத்கரின் ஒவ்வொரு செயல் பாட்டையும் பெரியார் உன்னிப்பாகக் கவனித்து வந்திருக்கிறார். புனே நகரில் அம்பேத்கர் நடத்திய ஆலய நுழைவுப் போராட்டம், இலண்டன் வட்ட மேஜை மாநாட்டில் காந்திக்கும் அம்பேத்கருக்கும் இடையே எழுந்த வாதங்கள், காந்தியாரின் பட்டினிப் போராட்டத்தைக் கண்டிக்கும் கட்டுரைகள் என்று 'குடிஅரசு' தொடர்ந்து செய்திகளை வெளியிட்டு வந்தது. அம்பேத்கரும் பெரியாரும் ஒருவரையொருவர் சந்திக்காத நிலையிலேயே அவர்களுக்கிடையே இலட்சியப் பிணைப்பின் வழியாக அறிமுகம் இருந்திருக்கிறது.*

*1936-37 ஆம் ஆண்டுகளில் உ.பி.யில் லாகூரில் 'ஜாத்பட் தோடக் மண்டல்' நடத்திய ஜாதி எதிர்ப்பு மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்த அம்பேத்கர் அழைக்கப்பட்டார். மாநாட்டுக்காக அம்பேத்கர் தயாரித்த உரையில் சில பகுதிகளை நீக்க வேண்டும் என்று மாநாட்டு பொறுப் பாளர்கள் முன் வைத்த நிபந்தனையை அம்பேத்கர் ஏற்க மறுத்தார். "இந்து மதத்தை முற்றாக ஒழிப்பது பற்றிக் கூறுவதும், இந்துக்களின் 'புனித' நூல்களின் அறத்தன்மையை சந்தேகிப்பதும் இந்து சமூகத்திலிருந்து வெளியேறும் உங்கள் எண்ணத்தை வெளிப்படுத்துவதுமான பகுதிகளை நீக்க வேண்டும்" என்பதே மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் அம்பேத்கருக்கு விதித்த நிபந்தனை. அந்த ஆங்கில உரையை பெரியாரின் 'குடிஅரசு' தமிழில் மொழி பெயர்த்து ஓராண்டு காலம் தொடர் கட்டுரையாக வெளியிட்டது.*

*தகவல் தொடர்புகள் இப்போது போல் அக்காலத்தில் இல்லை. அந்த நிலையில் அம்பேத்கர் குறித்து தமிழ்ச் சமூகத்துக்கு அறிமுகம் செய்த பெருமை பெரியார் இயக்கத்துக்கு உண்டு. அம்பேத்கரை உரையாற்ற அழைத்திருந்த 'ஜாத் பட்தோடக் மண்டல்' அமைப்பில் 1920ஆம் ஆண்டுகளில் துணைத் தலைவராக இருந்தவர் பெரியார். அப்போதும் பெரியாரை நாத்திகர், இந்து விரோதி, பார்ப்பன எதிர்ப்பாளர் என்று தென்னாட்டுப் பார்ப்பனர்கள் கூறிய புகாரின் அடிப்படையில் பெரியார் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதே அமைப்புதான் 1936இல் அம்பேத்கரை ஜாதி எதிர்ப்பு மாநாட்டுக்கு தலைமை ஏற்க அழைத்து, அவரது உரையை மாற்றியமைக்க வற்புறுத்தி அம்பேத்கர் மறுத்த நிலையில் மாநாட்டையே நிறுத்தியது. குடிஅரசில் வெளியிட்ட அம்பேத்கர் உரையை 'ஜாதியை ஒழிக்கும் வழி' என்ற தலைப்பில் 4 அணா விலையில் நூலாக வெளியிட்டார் பெரியார்.*

*அம்பேத்கரின் உரை குறித்து காந்தியும் தனது 'அரிஜன்' நாளேட்டில் விமர்சித்து எழுதினார். அம்பேத்கர் எழுப்பிய வாதங்களுக்கு எந்த பதிலும் கூறாத காந்தி, "ஒரு மதத்தை அதன் மோசமான உதாரணங்களைக் கொண்டு மதிப்பிடக் கூடாது. அது உருவாக்கிய மிகச் சிறந்த உதாரணங்களைக் கொண்டே மதிப்பிட வேண்டும்" என்பதே காந்தியாரின் பதிலாக இருந்தது. வர்ணாஸ்ரம அமைப்பை நியாயப் படுத்திய காந்தி, "மற்ற எந்த வருணத்தையும்விட தங்கள் வருணமே உயர்ந்த அந்தஸ்து கொண்ட வர்ணம் என்று எந்த வர்ணத்தாரும் உரிமை கொண்டாடுதல் கூடாது" என்றார். 'பிராமணர்' பற்றிய புரிதல் இன்மையால் காந்தி கொண்டிருந்த இந்த தவறான பார்வையை பெரியாரே நேருக்கு நேராக காந்தியிடம் பெங்களூரில் நடந்த விவாதத்தில் எடுத்துக் காட்டியதோடு நீங்கள் இந்து மதத்தை சீர்திருத்தம் செய்ய முயன்றால் பார்ப்பனர்கள் உங்களை விட்டு வைக்க மாட்டார்கள் என்று எச்சரித்தார். அதுதான் நடந்தது. பார்ப்பனியமே காந்தியின் உயிரை 'கோட்சே' உருவத்தில் பறித்தது.*

*லாகூர் மாநாட்டுக்காக அம்பேத்கர் தயாரித்த உரை. சாதி அமைப்பின் இயங்கியலை மிகத் துல்லியமாக படம் பிடித்த ஆழமான சமூக ஆவணம். உதாரணத்துக்கு சிலவற்றைக் கோடிட்டுக் காட்டலாம்.*

- *தங்கள் சமூக அந்தஸ்தைச் செயல்படுத்தும் வல்லமை பெற்றவர்களும், தங்களைவிடத் தாழ்ந்த நிலையில் இருந்தவர்கள் மீது அந்த*

அமைப்பைத் திணிக்கும் அதிகாரம் பெற்றவர்களுமான வக்கிர மனம் படைத்த இந்துக்களின் ஆணவத்தையும் சுயநலத்தை யுமே சாதி அமைப்பு அடிப்படையாகக் கொண்டுள்ளது என்று ஜாதி அமைப்பை படம் பிடிக்கிறார்.

- இந்து என்ற பெயர் எப்படி வந்தது என்பதை ஆராய்கிறார். "சுதேசிகளிட மிருந்து தன்னை இனம் பிரித்துக் காட்ட முகம்மதியர்களால் 'இந்து' என்ற பெயர் தரப்பட்டது. முகமதியரின் படை யெடுப்புக்கு முந்தைய எந்த சமஸ்கிருதத் திலும் இந்து என்ற சொல்லே காணப்பட வில்லை. இந்துக்களுக்கு தாங்கள் பொது வானதொரு சமூகம் என்ற சிந்தனையே இல்லாத காரணத்தால், தங்களுக்கு பொதுவான பெயர் தேவை என்பதை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை" என்கிறார்.

  "இந்துக்கள் என்ற பெயர் ஏன் இல்லை என்பதற்கு சங்பரிவார்களின் தத்துவத் தந்தை கோல்வாக்கர் முன் வைக்கும் காரணத்தை அம்பேத்கரின் இந்த வாதம் அழுத்தமாக மறுக்கிறது."நாம் அனாதிகள்; தொடக்கமே இல்லாதவர்கள்; நாம் தான் இந்த மண்ணின் மைந்தர்கள் என்ற காரணத்தால் நமக்கென்று தனிப் பெயர் சூட்டிக் கொள்ளவில்லை; நம்மைத் தவிர மற்றவர்கள் மிலேச்சர்கள்" என்பதே கோல்வாக்கர் வாதம். பொதுவான சமூகமாக 'இந்து' மதம் உருவாகாத காரணத்தால் தான் அவர்கள் பொதுப் பெயர் சூட்டிக் கொள்ள தேவை இல்லாத நிலை என்பது அம்பேத்கர் தரும் மறுப்பு.

- இந்துக்களிடையே ஆயிரம் வேற்றுமைகள் இருந்தாலும் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைகள் ஆகியவற்றில் இந்துக்களிடையே ஒற்றுமை நிலவுகிறது என்றும், இந்த ஒற்றமையே இந்துக்களின் வாழ்க்கையை அடையாளம் காட்டுவதாக இருக்கிறது என்றும் 'இந்து'க்கள் தரப்பில் முன் வைக்கப்படும் வாதத்தை தகர்த்து எறிகிறார் அம்பேத்கர். பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைகளிடையே ஒற்றுமை இருப்பதாலேயே ஒரே சமூகமாகி விட முடியாது. மனிதர்கள் கலந்து உறவாடுவதே ஒரு சமூகத்திற்கான அடிப்படைக் காரணி. இந்துக்கள் கொண்டாடும் விழாக்கள் ஒரே மாதிரியாக இருந்தும், ஒவ்வொரு ஜாதியும் அதை ஏன் தனித்தனியாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது? என்ற கேள்வியை எழுப்பும் அம்பேத்கர், சமூகவியலாளர்கள் கூறும் குழு உணர்வு இந்துக்களிடம் இல்லாததால்தான், இந்துக்கள் ஒரு சமூகமாகவோ தேசமாகவோ உருவாக முடியவில்லை என்கிறார். பொதுவான பிரச்சினைகளை பரிமாறிக் கொள்வதே ஒரு சமூகத்துக்கான அடையாளம். ஒரே நம்பிக்கை, பழக்க வழக்கங்கள் இருந்தால் மட்டும் சமூகமாகி விட முடியாது என்கிறார், அம்பேத்கர்.

**நான் ஒரு இந்து என்று எவராவது சொன்னால், நீங்கள் அந்த பதிலால் திருப்தியடைந்து விடுவதில்லை. அவருடைய ஜாதி என்னவென்று விவரமாகத் தெரிந்து கொள்வது அவசியம் என்று உணருகிறீர்கள்.**

- முகமதியர்களும் கிறித்தவர்களும் மிரட்டி கட்டாயப்படுத்தி இந்துக்களை மதமாற்றம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு அம்பேத்கர் முன் வைக்கும் எதிர் கேள்வி மிகவும் வலிமையானது. மோட்சம் போக வேண்டுமானால் அதற்கு எதைச் செய்ய வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோமோ, அதையே மற்றவர்களும் செய்ய வேண்டும் என்று பார்ப்பனர்கள் கூறுவது மிரட்டல் அல்லவா? தான் கற்ற கல்வியை மற்றவர்கள் பெற்று விடக் கூடாது என்று மறைத்தது யார்? அறிவையும் பாரம்பர்ய பெருமை களையும் தனது வளர்ச்சிக்கு மட்டுமே உரியதாக்கி, மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள மறுத்தார்களே அதற்குப் பெயர் என்ன? இதைவிடக் குரூரத்தையா, முகமதி யர்களும், கிறித்தவர்களும் செய்தார்கள் என்று அம்பேத்கர் கேட்கிறார்.

- இராமராஜ்யம் என்பது நால்வர்ண அமைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு இராஜ்யம் என்று கூறும் அம்பேத்கர், ராமன் சம்பூகனை ஏன் கொன்றான் என்பதையும் கீழ்க்கண்டவாறு விளக்கு கிறார். "சம்புகன் தன் வர்ணமாகிய சூத்திர

வர்ணத்தைவிட்டு பிராமணனாக மாற விரும்புகிறான். எனவே சம்பூகனைக் கொல்வது ராமன் என்ற அந்த அரசனின் கடமையாகிறது. ராமன் சம்பூகனைக் கொன்றதற்கான காரணம் இதுதான். ஆக நால்வர்ண அமைப்பைக் கட்டிக் காக்க அவர்களுக்கு குற்றவியல் அதிகாரமும் தேவை என்பதையும் இக்கதை காட்டுகிறது" என்று சுட்டிக் காட்டுகிறார்.

- இந்து, கிறித்தவ மதங்களில் மட்டும் ஜாதி இல்லையா? என்ற கேள்விக்கு அம்பேத்கர் அறிவார்ந்த விடையளிக்கிறார்: "ஒரு முகமதியனையோ, சீக்கியனையோ நீ யார் என்று கேளுங்கள். தனக்கு ஒரு ஜாதி இருந்த போதிலும்அவன் ஜாதியை சொல்லாமல், முகமதியன், சீக்கியன் என்றே பதில் கூறுவான். நீங்களும் அந்த பதிலில் திருப்தி அடைந்து விடுவீர்கள். நீ சன்னியா, ஷேக்கா, சையதா, சாதிக்கா, பிஞ்சாரியா என்றெல்லாம் கேட்கப் போவது இல்லை. நான் ஒரு சீக்கியன் என்று கூறியதும் நீ ஜாட்டா, ரோதாவா, மாம்பியா, ராம்தாசியா என்றெல்லாம் கேட்பதும் இல்லை. ஆனால், நான் ஒரு இந்து என்று எவராவது சொன்னால், நீங்கள் அந்த பதிலால் திருப்தியடைந்து விடுவதில்லை. அவருடைய ஜாதி என்னவென்று விவரமாகத் தெரிந்து கொள்வது அவசியம் என்று உணருகிறீர்கள். ஒரு 'இந்து'வை பொறுத்தமட்டில் அவனுடைய ஜாதி என்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமல், அவன் எத்தகைய ஒரு மனிதன் என்பதை உங்களால் உறுதியாகத் தெரிந்து கொள்ள முடியாது என்கிற அளவுக்கு ஜாதி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

- "ஜாதி என்பது இந்துக்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து விடாமல் தடுக்கிற ஒரு செங்கல் சுவரோ, முள்வேலியோ அல்ல. அப்படி இருந்தால் அதைத் தகர்த்து விடலாம்" என்று கூறும் அம்பேத்கர், "ஜாதி என்பது ஒரு கண்ணோட்டம்; ஒரு மனநிலை; ஜாதியைத் தகர்ப்பது என்றால், இந்துக்களின் மனநிலையில் ஒரு மாறுதல் உண்டாக்க வேண்டும்" என்கிறார். ஜாதியை அழித்தொழிக்கும் உண்மையான வழிமுறை எது என்ற கேள்விக்கு அம்பேத்கர் தரும் பதில் மிகவும் முக்கியமானது. "ஜாதிகளின் மதமான இந்து மதத்தை மக்களுக்குக் கற்றுத் தந்திருக்கிற சாஸ்திரங்களே உங்களின் பயங்கர எதிரி....... சாஸ்திரங்கள் புனிதமானவை என்ற நம்பிக்கையை அழித் தொழிப்பதோடு, புத்தரும் குருநானக்கும் செய்ததுபோல் சாஸ்திரங்களின் அதிகாரத்தை மறுக்க வேண்டும் என்று, அம்பேத்கர் அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். இன்னும் ஒரு படி மேலே சென்று, "ஜாதியை விட்டொழித்து விடும்படி மக்களைக் கேட்டுக் கொள்வது, மக்களின் மத நம்பிக்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்டு நடந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்வதே ஆகும்" என்று, இந்து மத எதிர்ப்பே ஜாதி எதிர்ப்புக்கான அடித்தளம் என்று அறுதியிட்டு பறைசாற்றுகிறார்.

- "அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக வேண்டும்" என்ற உரிமைக்காக பெரியார் வாழ்நாள் இறுதி வரை போராடினார். இதில் ஜாதி ஒழிப்புக்கான 'உயிர்நாடி' இருக்கிறது என்பதை, ஆழமாக பரிசீலிக் காமல், அர்ச்சகர் ஆகி என்ன பயன்? என்ற மேம்போக்கான கேள்வியை எழுப்புகிறவர் களும் உண்டு. இதற்கு அம்பேத்கரே லாகூர் உரையில் பதில் அளிப்பது போல் பேசியிருக்கிறார்: "புரோகிதத் தொழில் எல்லோருக்கும் பொதுவான ஒன்று என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். இந்த நடவடிக்கை, பார்ப்பனியத்தை ஒழிக்கவும், பார்ப்பனியத்தின் மறு வடிவமான ஜாதியை ஒழிக்கவும் துணை புரியும். இந்து மதத்தை நாசபப்படுத்துகிற கொடிய நஞ்சு பார்ப்பனியமே" என்பதே அம்பேத்கர் தந்த பதிலாகும்.

...............

1929ஆம் ஆண்டிலிருந்தே பெரியார்-அம்பேத்கர் கொள்கை உறவு தொடங்கி விட்டாலும் 10 ஆண்டுகள் கழித்து 1940இல் தான் அவர்களுக்கிடையிலான முதல் சந்திப்பு நடந்தது. இது இரண்டாம் உலகப் போர் தொடங்கிய காலம். அதைப் பயன்படுத்தி பிரிட்டிஷாரிட மிருந்து முழு அரசியல் அதிகாரத்தையும் தங்கள் வசமாக்க காங்கிரசார் முயற்சித்த நேரத்தில் பம்பாயில் பெரியார்-அம்பேத்கர்-ஜின்னா மூவரும் சந்தித்து காங்கிரசார் சூழ்ச்சியையும் பிரிட்டிஷாரையும் விமர்சித்து கூட்டு அறிக்கை

**கீதையைப் பற்றிப் பேசும்போது, ஒரு பைத்தியக்காரனின் உளறல் என்றே பேசினார். அப்போது சி.பி. இராமசாமி அய்யர் போன்றவர்கள் ஒரு கவுன்சில் மெம்பராக (வைஸ்ராய் கவுன்சில்) இருக்கிற அம்பேத்கர், பேசுவது என்றால் அக்ரமம் என்றெல்லாம் கூச்சல் போட்டார்கள்.**

ஒன்றை வெளியிட்டனர். அதன் தமிழாக்கம் 'குடிஅரசு' ஏட்டில் வெளியிடப்பட்டது (29.1.1940). 1940, ஜனவரி 8ஆம் தேதி மும்பை 'தாராவி' பகுதியில் தமிழர் அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்த பொதுக் கூட்டத்துக்கு அம்பேத்கர் தலைமை தாங்கினார். அதில் பெரியார் உரையாற்றினார். 1927இல் அம்பேத்கர், 'மகத்' பொதுக் குளத்தில் 'தீண்டப்படாத' மக்களைத் திரட்டி தண்ணீர் எடுக்கும் போராட்டத்தை நடத்தியபோது, 1925இல் பெரியார் வைக்கத்தில் நடத்திய சத்தியாகிரகம் தான் மகத் போராட்டத்துக்கு உந்து சக்தியாக விளங்கியது என்று, அவரால் நடத்தப்பட்ட "ஊமையர்களின் குரல்" பத்திரிகையின் தலையங்கத்தில் பதிவு செய்ததாக அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய தனஞ்செய்கீர் குறிப்பிடுகிறார். வைசிராயின் (பிரிட்டிஷ் நிர்வாக அதிகாரி) நிர்வாகக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, சென்னைக்கு வருகை தந்த அம்பேத்கர், பெரியாரை சந்தித்தார். பெரியார் கேட்கும் திராவிட நாட்டில் மகாராஷ்டிரத்தையும் வேறு சில மாகாணங்களையும் சேர்த்துக் கொள்ளும்படி அம்பேத்கர் கூறியதாக 'குடிஅரசு' தலையங்கம் குறிப்பிடுகிறது (குடிஅரசு 30.4.1944). பெரியார் கேட்ட திராவிட நாட்டுக்கு அடிப்படை அடையாளமற்ற சமூகப் பார்வை என்ற புரிதல் அம்பேத்கருக்கு இருந்தது என்பதை இது உணர்த்துகிறது.

வேலூர் நகராட்சி மன்றத்தில் 28.10.1956 அன்று அம்பேத்கர் படத்தைத் திறந்த வைத்து பெரியார் நிகழ்த்திய உரையில் ('விடுதலை' 7.12.1956) அம்பேத்கர் பற்றிய சில முக்கிய நிகழ்வுகளை பதிவு செய்தார். "நாம் இராமாயணத்தைப் பற்றி வாயால் பேசிக் கொண்டிருக்கும்போதே, அதாவது 1932லேயே அவர் இராமாயணத்தைக் கொளுத்தினார். அந்த மாநாட்டுக்கு சிவராஜ்தான் தலைமை தாங்கினார். அவர் ஒரு தடவை சென்னைக்கு வந்திருந்தபோது (1944) கீதையைப் பற்றிப் பேசும்போது, ஒரு பைத்தியக்காரனின் உளறல் என்றே பேசினார். அப்போது சி.பி. இராமசாமி அய்யர் போன்றவர்கள் இதென்ன அக்ரமம்; வெறும் அம்பேத்கர் பேசியிருந்தால்கூடக் கவலையில்லை. ஒரு கவுன்சில் மெம்பராக (வைஸ்ராய் கவுன்சில்) இருக்கிற அம்பேத்கர், அதுவும் சென்னையில் வந்து கீதை பைத்தியக்காரனின் உளறல் என்று பேசுவது என்றால் அக்ரமம் என்றெல்லாம் கூச்சல் போட்டார்கள். நான் 1930இல் ஈரோட்டில் நடந்த சீர்திருத்த மாநாட்டுக்கு அம்பேத்கரை அழைத்தேன். அந்த மாநாட்டுக்கு ஆர்.கே. சண்முகம் செட்டியார் வரவேற்புரை அளித்தார். என்ன காரணத்தாலோ அம்பேத்கர் வரவில்லை. ..... நாங்கள் உலக புத்தர் மாநாட்டுக்குச் சென்றபோது அவரை பர்மாவில் சந்தித்தேன். புத்தர் மாநாட்டில் நான் பேசுவதாக 'ப்ரோகிராமில்' (நிகழ்ச்சி நிரல்) போட்டிருந்தார்கள். ஆனால் எனக்குச் சொல்லவில்லை. நான் போனேன். பிறகு என்னமோ வேறொருவரை பேசச் சொல்லி விட்டார்கள். அப்போது அம்பேத்கர் என்னிடம், "இன்றைக்கு கையெழுத்துப் போடு புத்த மதத்தில் சேர்ந்து விடுவோம் என்றார்" என்ற கருத்துகளைப் பதிவு செய்தார், பெரியார்.

அம்பேத்கரிடமிருந்து பெரியார் மாறுபட்ட புள்ளிகளும் உண்டு. அரசியல் வரைவுக் குழுவில் பிற்படுத்தப்பட்டோர் பிரதிநிதித்துவம் இல்லாதது; பூனா ஒப்பந்தத்தை அம்பேத்கர் ஏற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டது; காஷ்மீர் பிரச்சினையில் அம்பேத்கரின் கருத்து போன்றவற்றில் மாறுபாடுகள் இருந்தது. சுதந்திர இந்தியாவின் சட்ட அமைச்சராக அம்பேத்கர் இருந்தபோதுதான் அரசியல் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களில் முதன்மையான திருத்தமாக பிற்படுத்தப்பட்டோர் என்பதற்கு சமூகக் கல்வி ரீதியாக பிற்படுத்தப் பட்டோர் என்ற வரையறை உருவாக்கப்பட்டது. 'பொருளாதாரத்தை' ஒரு அளவுகோலாக சேர்க்க வேண்டும் என்ற கருத்தை அம்பேத்கரும் நேருவும் ஏற்கவில்லை. பிற்படுத்தப்பட்டோர் என்பவர்களுக்கான பட்டியலைத் தயாரிப்பதற்கு அவர்களுக்கான மக்கள் தொகை விவரங்கள் அரசிடம் இல்லாத நிலையில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் ஒன்றை உருவாக்க அரசியல் சட்டத்தில் 340ஆவது பிரிவை உருவாக்கியவர் புரட்சியாளர் அம்பேத்கர். அதனால்தான் மண்டல் ஆணையமே நியமிக்க முடிந்தது. பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசு

*பதவிகளில் 27 சதவீத இடஒதுக்கீடு வந்ததற்கு வழி திறந்து விட்டதே அம்பேத்கர் தான். இந்து சீர்திருத்த மசோதா ஒன்றை உருவாக்கி, இந்துப் பெண்கள் சொத்துரிமை, குழந்தைகள் தத்தெடுக்கும் உரிமைகளை உருவாக்க நினைத்த அம்பேத்கரின் முயற்சி காங்கிரசில் இருந்த வைதிகப் பார்ப்பனர்களாலும் சங்பரிவாரங் களாலும் முறியடிக்கப்பட்ட நிலையில் அம்பேத்கர் சட்ட அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்தார். தனது பதவி விலகலுக்கு அவர் எடுத்து வைத்த காரணங்களில் 'பிற்படுத்தப்பட்டோர் ஆணைய'த்தை உருவாக்காமல் நேரு அரசு காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறது என்பதும் ஒன்றாகும். அம்பேத்கர் தலித் மக்களுக்கான தலைவர் என்ற கருத்து உண்மைக்கு மாறானது என்பதற்கு இவை சான்றுகள்.*

*1947 ஆம் ஆண்டு ஜூலையில் மாயவரத்தில் (இன்றைய மயிலாடுதுறை) நடந்த தாழ்த்தப்பட் டோர் மாநாட்டில் பெரியார் இப்படி பேசினார்.*

*"தோழர்களே, உங்களுக்கு உற்ற தலைவர் அம்பேத்கர் என்றும், அவரால்தான் பஞ்சமர்கள், கடையர்கள், இழிபிறப்புக் கொடுமைகள் நீங்கும் என்றும் நம்பினேன். அதனாலே உங்களுக்குத் தலைவராக ஏற்றுக் கொள்ளும்படி பிரச்சாரம் செய்தேன்.* **நானும் தலைவர் என ஏற்றுக் கொண்டேன்"** *என்றார். ஆம்! பெரியாரால் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் புரட்சி யாளர் அம்பேத்கர். நீதிக் கட்சியை பெரியார் திராவிடர் கழகமாக பெயர் மாற்றி சமுதாய இயக்கம் என்ற பண்பு மாற்றத்தை பெரியார் உருவாக்கியபோது, (1944இல்) அதை விரும்பாத ஒரு சில நீதிக்கட்சித் தலைவர்கள் அப்போது அம்பேத்கரை பேச அழைத்தபோது, 'பெரியார் தான் உங்களுக்கான தலைவர்' என்று அவர் களிடையே இடித்துரைத்தவர் அம்பேத்கர். இரு பெரும் ஆளுமைகளும் தலைமைப் பாத்திரத்தை விட சமூக விடுதலைக்கான தத்துவப் பார்வைக்கே முன்னுரிமை தந்தார்கள் என்பதையே இந்த சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றன.*

கட்டுரைக்கு ஆதாரங்கள் : 'குடிஅரசு', 'ரிவோல்ட்', ஆய்வறிஞர் எஸ்.வி. ராஜதுரை கட்டுரை, அம்பேத்கரின் 'சாதியை ஒழிக்க வழி', 'புரட்சிப் பெரியார் முழக்கம்'.

(அம்பேத்கர் நீலச்சட்டைப் பேரணி மலருக்கு எழுதிய கட்டுரை)

Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29, New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN